கடவுள்துணை.

# தொகைப்பெயர் விளக்கம்.

இஃது.

மதுரைக்கல்விச்சங்கத்துத்தமிழ்த்

தலைவராகியகளத்தூர்

## வேதகிரிமுதலியார்

அவர்களாலியற்றப்பட்டு.

ஸ - கா - நாராயணமுதலியார்

குமாரராகிய

மஹாகனப்பொருந்திய

## முத்துச்சாமிமுதலி

யாரால்,

## எழுமூரில்

தமது முத்தமிழ்ப்பொக்கிஷ அச்சுக்

கூடத்திற்பதிப்பிக்கப்பட்டது.

சௌமிய வருஷம் - சிங்கமீ.

1849

ADIGAL

இஃது

எ - தாண்டவராய

முதலியாரால்

அச்சடுக்கப்பட்டு

பிரசுரஞ்

செய்ய

லாயிற்

று.

தமிழ்ப்புலவர் - புதுவை

# பொன்னுசாமிமுதலியார்

பாடியது.

ஐந்தியன் முதனூற் பொருளினை யுணர்த்தற்
காய்தோர் கருவியா நிகண்டு *
ராங்கடைத்தொகுதிக்கரிலோர் ஓட்பனூ
லமைதரு சொன்முறைபுணர்த்தித் *
தந்திடுகென வேளாண் மரபுதித்துத் - *
தகைநலங் கெழுமிய புனிதன் - *
றிருநிகர்முத்துச்சாமிவேணுகோபத் *
தனுதுறைத் துடுவந்தினிய - *
சிந்தைதழுதக் கோனேயரியார்க்குஞ் *
சிறப்புயர் பயனனிதருவான் *
செயுஉ வதற்கோர்பேர்த் தொகைப்பெயர்
விளக்கு மெனநிறுவியவுறு திறத்தோ *
னெந்தை செஞ்சடிலத்திறையவனகத்தி *
னிரிதராவுழவலன் றமிழி - *
னெல்லை காண்கவிஞனிசைகொளும் வேத *
கிரியெனுமியற்பெயரோனே. *

# தொகையிருப்பு.


| தொகை | பக்கம் | தொகை | பக்கம் |
|---|---|---|---|
| ஒரு தொகை - ௨ | ௧ | ௨௰ | ௱௪௨ |
| ௩ | ௰௭ | ௨௧ | ௱௪௫ |
| ௪ | ௪௧ | ௨௨ | ௱௪௪ |
| ௫ | ௫௫ | ௨௩ம் - ௨௫ம் | ௱௪௫ |
| ௬ | ௭௧ | ௨௭ | ௱௪௭ |
| ௭ | ௭௯ | ௨௮ | ௱௪௮ |
| ௮ | ௮௭ | ௩௰ம் - ௩௧ம் | ௱௪௯ |
| ௯ | ௱௨ | ௩௨ | ௱௫௧ |
| ௰ | ௱௯ | ௩௩ம் - ௩௫ம் | ௱௫௩ |
| ௰௧ | ௱௨௰௧ | ௩௬ம் - ௩௮ம் | ௱௫௫ |
| ௰௨ | ௱௨௰௨ | ௫௰ | ௱௫௭ |
| ௰௩ | ௱௨௰௫ | ௫௬ | ௱௫௯ |
| ௰௪ | ௱௨௰௬ | ௬௰ | ௱௬௰ |
| ௰௫ | ௱௩௰௧ | ௬௩ | ௱௬௧ |
| ௰௬ | ௱௩௰௪ | ௬௪ | ௱௬௪ |
| ௰௭ | ௱௩௭ | ௭௬ | ௱௬௭ |
| ௰௮ | ௱௩௮ | ௱ | ௱௬௯ |

# தொகைப்பெயர்விளக்கத்

## தகராதி.


| தொகை. | |
|---|---|
| அகம் | ௫ |
| அகராதி | ௪ |
| அகவல் | ௯ |
| அகவற்பா | ௪ |
| அகக்கருவி | ௩ |
| அகங்காரம் | ௯ |
| அகத்திணை | ௰௨ |
| அகப்பொருட்டிணை | ௩ |
| அகிற்கூட்டு | ௫ |
| அக்கரவகை | ௨ |
| அக்கினி | ௫ |
| அக்கினிநா | ௭ |
| அக்கினியிடத்துப்பொருள் | ௩ |
| அங்கம் | ௨ - ௪ - ௫ - ௯ - ௮ - ௰ |
| அங்கதண்டம் | ௫ |
| அங்கயோகம் | ௮ |
| அசை | ௨ - ௨ - ௮ |
| அசைச்சீர் | ௪ |
| அசைவு | ௨ |
| அச்சம் | ௨ |
| அடி | ௫ - ௫ - ௰௮ |
| அடிமைபெயர் விளக்கம் | ௰௫ |
| அடியார்கள் | ௩ |
| அடுக்குச்சொல் | ௬ - ௯ |
| அணி | ௨ |
| அணிகலவகை | ௨ |

| தொகை. | |
|---|---|
| அண்டம் | ௨ |
| அதமத்தொழில் | ௯ |
| அதிகாரம் | ௨ |
| அதிகாரிகள் | ௫ |
| அதீதம் | ௨ |
| அத்தியாசலட்சணம் | ௪ |
| அத்துவா | ௯ |
| அபாவம் | ௬ - ௫ |
| அபிமானபுருஷத்திரயம் | ௩ |
| அபாரதம் | ௰ |
| அப்புவின்குணம் | ௪ |
| அப்புவின்கூறுபாடு | ௫ |
| அமிர்தவெழுத்து | ௰௧ |
| அமுதம் | ௨ - ௩ - ௫ |
| அயனம் | ௨ |
| அரண் | ௪ |
| அரசர் | ௩ |
| அரசர்க்குக்குழு | ௫ |
| அரசர்க்குத்துணைவர் | ௮ |
| அரசனமைப்பு | ௯ |
| அரசச்சின்னம் | ௨௧ |
| அரசாட்சி | ௩ |
| அரசியல் | ௯ |
| அருக்கன்கீதி | ௩ |
| அருச்சிக்கும்பத்திரம் | ௰ |
| அருச்சிக்குமலர் | ௰ |
| அருபப்பொருள் | ௨௰ |

| | தொகை. |
|---|---|
| அலங்காரம | ௫௫ |
| அல்வழிப்புணர்ச்சி | ௰௪ |
| அவதானம் | ௮-௰௬ |
| அவத்தை | ௩ |
| அழியாப்பொருள் | ௨ |
| அளபெடை | ௨-௮ |
| அளவு | ௪ |
| அளவை | ௮ |
| அறம் | ௨-௩-௩-௨ |
| அறத்துறுப்பு | ௮ |
| அறிவிப்பு | ௨ |
| அறிவு | ௨ |
| அறிவுள்ளவுயிர்கள் | ௬ |
| அறுபத்துமூவர். | |
| அன்பு | ௨ |
| அனுபந்தம் | ௪ |
| ஆகமம | ௬ |
| ஆகாரம் | ௨ |
| ஆகுபெயர் | ௨௰ |
| ஆக்கினை | ௨ |
| ஆசனம் | ௬ |
| ஆசாரம் | ௨ |
| ஆசிரியர் | ௩ |
| ஆசு | ௨ |
| ஆசை | ௨-௩ |
| ஆச்சிரமம | ௪ |
| ஆடை | ௨ |
| ஆட்சி | ௨ |
| ஆணி | ௨ |
| ஆணை | ௨ |
| ஆண்மை | ௨ |

| | தொகை. |
|---|---|
| ஆண்பருவம் | ௫ |
| ஆண்பாற்மூவர் | ௩ |
| ஆண்விளையாடல் | ௮ |
| ஆதியம் | ௨ |
| ஆதாரம் | ௬ |
| ஆதீனம் | ௨ |
| ஆநந்தம் | ௮ |
| ஆயுதம் | ௫ |
| ஆய்தம் | ௨ |
| ஆரியத்துள்வேம்புமை | ௮ |
| ஆலயம் | ௨ |
| ஆவி | ௨ |
| ஆவேசம் | ௨ |
| ஆழ்வாராதிகள் | ௰௨ |
| ஆன்மதத்துவம | ௨௪ |
| ஆன்மா | ௨ |
| ஆன்மாவுகை | ௩ |
| இகழ்ச்சி | ௨ |
| இசை | ௨-௩-௭ |
| இசைத்துறை | ௫ |
| இசைத்தொழில் | ௩ |
| இடம் | ௩-௩-௩ |
| இடுக்கம் | ௨ |
| இடைச்சொல் | ௮ |
| இடைநிலை | ௨ |
| இணக்கம் | ௨ |
| இதிகாசம் | ௨ |
| இந்திரியவகை | ௩ |
| இயல் | ௩ |
| இயல்புவழக்கு | ௩ |
| இரசம் | ௨ |

தொகை.


இரசவாதம் — ௨
இரணபேரிகை — ௨
இரதம் — ௪-௯
இரத்தல் — ௨
இரத்தினம் — ௫
இரப்பு — ௩
இராகம் — ௮-௩௨
இராசதந்தகுதி — ௪
இராசி — ௩-௰௨
இருதுகாலம் — ௯
இருமை — ௨
இருள் — ௨
இரேகை — ௫
இலக்கத்தொகை — ௨
இலக்குமி — ௮
இலாகிரி — ௫
இலிங்கம் — ௩-௫
இழிச்சொல் — ௪
இழிதிணை — ௫
இழிதிணைப்பால் — ௨
இளமைப்பெயர் — ௯
இராத்தல் — ௨
இறந்தகாலவிடைநிலை — ௪
இறந்துயிர்வராதவர் — ௫
இன்பம் — ௨-௩
ஈகை — ௨
ஈச்சுரன் — ௩
ஈச்சுரன்குணம் — ௮
ஈச்சுரன்பிரபுத்துவ
[சாமர்த்தியகுணம் — ௩
ஈச்சுரன்முகம் — ௫


தொகை.


ஈச்சுரன்முக்கியகுணம் — ௯
ஈச்சுரருக்கில்லாமை — ௨
ஈச்சுரருக்குள்ளாமை — ௨
ஈச்சுரர் ஆடை — ௨
ஈச்சுரர் சுபாவம் — ௨
ஈச்சுரர் செய்கை — ௨
ஈச்சுரர் தன்மை — ௨
ஈச்சுரர் துலாங்கம் — ௨
ஈச்சுரர் தேவியர் — ௨
ஈச்சுரர் பதவி — ௨
ஈச்சுரர் முடி — ௨
ஈச்சுரர் வல்லபம் — ௨
ஈச்சுரர் வில் — ௨
ஈடு — ௯
ஈயம் — ௨
ஈறு — ௨-௯
உகரம் — ௨
உடன்படல் — ௨
உட்காரணகாரியம் — ௬
உட்சமயம் — ௯
உட்டணப்பொருள் — ௨
உட்பகை — ௯
உண்டி — ௨-௯
உண்ணிலைக்கருவிகள் — ௩-௯
உதயம் — ௨
உதவி — ௨
உதாரம் — ௨
உத்திரத்திரயம் — ௩
உத்திரப்பொருளைச் சேர்ந்த அதிகார சமைய விசேடம். — ௩

| தொகை. | |
|---|---|
| உத்திரியின்றன்மை | உ |
| உத்திரிவகை | சா |
| உத்தியார் | உ |
| உபகிரமம் | கூ |
| உபசாரம் | யஉ - யசா |
| உபதேசமுறை | ங |
| உபதிட்டம் | கூஉ |
| உபநிதி | ங |
| உபபுராணம் | யஅ |
| உபயராசி | ச |
| உபவாயுபஞ்சகம் | ரு |
| உபாதி | ங |
| உபாயம் | ச |
| உப்பு | ரு |
| உயர்திணை | ங |
| உயிரிடத்துப்பொருள் | ங |
| உயிருறுத்துமுயிரற்றவர் | ரு |
| உயிர்த்துணைவர் | உ |
| உயிர்ப்புவகை | உ |
| உயிர்ப்பொருள்வகை | ங |
| உயிர்வருக்கம் | உ |
| உயிர்வேதனை | யஉ |
| உரிச்சொல் | ங |
| உரிப்பொருள் | ய |
| உருத்திரர் | யங |
| உருவகம் | யரு |
| உரை | ச |
| உரையிலக்கணம் | ரு |
| உலகம் | ங - யச |
| உலோவர்தொழிலுள்ளவை | உ |
| உலோகம் | ரு - எ |

| தொகை. | |
|---|---|
| உலோகப்ஸ்பம் | அ |
| உவமவலங்காரம் | உரு |
| உவமையணி | ங |
| உவமைச்சொல் | ஙச |
| உவர்ப்பு | சா |
| உள்ளம் | உ |
| உழவுக்குரித்தொழி[லுள்ளவை | உ |
| உன்னதவஸ்து | உ |
| ஊக்கம் | உ |
| ஊடல்வகை | உ |
| ஊட்டப்பொருள் | உ |
| ஊமையர் | உ |
| ஊறு | அ |
| ஊறுபாடு | ச |
| ஊழ்து | உ |
| ஊனம் | உ |
| எச்சம் | உ - அ - ய |
| எட்டுகணி | உ |
| எதிர்காலவிடைநிலை | உ |
| எதிர்மறைவிகுதி | ங |
| எந்திரம் | உ |
| எல்லை | உ |
| எழுகை | உ |
| எழுத்திலக்கணவகை | அ |
| எழுத்தினம் | உ |
| எழுத்து | உ |
| எழுத்துக்கணம் | ங |
| எழுத்துத்தானம் | ரு |
| எழுத்துவகை | உ - ங |
| எழுத்துவிதம | கூ |

| | தொகை. | | தொகை. |
|---|---|---|---|
| எழுவாய்க்குட்டியணிலை | க | கரணம் | ச-யங |
| ஏகாரம் | அ | கரந்துறைகோள் | அ |
| ஏசல் | உ | கருடப்பட்சை | ங |
| ஏது | ங | கருத்தா | உ |
| ஏதுப்பொருள் | உ | கருத்தாக்கள் | ரு |
| ஏஷ்டகோசாங்கள் | சா | கருத்தாகாரகம் | சா |
| ஏஷ்டவிதலிங்கம் | சா | கருப்பொருள் | யச |
| ஏஷ்டாவவிகாரம் | சா | கருமகாரகம் | எ |
| ஏகாந்தனை | ங | கருமம் | அ |
| ஐசுவரியம் | அ | கருமேந்திரியம் | ரு |
| ஐம்புலனுணர்ச்சியி னிறப்பன | ரு | கருமேந்திரியத்தின் [தொழில் | ரு |
| ஒட்டுப்பிணி | ரு | கருமேந்திரியகாரியம் | ரு |
| ஒத்தாழிசைக்கலிப்பா | ங | கருவி | ங |
| ஒப்புமைக்கூட்டம் | உ | கருவிநூல் | உ |
| ஓசை | உ-ங-ச | கருவளமைப்பு | சா |
| ஓந்தி | உ | கலகம் | ச |
| ஓலை | உ | கலசம் | ச |
| கடல் | எ | கலைவயணி | ச |
| கடவுள் | க | கலாதிகாரியம் | ய |
| கடுகம் | ங | கலி | ங-யசா |
| கடைப்பிடு தானம் | எ | கலிப்பா | ங |
| கட்டம் | அ | கலிப்பாவகை | ய |
| கணக்குவகை | ச | கலை | ங-ங-ய |
| கணம் | ங-ச-அ-ய அ | கலைஞானம் | சாச |
| கணிதம் | அ | கல்யாணம் | ரு |
| கணை | ச | கவி | ச |
| கதி | சா-ரு | களவிற்பிரிவு | உ |
| கதிபெயர்ம்புகை | ங | களவிற்புணர்ச்சிக்குறி | உ |
| கந்தம் | உ | கற்பிதம் | உ |
| கம்பிதம் | உ | கற்பியல் | உ |

| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| கம்பீலக்கணம் | ௫ | குரவர் | ௫ |
| கம்பிப்புரிவு | ௬ | குருகுலாதிபர் | ௫ |
| கலி | ௧ | குருவணக்கம் | ௪ |
| கன்மக்கிரியம் | ௧-௧ | குருவிற்குக்கொடுக்கும் [பொருள் | ௧ |
| கன்மபலம் | ௧ | குருவிலட்சணம் | ௬ |
| கன்மம் | ௧ | குலம் | ௪ |
| கன்னிகை | ௫ | குறள்வெண்பாவினம் | ௨ |
| காட்சி | ௬-௮ | குற்றம் | ௧-௮ |
| காட்சியசாட்சி | ௨ | குன்மம் | ௮ |
| காப்பியம் | ௫ | கூத்து | ௨ |
| காமத்தோரீக்குப் [பகைப்பொருள் | ௰ | கேள்வி | ௪ |
| காவல் | ௨ | கைக்கிளைத்திணைநிகழ்ச்சி | ௬ |
| காவியம் | ௨ | கைக்கிளைப்பெருந்திணை | ௰ |
| காதலர் | ௧ | கைக்கோள் | ௨ |
| காயம் | ௧-௫ | கைத்தொழில் | ௫ |
| காரணத்திரயம் | ௧ | கொச்சகக்கலிப்பா | ௫ |
| காரணம் | ௧-௧ | கொடுந்தமிழ்நாடு | ௰௨ |
| காரண வசுத்திணை | ௪ | கொடை | ௬ |
| காலம் | ௧ | கொன்னைச்சொல் | ௪ |
| காம்விடத்துப்பொருள் | ௧ | கோசம் | ௫ |
| கிரகசேத்திரசதுட்டயம் | ௪ | கோணம் | ௭ |
| கிரகபலக்குறைசதுட் [டயம் | ௪ | கோலம் | ௨-௫ |
| கிரகபலசதுட்டயம் | ௪ | கெண்டம் | ௫ |
| கிரகபலம் | ௫ | கௌரவர்குலத்தரசர் | ௧ |
| கிரகம் | ௯ | கௌரவர்குலம் | ௧ |
| கிரீடை | ௨ | கௌசியம் | ௫ |
| கிழமை | ௨ | சக்கிரவர்த்திகள் | ௬ |
| குடை | ௧-௧ | சத்தக்கிரியம் | ௧ |
| குணமி | ௧-௪ | சஞ்சம்பத்திரயம் | ௧ |
| | | சங்கம் | ௧ |

தொகை.


சங்கிலி - ௩
சட்வர்க்கு - ௬
சதுரங்கவரட்டம் - ௪
சத்தக்கருவி - ௫
சத்தரிசிகள் - ௭
சத்தி - ௩-௫
சத்து - ௩
சதகாதியர் - ௪
சந்நிதானம - ௨-௪
சபை - ௪-௪
சபையின்தசாங்கம் - ௰
சமயம் - ௬
சமயபோதம் - ௬௪
சமாதிசட்கம் - ௬
சம்சியத்திரயம் - ௩
சம்பாஷணை ௨
சயனம் - ௫
சரளம - ௪
சராசி - - ௪
சரவட்சணம் - ௨
சரிதைக்கருத்தர் - ௪
சரீரம் - ௪
சலத்திடத்துப்பொருள் - ௩
சவுரியம - ௨
சாதனத்திரயம - ௩
சாதனம - ௨-௪
சாதி - - ௨
சாத்திரம் - ௩-௬
சாந்தி - ௩
சாந்துவகை - ௪
சாமானியம - ௨
சாரம் - ௯


தொகை.


சாரியை - ௨௨
சார்பெழுத்து - ௰
சித்தர் - ௧௧
சித்தி - ௮-௮
சித்திரக்கவி - ௨௨
சித்து - ௪
சிரஞ்சீவியர் - ௭
சிருட்டி - ௨
சிலேடை - ௨-௭
சிவதத்துவம - ௫
சிவபூசையியல்பு - ௪
சிவபேதம் - ௯
சிவமூர்த்தம் - ௨௫-௬௪
சிவன்றிருமேனி - ௩
சிவாகமம் - ௨௮
சிறப்பு - ௨
சிற்பத்தொழிற்குறிப்பு - ௰
சிற்பநூல் - ௩௨
சினைப்பெயர் - ௪
சினைமுதல் - ௪
சீடலட்சணம் - ௰௫
சீர் - ௰௨
சீவதேகம - ௩
சீவாவத்தை - ௩
சுகுணவிக்கினம - ௰௧
சுகுணவிருத்தி - ௭
சுடர் - ௩-௩-௩
சுட்டு - ௨
சுட்டெழுத்து ௩
சுத்ததத்துவகாரியம - ௰
சுப்பிரமணியர்மூர்த்த }
சாரம் - ௭-௭. [ம்-௰௧ }

தொகை.


சுவை - ௨-௬
சுவையணி - ௮
சூழி - ௩
சூக்குமசிரவணுதி ௩
சூதகம - ௫
சூரியர் - ௰௨
சூரியர்சந்திரர்முதலி [யவீதி - ௩
செங்கோன்மை ௭
செய்கை - ௨
செய்யுட்குரியவழகு - ௰
செய்யுட்குற்றம் - ௰
செய்யுணெறி - ௨
செய்யுள் - ௨ ௨
செய்யுளுறுப்பு - ௮
செய்யுள்வகை ௪
செய்யுள்விகாரம் - ௬
செருக்கு - ௮
செல்வம - ௩
சேர்வையணி ௩
சேனைத்தொகை ௰
சைவஞானம - ௮
சைவத்தோர்முத்திரை - ௫
சைவம - ௰௯
சொல் - ௨-௩-௪
சொல்லணி - ௨
சொல்லிலக்கணம் ௩
சொற்றெரிநிலை - ௨
சோகம் - ௩
ஞானதரிசனம் - ௩
ஞானம் - ௨-௩-௩-௪
ஞானியர் - ௨


தொகை.


ஞானேந்திரியகாரியம - ௰
ஞானேந்திரியத்தின் [தொழில் - ௫
ஞானேந்திரியம ௫
தகுதிவழக்கு - ௩
தத்தம் - ௩
தத்துவம் ௩-௯
தநுஷ்டா பஞ்சக நட்சத் [திரங்கள் - ௫
தந்தையர் - ௫
தந்திரம் - ௫
தபோகன்மசதுட்டயம - ௪
தமிழியல் - ௨
தமிழெல்லைநாடு ௪
தமிழ் - ௨-௩
தமிழ்நாடு - ௰௩
தயாவிருத்தி - ௮-௰௪
தரம - ௩
தரு - - ௫
தருக்கவகை ௨
தருமநூல் - ௰௮
தவம் - ௩
தளை - ௭-௰௬
தனம் - - ௮
தாதுமந்திரயம ௩
தாது - ௭
தாதுக்கோள் - ௩
தாபத்திரயம - ௩
தாமரை - ௩
தாயர் - ௫
தாரணை - ௯
தாரதம்மியபக்குவம் ௫

## தொகை.


தாழிகை - ௫
தாழ்வு - - ௩
தாளம் - ௩-௫-௭-௯
தானத்திரயம் ௩
தானம ௩
தானியம் ௯
தானை - - ௬
திக்கிடத்துப்பொருள் - ௩
திக்கு - ௮
திக்குப்பாலகர் - ௮
திக்குப்பாலகர்தேவி ௮
திக்குப்பாலகர்பதி ௮
திக்குப்பாலகர்வாகனம் - ௮
திக்குப்பாலகராயுதம் - ௮
திக்குயானைகள் - ௮
திணை - ௨-௨-௫
திதி - ௰௫
திதிபுண்ணியகாலம் ௰௫
தியானம் - ௩
திராவிடம் - ௫
திரவியம் - ௫-௯
திரிசிராதி - ௩
திரிபு - - ௩
திரிபடி - - ௩
திரிபாங்கம் - ௩
திருமாலாயுதம் ௫
திருமாலவதாரம் - ௰ - ௰௫
திருப்பதி - ௱௮
திருவிளையாடல் - ௬௪
தினை - ௨-௪-௫
தீ - - ௩
தீக்குணம் - ௰

## தொகை.

தீட்சை - ௨-௩
தீபம் - ௩
தீர்க்கம் - ௫
தீவு - - ௭
துவர் - ௰
தூலசிரவணத்தி - - ௩
தூது - ௰
தேகசுவாத்தியபரிட்சை ௮
தேசம் - ௫௬
தேயுவின்குணம் ௩
தேவகன்னிகையர் ௪
தேவர்களியல்பு - ௩
தேவர்வகை ௧௩
தேவர் - - ௪
தேவி - - ௩
தேள் - ௩
தேன் - ௩
தொகைநிலை - ௬
தொடர் - ௨
தொடர்நிலை - ௨
தொடர்மொழி - - ௩
தொடை - ௫-௪௮
தொழில் ௧-௬-௬
தோற்றம் - ௨-௪
நகர்படுதிரவியம் - ௫
நகை - - ௪
நஞ்செழுத்து - ௰௩
நட்சத்திரக்குறைவு ௧
நட்சத்திரம் ௨௭
நதி - ௭
நாகம் - - ௭
நாகவட்டம் - ௭

| தொகை. | | தொகை. | |
|---|---|---|---|
| நற்குணம் | ௰ | பஞ்சபட்சி | ௫ |
| நரகம் | ௧-௮ | பஞ்சபாணம் | ௫ |
| நாடகம் | ௰ | பஞ்சபாறுவத்தை | ௫ |
| நாடி | ௧-௧-௰ | பஞ்சபிரமம் | ௫ |
| நாடு | ௧ | பஞ்சமாயெக்கியம் | ௫ |
| நாடுபடுதிரவியம் | ௫ | பஞ்சபிராணன் | ௫ |
| நாட்டியம் | ௬ | பஞ்சபுலன்களின்காரியம் | ௰ |
| நாட்டமைதி | ௯ | பஞ்சபூதம் | ௫ |
| நாட்டுக்குற்றம் | ௭-௮ | பஞ்சபூதவியல்பு | ௫௰ |
| நால்வர் | ௪ | பஞ்சமுத்திரை | ௫ |
| நாவி | ௫ | பஞ்சமூலம் | ௫ |
| நாற்றிசை | ௪ | பஞ்சவில்வம் | ௫ |
| ஸ்நானம் | ௮ | பஞ்சாங்கம் | ௨ |
| நிகழ்காலவினைநிலை | ௧ | பஞ்சார்க்கம் | ௫ |
| நிதி | ௨ | பஞ்சாஸ்தர் | ௫ |
| நித்தியகர்மசஷட்டயம் | ௪ | பஞ்சாஸ்திகாயம் | ௫ |
| நிமிஷ | ௧ | படைத்துணை | ௯ |
| நியமம் | ௫ | படையுறுப்பு | ௯ |
| நியாதம் | ௧ | படைவகுப்பு | ௪ |
| நிலை | ௪ | பட்சம் | ௧-௬ |
| நூல் | ௧-௩ | பண்விடை | ௧ |
| நூல்கேட்கும்வகை | ௬ | பல்லா | ௧-௪ |
| நூற்சம்பந்தம் | ௪ | பல்பு | ௫ |
| நோக்கம் | ௨ | பதம் | ௨-௫ |
| பகுதி | ௨ | பதவி | ௨-௧-௪ |
| பகுதிப்பொருள் | ௯ | பதார்த்தம் | ௭ |
| பகுபதம் | ௬ | பதி | ௧ |
| பகுபதவுறுப்பு | ௯ | பதிவிரதைகுணம் | ௧ |
| பகை | ௧ | பதிவிரதையிலக்கணம் | ௧ |
| பக்கம் | ௧-௪ | பந்தத்திரயம் | ௧ |
| பக்குவர் | ௧ | பரதவுறுப்பு | ௧ |
| பஞ்சநீராஞ்சனம் | ௫ | | |

| | தொகை. | | தொகை. |
|---|---|---|---|
| பரதாங்கபேதம் | ௨௰ | பித்தக்குணம் | ௫ |
| பரிசம் | ௮ | பிரணவவெழுத்து | ௩ |
| பரிச்சேதம் | ௩ | பிரத்தியட்சம் | ௩ |
| பரிட்சை | ௪ | பிரபந்தம் | ௯ |
| பலிவகை | ௩ | பிரபஞ்சம் | ௨ |
| பலே | ௩ | பிராணாயாமம் | ௩-௱௮ |
| பவளக்குணம் | ௩ | பிரார்த்தம் | ௩ |
| பவளக்குற்றம் | ௩ | பிருதிவியின்குணம் | ௫ |
| பறை | ௩ | பிருதிவியின்கூறு | ௫ |
| பா | ௩ | பிறப்பு | ௩-௭ |
| பாகம் | ௨ | புகழ் | ௩ |
| பாசல் | ௩-௬ | புடம் | ௩ |
| பாசம் | ௩ | புணர்ச்சி | ௨-௨-௨ |
| பாடம் | ௩ | புண்ணியம் | ௩-௭-௯ |
| பாடை | ௨-௰௮ | புண்ணியதோற்றம் | ௪ |
| பாடுத்திறம் | ௩ | புத்தி | ௩ |
| பாதம் | ௪ | புத்திரர் | ௩ |
| பாதகம் | ௫-௭ | புரம் | ௩ |
| பாதுகை | ௫ | புராணம் | ௰௮ |
| பாயிரங்கூறுவர் | ௪ | புராணவகுப்பு | ௫ |
| பாயிரம் | ௨ | புரி | ௭ |
| பாரதபர்வங்கள் | ௰௮ | புலமை | ௫ |
| பார்வை | ௩-௩ | புலமையோர் | ௪ |
| பாலை | ௭ | புலவர்தொழில் | ௩ |
| பால் | ௩-௩-௫-௫ | புலன் | ௫ |
| பாவபுண்ணியவழக்கம் | ௩ | புலி | ௫ |
| பாவனை | ௩ | புளி | ௩ |
| பாவியல்பு | ௪ | புறச்சமயம் | ௪ |
| பாவினம் | ௩-௫ | புறத்திணை | ௩ |
| பாஷாணம் | ௫ | புறநிலையகத்திணை | ௩ |
| பிணி | ௩ | புறப்புறவிலக்கணம் | ௩ |

| தொகை. | | தொகை. | |
|---|---|---|---|
| புறப்பொருட்டிணை | ௭ | பொன்னுடைக்கட்பொருள் | ௫ |
| பூ | ௬ | பொன்வகை | ௬ |
| பூசை | ௫ | போகசந்தட்டயம் | ௪ |
| பூதம் | ௫-௫ | போகபூமி | ௬ |
| பூதாதி | ௩ | போகம் | ௨-௮ |
| பூரத்திரயம் | ௩ | போதப்பிரகாரம் | ௩ |
| பெண்கள்சாதிபேதம் | ௫ | போதம் | ௩ |
| பெண்பருவம் | ௫-௭ | போலி | ௩ |
| பெண்பால் | ௬ | மகளிரான்மகருமம் | ௰ |
| பெண்வகை | ௬ | மகாராசாக்கள் | ௰௬ |
| பெண்விளையாடல் | ௮ | மகிமை | ௩ |
| பெயர் | ௨-௬ | மங்கலச்சொல் | ௨௨ |
| பெயரெச்சம் | ௩ | மங்கலம் | ௮ |
| பெயர்ச்சொல் | ௨-௩-௩ | மங்களாசரணை | ௩ |
| பெயர்ப்பகுபதம் | ௯ | மஞ்சள் | ௩ |
| பெயர்விகுதி | ௰௭ | மடக்கணி | ௭ |
| பெரியோரியல்பு | ௭ | மடநல்லார்குணம் | ௬ |
| பேதம் | ௩ | மணம் | ௮ |
| பேர் | ௭ | மணி | ௩-௩-௯ |
| பேறு | ௰௯ | மணிக்குளிகை | ௩ |
| பொசிப்பு | ௩ | மண்டலம் | ௩-௭ |
| பொதுப்பெயர் | ௨ | மதம் | ௩ |
| பொருட்டொடர் [நிலைச்செய்யுள் | ௨ | மதுரை | ௩-௯ |
| | | மந்திரம் | ௩ |
| பொருளணி | [illegible] | மந்திரமுடிவு | ௭ |
| பொருள் | ௨-௩ | மயக்கம் | ௨ |
| பொறி | ௧-௫ | மரகதகுணம் | ௫ |
| பொழுது | ௨-௯ | மரணம் | ௨ |
| பொன் | ௧ | மரபு | ௨ |
| பொன்னிறம் | ௬ | மருத்துக்கள் | ௭ |
| பொன்னிலக்கணம் | ௫ | மருதம் | [illegible] |

| | தொகை. |
|---|---|
| மருந்துவருக்கம | ௭ |
| மலம | ௩-௩ |
| மலை | ௭ |
| மலைபடுதிரவியம | ௫ |
| மல்லிகை | ௩ |
| மறை | ௩ |
| மனதிடத்துப்பொருள் | ௩ |
| மனுக்கள் | ௰௪ |
| மாணுக்கர் | ௩ |
| மாணிக்கம | ௩ |
| மாணிக்கக்குற்றம | ௫ |
| மாதம | ௰௨ |
| மாதாக்கள் | ௭ |
| மாயவித்தை | ௫ |
| மாயை | ௫ |
| மாயைதருமம | ௨ |
| மாயைலட்சணம | ௫ |
| மாரணம | ௩ |
| மார்க்கக்கோட்பாடு | ௩ |
| மார்க்கம | ௨ |
| மாலை | ௩ |
| மானுடகுணம | ௩ |
| முகம | ௩-௰௪ |
| முடிபு | ௨ |
| முதற்பொருள் | ௨ |
| முத்தி | ௨ |
| முத்திக்குணம | ௩ |
| முத்திவிக்கினம | ௩ |
| முத்துச்சனிப்பு | ௨௰ |
| முமமை | ௩ |
| முரசு | ௩-௫ |

| | தொகை. |
|---|---|
| முனிவர் | ௭-௩௯ |
| முனைவாமம | ௯ |
| முன்னிலைப்பெயர் | ௫ |
| மூடம | ௩ |
| மூர்த்தம | ௮ |
| மூர்த்திகள் | ௩ |
| மூலம | ௫-௮-௰-௰௮ |
| மூவர்வாகனம | ௩ |
| மெய்ப்பாடு | ௮ |
| மேகம் | ௭ |
| மை | ௩ |
| மொழி | ௨-௩-௪ |
| மொழிக்குறை | ௩ |
| மொழிநிலை | ௩ |
| மொழியீறு | ௨ |
| யாகம் | ௫-௨௯ |
| யாகத்தம்பம் | ௫ |
| யாக்கைக்குணம் | ௫ |
| யாக்கைக்குற்றம | ௫-௰௮ |
| யாப்புறுப்பு | ௯ |
| யாழ் | ௪ |
| யாழ்வகை | ௪ |
| யானை | ௧ |
| யுகம | ௪ |
| யுத்தவகை | ௨ |
| யோகம | ௫-௫-௨௭ |
| யோகமுயற்சி | ௮ |
| வசியம் | ௫ |
| வசுக்கள் | ௮ |
| வசை | ௨ |
| வடசொல் | ௨ |

தொகை.


வடிவெழுத்து - ௨
வட்டி - ௯
வலிகர்குணம் ௮
வல்லினவகை - ௪
வன்னம் - ௫-௬
வயிரவர் - ௮
வருக்கம் - ௮
வருணம் - ௪
வருடம் - ௯௰
வரைவு - ௨
வழக்கம் - ௨
வழக்கு - ௨
வழி - - ௪
வழு - ௭
வள்ளல் - ௨௧
வளப்பு - ௮
வாக்கு - ௪
வாக்குக்குற்றம் ௫
வாசகம் - ௫
வாசஞ்திரயம் ௩
வாதம் - - ௫
வாதிக்கருப்பொருள் ௰௬
வாயு - - ௰
வாயுவின்கூறு ௫
வாரம் - ௭
வாழ்த்து - ௨-௨
வானோர்கணம் ௯
வானோர்வரம் - ௪-௯
விகர்ப்பம் ௩
விகாரம் - ௩-௪-௬


தொகை.


விகுதிவகை - ௬
விக்கிரகவகை ௯
விடை - ௨
விண்ணிடத்துப் [பொருள் - ௩
வித்தியாதத்துவம் - ௭
வித்தியேச்சுரர் ௮
வித்தைகள் - ௰௪
விதாயகர்முகூர்த்தம் ௰௬
விந்துத்திரயம் ௩
வியாதியோபசாந்தி - ௩௰
விருத்தி ௩
விருத்தித்திரயம் ௩
விரை - ௫
விவகாரபதம் ௰௮
விளி - - ௨
வினா - ௨-௫-௬
வினாவெழுத்து ௫
வினை - ௨-௩-௮
வினைச்சொல்வகை ௬
வினைக்குறிப்பு ௩
வினைச்சொற்பொருள் - ௬
வினைத்தொகைவகை - ௩
வினைமுதல் - ௨
வினைவழி ௪
வினையடக்கம் ௫
விஷயம் - ௩
வீடு - - ௨
வீரர் - ௨
வீரர்கள் - ௯
வீரர்செய்கை ௩

| | தொகை. |
|---|---|
| வீரசைவதீட்சை | ௧ |
| வெண்கலிப்பா | ௨ |
| வெருளி | ௪ |
| வெண்பா | ௬ |
| வெண்பாவாய்பாடு | ௪ |
| வெண்பாவியல்பு | ௬ |
| வெண்பாவினம் | ௩ |
| வெள்ளி | ௫ |
| வெறி | ௧ |
| வெற்றி | ௮ |
| வேதகீர்த்தர்கள் | ௪ |
| வேதம் | ௪ |
| வேதவாக்கியம் | ௬ |
| வேந்தர் | ௧ |
| வேந்தர்செய்கை | ௧ |
| வேல்வகை | ௪ |
| வேளாண்மைமாந்தரியல்பு | ௰ |
| வேள்வி | ௧ |
| வேற்றணி | ௨ |
| வைசியர் | ௧ |
| வைணவாகமம் | ௨ |
| வைதருட்பம் | ௰ |
| வைராக்கியின்குணம் | ௧ |
| வைராக்கியம் | ௧ |


தொகைப்பொருளகராதி

முற்றும்.

ஆக்கூடியமொத்தத்தொகைப்பெயர் - ௲௮௰.

கடவுள் துணை.

# தொகைப்பெயர் விளக்கம்.

தொகைப்பெயர் விளக்கந் - திறம்பெறத் திரட்டத் தொ
கைப்பெயர் பெற்றநம் - மத்திநாள் வணங்குவாம்.

கடவுள் - க. மோக்ஷம் - க.

## [இருதொகை.]

அக்கரவகை - உ - அட்டாக்கரம் - பஞ்சாக்கரம்.

அங்கம் - உ - சாங்கம் - உபாங்கம்; இவற்றுள் - கரசரணாதி - சாங்கம், வஸ்திரபூஷணாதி - உபாங்கம்.

அசைவு - உ - சிருட்டிகரசைவு - சிருட்டிகளசைவு.

அசை - உ - நேரசை நிரையசை; இவற்றுள் - குறினெடி லிணைந்துங் - குறிலொற்றடுத்தும் நெடி லிணைந்தும் - நெடிலொற்றடுத்தும் நெடில் தனித்தும் வருவது நேரசை. குறில் தனித்தும் - குறிலிணைந்தும் - குறிலிணையொற்றடுத்தும் வருவது நிரையசை.

அசை - உ - நேர்பசை - நிரைபசை; இவற்றுள் - நேர்க்கீழ்க் குற்றுகர முற்றுகரம் வருவது நேர்பசை - நிரைபசை, நிரைக்கீழ்க் குற்றுகர முற்றுகரம் வருவது நிரைபசை.

அச்சம் - உ - கடவுள்பொருட்டச்சம் - காவலன்பொருட்டச்சம்.

அணி உ - பொருளணி - சொல்லணி.

அணிகலவகை - உ - பொன்னணிகலம் - மணியணிகலம்.

அண்டம் - உ - சிற்றண்டம் - பேரண்டம்; இவற்றுள் - சிற்றண்டங் கோழிமுட்டை, பேரண்டந் - தலையோடு.

அதிகாரம் - உ - எதோத்தேசபக்கம் - காரியாகாலபக்கம்.

அதீதம் - உ - சமயாதீதம் - கலையாதீதம்; இவற்றுள் - பலசமயங்களும் - பொய்யெனல், சமயாதீதம் - பலகலைகளுஞ் சொன்னபடியொழுகல் - கலையாதீதம்.

அயநம் - உ - உத்திராயநம் - தக்ஷிணாயநம்.

அரூபப்பொருள் - உ - ஆத்துமம் - கடவுள்; அன்றியும் - ஆகாயம் - வாயு - இரண்டுஞ்சேர்த்து நான்கென்பாருமுளர்.

அமிர்தம் - உ - தேவாமிர்தம் - பஞ்சாமிர்தம்.

அழியாப்பொருள் - உ - பரப்பிரமம் - ஆத்துமம்

அளபெடை - உ - உயிரளபெடை - ஒற்றளபெடை

அறம் - உ - இல்லறம் - துறவறம்.

அறிவிப்பு - உ - கடவுளுக்கறிவித்தல் - மனிதர்க்கறிவித்தல்.

அறிவு உ - நல்லறிவு - புல்லறிவு.

அன்பு உ - உள்ளன்பு - புறவன்பு.

ஆகாரம்-உ - சுத்தாகாரம் - அசுத்தாகாரம்; இவற்றுள் - சீவவதையில்லாத உணவுகள் - சுத்தாகாரம், சீவவதையுள்ள உணவுகள் - அசுத்தாகாரம்.

ஆக்கினை-உ - கடவுளாக்கினை - காவலனாக்கினை.

ஆசாரம்-உ - மதாசாரம் - குலாசாரம்; இவற்றுள் - தேசாசாரஞ்சேர்த்து மூன்றென்பாருமுளர்.

ஆசு உ - உலோகவாசு - சரககாசு.

ஆசை-உ - இகத்தாசை - பரத்தாசை.

ஆடை-உ - பட்டாடை - நூலாடை.

ஆட்சி-உ - தனக்குரித்து - பிறர்க்குரித்து.

ஆணி-உ - கரட்சி - இரட்சி; இவை முத்திலட்சணம்.

ஆணை-உ - கடவுள்கட்டளை - காவலன்கட்டளை.

ஆண்மை உ - வித்தையாண்மை - தனத்தாண்மை - வீரத்தாண்மையுஞ்சேர்த்து மூன்றென்பாருமுளர்.

ஆதாயம்-உ - நல்வினையில்வந்தபொருள் - தீவினையில்வந்தபொருள்.

ஆதீனம் உ - சொந்தமாகப்பெற்றபொருள் - சுதந்தரமாகப்பெற்றபொருள்; இவற்றுள் சொந்தமாகப்பெற்றது - தான்தேடியது, சுதந்தரமாகப்பெற்றது - பிறர்கொடுத்தது.

ஆப்தம் - உ - குறிகியாப்தம் - குருசாதலாப்தம்.
ஆலயம் உ - தேவாலயம் கோவாலயம்.
ஆவி - உ - அசுத்தாவி பரிசுத்தாவி.
ஆவேசம் - உ - தன்னாட்டம் - தெய்வச்சார்பாட்டம்.
ஆன்மா - உ - ஜீவான்மா - பரமான்மா.
இகழ்ச்சி உ - தன்னால்வருமிகழ்ச்சி பிறரால்வருமிகழ்ச்சி.
இசை - உ நல்லிசை - புல்லிசை.
இடுக்கண் உ - தெய்வத்தால்வருமிடுக்கண், ஊ வினைத்தால்வருமிடுக்கண்.
இடைநிலை உ - காலங்காட்டுமிடைநிலை, காலங்காட்டா விடைநிலை.
இணக்கம் - உ - நல்லோரிணக்கம் - புல்லோரிணக்கம்.
இதிகாசம் - உ - பாரதம் - இராமாயணம்.
இரசம் உ - வாலைரசம் - செயரசம்.
இரசவாதம் - உ - மூலவாதம் - சாலவாதம்; இவற்றுள் - மெய்யாகச்செய்தல் - மூலவாதம், பொய்யாகச்செய்தல் - சாலவாதம்.
இரத்தல் - உ - தன்பொருட்டிரத்தல் பிறர்பொருட்டிரத்தல்.
இரணபேரிகை - உ - யானைமுரசம் - ஓட்டமுரசம்; இவற்றுள் - போர்தொடுக்கவறைதல் - யானைமுரசம், போர்விடுக்கவறைதல் - ஓட்டமுரசம்.

இருமை உ - இம்மை - மறுமை.
இருள் - உ - அகவிருள் - புறவிருள்.
இலக்கத்தொகை. உ. நெல்லளவு. பொன்னளவு.
இழிதிணைப்பால் - உ - ஒன்றன்பால் - பலவின்பால்.
இறத்தல்-உ-காலம்வந்திறத்தல் - அகாலம்வந்திறத்தல்.
இன்பம்-உ-சிற்றின்பம் பேரின்பம்.
ஈகை-உ-தானே கொடுத்தல் பிறர்கொள்ளக்கொடுத்தல்.
ஈச்சுரருக்கில்லாமை-உ-பிறப்பு-இறப்பு.
ஈச்சுரருக்குள்ளாமை-உ-முக்காலமறிதல்-முத்தொழிலை நடாத்தல்.
ஈச்சுரர்வல்லபம்-உ உருபம்-அருபம்.
ஈச்சுரர்செய்கை-உ-செல்வத்தைக்கொடுத்தல்-செல்வத்தையெடுத்தல்.
ஈச்சுரர்தேவியர்-உ-கங்கை பார்வதி.
ஈச்சுரர்பதவி உ-கைலாயம் சிவலோகம்.
ஈச்சுரர்தன்மை.உ.அடியாரிடத்தைச்சேர்தல் கொடியாரிடத்தைத்தீர்தல்.
ஈச்சுரர்வில் உ-மகமேருவு-பிநாகம்.
ஈச்சுரர் உடை-உ-புலித்தோல் யானைத்தோல்
ஈச்சுரர்முடி-உ சடைமுடி-மணிமுடி.
ஈச்சுரர்தூலாங்கம் உ-சாங்கம்-உபாங்கம்.

இச்சுரர்சபாஷம்-உ-யாசித்தல்-யாசியாமை.
ஐயம் உ - வெள்ளீயம்-காரீயம்.
இறு-உ - உயிரிறு-மெய்யிறு.
உகரம்-உ - குற்றுகரம்-முற்றுகரம்.
உடன்படல்-உ - உயகாரமாகவுடன்படல்-வகாரமாகவுடன்படல்.
உட்டணப்பொருள்-உ - அக்கினி சூரியன்.
உண்டி-உ - அமிர்தவுண்டி-நஞ்சுண்டி; இவை யமிர்தவெழுத்து-நஞ்செழுத்து.
உதவி-உ - தெய்வவுதவி, மக்களுதவி; இவற்றுள்-மக்களுதவி இல்லாதுபொருள்கிடைத்தல் தெய்வவுதவி.
உதயம்-உ - சந்திரோதயம்-சூரியோதயம்.
உதாரம்-உ - கேட்டீதல்-கேளாதீதல்.
உத்திரியின்றன்மை-உ-கிரியை ஞானம்.
உந்தியார்-உ - அவிரோதவுந்தியார் திருவுந்தியார்.
உயிர்வருக்கம்-உ-குறில்-நெடில்.
உயிர்த்துணைவர்-உ கற்புள்ளமனைவி-அற்புள்ளதோழன்; அற்பு-என்பது-அன்பு.
உயிர்ப்புவகை உ - இயற்கையுயிர்ப்பு, செயற்கையுயிர்ப்பு; இவற்றுள் - சுவாபமாகமூச்செறிதல்-இயற்கையுயிர்ப்பு, வியாதிமுதலியவற்றால் மூச்செறிதல்-செயற்கையுயிர்ப்பு
உலாவுந்தொழிலுள்ளவை-உ - தீயவு-காற்று.

உள்ளம் - உ - மாசுற்றவுள்ளம் - மாசற்றவுள்ளம்.

உறங்குந்தொழிலுள்ளவை உ - சரத்துட்படல - அசரத்துட்சில; இவற்றுள் - சரம் அசைவுள்ளன, அசரம் அசைவில்லன.

உள்ளதவஸ்து - உ - கடவுள் - ஆத்துமம் - உன்னதம் என்பது - உயர்வு.

ஊக்கம் - உ - மனவூக்கம் - தனவூக்கம்.

ஊடல்வகை - உ - அன்புகொண்டுபிணங்கல் - துன்புகொண்டுபிணங்கல் ஊடல் - என்பது பிணக்கு.

ஊட்டப்பொருள் - உ - தங்கம், வங்கம், வங்கமென்பது - காரீயம், ஊட்டமென்பது கனம் - இரசமுஞ்சேர்த்து மூன்றென்பர்.

ஊமையர் - உ - மௌனஞானிகள் - இளமைகவுகள்

ஊற்று - உ - கீழூற்று மேலூற்று.

ஊனம் உ - பிறப்பில்வந்தவூனம் - பிறந்தபின் வந்தவூனம்.

எச்சம் - உ - பெயரெச்சம் - வினையெச்சம்.

வெட்சணி - உ - தந்திரவெட்சணி - மந்திரவெட்சணி தந்திரவெட்சணி - பற்பலபண்டத்தைக் கையடக்கஞ்செய்து வெளிக்காட்டல், மந்திரவெட்சணியப்பண்டங்களைப் பசாசால் வரவழைத்துக்காட்டல்.

எதிர்காலவினைநிலை - உ - ப் - வ் - உதாரணம் நடப்பான் - வருவான்.

எந்திரம் உ - சீவனுள்ள வெந்திரம் - சீவனில்லாவெந்திரம்; இவற்றுள் - சீவவெழுத்தெழுதி - மந்திரிக்கிலசையுமாறுல் - சீவவெந்திரம் என்றும் சீவனில்லாவெழுத்தெழுதி - மந்திரிக்கிலசையாவிடில் சீவனில்லாவெந்திரமென்றுசொல்லுவர். அசைதலையாங்கண்டதில்லை.

எல்லை உ பொதுவெல்லை - சிறப்பெல்லை; இவற்றுட் பொதுவெல்லை - கொடுந்தமிழ்நாடு சிறப்பெல்லை செந்தமிழ்நாடு.

எழுகை - உ - அரசனைக்கண்டெழுதல் - பெரியோரைக்கண்டெழுதல்.

எழுத்தினம் - உ - குற்றெழுத்து - நெட்டெழுத்து.

எழுத்து உ. - ஒலிவடிவெழுத்து - வரிவடிவெழுத்து; இவற்றுள் - செவிப்புலனறிதல் - ஒலிவடிவு, கட்புலனறிதல் - வரிவடிவு.

எழுத்துவகை உ. - முதலெழுத்து - சார்பெழுத்து.

ஏசல் - உ - இகழாதிகழ்ந்தேசல் - புகழாது புகழ்ந்தேசல்.

ஏதுப்பொருள் உ - அநாதிப்பொருள் - ஆதிப்பொருள்; இவற்றுள் - அநாதிப்பொருள் - பிரமம், ஆதிப்பொருள் - பிரமன், அநாதி - முந்தியது, ஆதி பிந்தியது.

ஒப்புமைக்கூட்டம்-உ- புகழொப்புமை-இகழொப்புமை.
ஓசை-உ தன்னைபுணர்த்துவது-சொற்கியைவது
ஓரதி-உ-பச்சோதி-கரட்டோதி.
ஓலை-உ-மணவோலை-பிணவோலை; அன்றிமைற்றையோலைகளுமுள.
கந்தம்-உ-நற்கந்தம்-துற்கந்தம்.
கம்பிதம்-உ-கரக்கம்பம்-சிரக்கம்பம்.
கருத்தா-உ-இயற்றுதற்கருத்தா-ஏவுதற்கருத்தா.
கருவிநூல் உ- பிரயோசனக்கருவிநூல்-அப்பிரயோசனக்கருவிநூல்; பிரயோசனக்கருவி-இயற்றமிழ், அப்பிரயோசனக்கருவி-இசைத்தமிழ்.
களவிற்பிரிவு-உ- ஒருவழித்தணத்தல்-பொருள்வயிற்பிரிதல்.
களவிற்புணர்ச்சிக்குறி-உ-பகற்குறி-இரவுக்குறி; இவற்றுட் பகற்குறி-இல்லிகந்துநிகழ்வது, இரவுக்குறி-இல்லகத்துநிகழ்வது.
கற்பிதம்-உ-அத்தியாரோபம்-அபவாதம்.
கற்பியல்-உ-களவின்வழிவந்தகற்பு-களவின்வழிவாராக்கற்பு.
காட்சியகாட்சி உ-சகளம்-நிட்களம்.
காவல் உ-அறப்புறங்காத்தல்-நாடுகாத்தல்.

காவியம் - உ - பெருங்காவியம் - சிறுகாவியம்.
கிரீடை - உ - சலக்கிரீடை - நிலக்கிரீடை.
கிழமை - உ - தற்கிழமை - பிறிதின்கிழமை.
குறள்வெண்பாவினம் - உ - குறள்வெண்செந்துறை குறட்டாழிசை.
கூத்து - உ - தேசிகம் - மார்க்கம்.
கைகோள் - உ - களவுப்புணர்ச்சி - கற்புப்புணர்ச்சி; இவற்றுள் - தெய்வத்தாலாகிலுந் - தலைமகளாலாகிலுமடைவது - களவுப்புணர்ச்சி, தந்தைதாயாலது - தெய்வமாவது கூட்டப்பெறுவதுமன்றித் - தலைமகளுடன்பட்டுப் புணர்ந்துடன்வரைதல் - கற்புப்புணர்ச்சி.
கோலம் - உ - மணக்கோலம் - பிணக்கோலம்.
சந்நிதானம் - உ - இராசசந்நிதானம் - தேவசந்நிதானம்.
சாதனம் - உ - சிலாசாதனம் - பத்திரசாதனம்.
சாதி - உ - ஆண்சாதி - பெண்சாதி.
சரவட்சணம் - உ - சந்திரகலை - சூரியகலை.
சிலேடை - உ - செம்மொழிச்சிலேடை - பிரிமொழிச்சிலேடை.
சிருட்டி - உ - கிரமச்சிருட்டி - உபயசிருட்டி.
சிறப்பு உ - இடுகுறிச்சிறப்பு - காரணச்சிறப்பு; அன்றியும் - இழிவுசிறப்பு - உயர்வுசிறப்பு.
சுடர் - உ - சூரியன் - சந்திரன்.

சுட்டு-உ-அகச்சுட்டு-புறச்சுட்டு; அன்றியும், அண்மைச்சுட்டு-சேய்மைச்சுட்டு முளவாம்.

சுவை-உ-சொற்சுவை-பொருட்சுவை.

செய்கை-உ-நற்செய்கை-துற்செய்கை.

செய்யுணெறி-உ-வைதருப்பம்-கௌடம்.

செய்யுள்-உ-அங்கதச்செய்யுள்-செவியுறைச் செய்யுள்.

செய்யுள்-உ-வைதருபம்-கௌடம்.

சொல்லணி-உ-மடக்கு-சித்திரம்.

சொல்-உ-பெயர்ச்சொல்-வினைச்சொல்.

சொற்றெரிநிலைமை-உ-சொன்மைதெரிதல்-பொருண்மைதெரிதல்.

ஞானம்-உ-துவைதம்-அத்துவைதம்.

ஞானியர்-உ-நைட்டிகர்-சாத்தியர்; இவற்றுள் நைட்டிகர் - சந்ததநிட்டைவிடாதோர், சாத்தியர்-ஞானத்திலிருந்து- சரிதைசெய்வோர்.

தமிழ்-உ-செந்தமிழ்-கொடுந்தமிழ்.

தமிழியல்-உ-செய்யுளியல்-மரபியல்.

தருக்கவகை-உ-சுருக்கத்தருக்கம்-பெருக்கத்தருக்கம்.

திணை-உ-உயர்திணை-அஃறிணை.

திணை-உ-அகத்திணை-புறத்திணை.

தீட்சை-௨-பீசதீட்சை-நிர்ப்பீசதீட்சை; இவ்வ
ற்றுள்-நற்சமையசம்பவபக்குவர்க்குப்பீ
சதீட்சை(௨௰) வயசிற்குட்பட்டார்க்கும்-
(எ௫)ன்மேற்பட்டார்க்கும்-மடந்தைய
ர்க்கும்-நோயாளர்க்கும்-பொதுப்பெண்
களுக்கும்-நிர்ப்பீசதீட்சையாம்.

தொடர்-௨-தழுவுதொடர்-தழாஅத்தொடர்.

தொடர்நிலை-௨-சொற்றொடர்நிலை-பொருட்
டொடர்நிலை.

தொடர்மொழி-௨-முற்றுத்தொடர்மொழி-
எச்சத்தொடர்மொழி-

தொடை-௨-எதுகைத்தொடை-மோனைத்தொடை.

தோற்றம்-௨-சரம்-அசரம்.

நிதி-௨-சங்கநிதி-பதுமநிதி.

நோக்கம்-௨-சொன்னோக்கம்-பொருணோக்கம்.

பகுதி-௨-பெயர்ப்பகுதி-வினைப்பகுதி.

பதம்-௨-பகுபதம்-பகாப்பதம்.

பதவி-௨-இந்திரபதவி-திருச்சங்குபதவி.

பாடை-௨-இயற்பாடை-பரிபாடை.

பாயிரம்-௨-சிறப்புப்பாயிரம்-பொதுப்
பாயிரம்; இவற்றுள்-ஆக்கியோன்பெயர்
வழி-எல்லை-நூற்பெயர்-யாப்பு-பொருள்-
கேட்போர்-பயன், எனுமெட்டுமமையக்
கூறுவது-சிறப்புப்பாயிரம், அன்றியும்-

காலம்-களன்-காரணம்-எனுமூன்றோடும் பதினொன்றெனக்கொள்வாருமுளர், நூல் நுவல்வோன்-நுவலுந்திறன்-கொள்வோன்-கோடன்மரபு - எனுமைந்துமமையக் கூறுவது-பொதுப்பாயிரம்.

பிரபஞ்சம்-உ-சாத்திரம் -அசாத்திரம்-இவற்றைத் தீவிரமந்தமென்பர்.

புணர்ச்சி-உ-வேற்றுமைப்புணர்ச்சி - அல்வழிப்புணர்ச்சி; அன்றியும் - இயல்புப்புணர்ச்சி விகாரப்புணர்ச்சியுமுளவாம்.

புணர்ச்சி உ-உள்ளப்புணர்ச்சி- மெய்யுறுபுணர்ச்சி.

புணர்ச்சி-உ-களவுப்புணர்ச்சி-கற்புப்புணர்ச்சி.

பெயர்-உ-முதற்பெயர்-சினைப்பெயர்.

பெயர்ச்சொல்-உ-இடுகுறி-காரணம்.

பொதுப்பெயர்-உ-இடுகுறிப்பொதுப்பெயர் காரணப்பொதுப்பெயர்.

பொருட்டொடர்நிலைச்செய்யுள்-உ-பெருங்காப்பியம் சிறுகாப்பியம்.

பொருள்-உ-திருக்கு-திருசியம்.

பொருள்-உ-அலவழிப்பொருள்-வேற்றுமைப்பொருள்.

பொருள்-உ-கல்விப்பொருள் செல்வப்பொருள்.

பொருள்-௨-நித்தியப்பொருள் - அநித்தியப் பொருள்.

பொருள்-௨-அகப்பொருள் - புறப்பொருள்; இஃது - அகத்திணை-புறத்திணையெனவும் படும்.

பொழுது-௨-சிறுபொழுது-பெரும்பொழுது சிறுபொழுதாவது-மாலை-யாமம்-வைகறை காலை.நண்பகல்-எற்பாடு இவை-அத்தமன காலமுதல் ஒவ்வொன்று பத்துநாழிகை யாகமுறையேகொள்க, பெரும்பொழுதாவது . கார்-கூதிர்-முன்பனி-பின்பனி-இள வேனில் முதிர்வேனில்-இவற்றுட்குறிஞ்சிக்குரியபொழுது - கூதிர்-யாமம்-முன்பனி, பாலைக்குரியபொழுது -வேனில்-நண்பகல்-பின்பனி, முல்லைக்குரியபொழுது-கார்-மாலை,நெய்தற்குரியபொழுது - பெரும்பொழுதாறும்-எற்படுகாலையென்னும் சிறுபொழுதுமாம், மருதத்திற்குரிய பொழுது பெரும்பொழுதாறும் வைகறையெனனுஞ் சிறுபொழுதுமாட்.

போகம்-௨-இஷ்டபோகம்-கஷ்டபோகம்.

மயக்கம்-௨ - வேற்றுநிலைமெய்மயக்கம்- உடனிலை மெய்மயக்கம்.

மரணம்-௨-காலமரணம் அகாலமரணம்.

மரபு-உ- தந்தைவழி தாய்வழி.
மாயைதருமம்-உ - சுதந்தரம்-அசுதந்தரம்.
மாயைதருமம்-உ- சங்கோசம்-விகாசம்.
மார்க்கம்-உ - செந்துறைமார்க்கம்-வெண்டுறைமார்க்கம்.
முதற்பொருள்-உ- நிலம் பொழுது.
முத்தி-உ-கிரியை-ஞானம்
முடிவு உ- சொன்முடிவு பொருண்முடிவு.
மொழி-உ- தனிமொழி தொடர்மொழி.
மொழிபுணர்ச்சி-உ - இயல்புணர்ச்சி-விதிபுணர்ச்சி; அன்றியும்-மெய்ப்புணர்ச்சி-உயிர்ப்புணர்ச்சி.
யுத்தவகை-உ - ஆயுதயுத்தம்-மல்யுத்தம்.
வசை-உ- மெய்வசை-இருபுறவசை.
வடசொல்-உ- தற்சமம்-தற்பவம்.
வடிவெழுத்து உ- ஒலிவடிவெழுத்து-வரிவடிவெழுத்து.
வழக்கு-உ-உலகவழக்கு செய்யுள்வழக்கு.
வழக்கம்-உ. - பாவம்-புண்ணியம்.
வரைவு-உ - களவுவெளிப்படுமுன்வரைவு-களவுவெளிப்பட்டபின்வரைவு; அவற்றுள்-களவுவெளிப்படுமுன்வரைவு-தலைவன்றெருண்டேனும் - பாங்கியிற்றெருண்டேனும். பாங்கனிற்றெருண்டேனும்வரைவதுகளவு வெளிப்பட்டபின்வரைவு- தலைமகனுடன்

போய் அவனூரின் கண்வரைவதும் - அவ னுடன்போய்வந்து தலைவியூரின் கண்வரை வதுந் - தலைமகன் தலைமகடமனைவழிபட்டு வரைதலுமாம்.

வாழ்த்து - உ - வாயுறைவாழ்த்து - புறநிலை வாழ்த்து

வாழ்த்து. உ. மெய்வாழ்த்து - இருபுறவாழ்த்து

விடை - உ - செவ்வனிறை - இறைபயப்பது.

வினி - உ அண்மைவிளி சேய்மைவிளி.

வினை - உ - அகவினை - புறவினை.

வினை உ - நல்வினை - தீவினை.

வினைக்குறிப்பு உ - ஆக்கவினைக்குறிப்பு - இயற் கைவினைக்குறிப்பு.

வினைமுதல் - உ - இயற்றும்வினைமுதல் - ஏவும்வி னைமுதல்.

வீடு - உ - பொருள்வீடு, யற்றுவீடு.

வீரர் - உ - இரணவீரன் - சுத்தவீரன்.

வெண்கலிப்பா - உ - வெண்கலிப்பா - கலிவெண்பா

வேற்றணி - உ - சேர்வையணி - கலவையணி.

வைணவாகமம் - உ - பாஞ்சராத்திரம் - வை காநசம்.

இருதொகை - முற்றுப்பெற்றது.

ஆறுதொகை - உ௱ரு.

# மூத்தொகை.

அகக்கருவி ௩-மனம்-புத்தி-சித்தம்.

அகங்காரம்-௩-தைசசாகங்காரம்-வைகாரிகாகங்காரம்-பௌதாதிகாகங்காரம்.

அகப்பொருட்டிணை-௩-ஐந்திணை-பெருந்திணை-கைக்கிளை.

அக்கினியிடத்துப்பொருள்-௩-வெம்மை-புகை-ஒளி.

அடியார்கள்-௩-அப்பர்-சம்பந்தர்-சுந்தரர்.

அமுதம் ௩-சுத்தாமுதம்-அசுத்தாமுதம்-நித்தியாமுதம்; இவற்றுள் - சுத்தாமுதம் பால், அசுத்தாமுதம் கள் - நித்தியாமுதந் தேவருணவு.

அபிமானபுருஷத்திரயம்-௩-விசுவம்-தைசசம்-பிராக்கியம்.

அரசர்-௩-சேரன்-சோழன்-பாண்டியன்.

அரசாட்சி ௩-ஆணரசாட்சி-பெண்ணரசாட்சி-இரவரசாட்சி.

அவத்தை-௩-கேவலாவத்தை-சகலாவத்தை-சுத்தாவத்தை; இவை-பெத்தகேவலம்-முத்திகேவலம்-பெத்தசகலம்-முத்திசகலம்-பெத்தசுத்தம்-முத்திசுத்தம்; இவற்றுள்-

ஆணவமலத்தின்காரியம் - கேவலாவத்தை, மாயையின்காரியம் - சகலாவத்தை, சுத்தமாயையின்காரியம் - சுத்தாவத்தை; இவை. ஆற்றுமாக்களொடுங்கித் தூரியாதீதப்பட்டுக்கிடத்தல் - பெத்தகேவலம், சுத்ததத்துவங்களோடுகூடி அநிர்விகற்பத்தொடு தாழில்மேவாதுமலமொன்றுமேவியர்த்தமாய் மற்றையவிகற்பநீங்கிநிற்பது - முத்திகேவலம், ஆற்றும தத்துவாதிகளொடுசீவிக்குமவதரம் - பெத்தசகலம், --- அவற்றை நீங்கி நிற்பது - முத்திசகலம்.

அருக்கன்வீதி - ௩ - மேடம் - இடபம் - மிதுனம்.

அறம் - ௩ - ஒழுக்கம் - வழக்கு - தண்டம்; இவற்றை வடநூலார் - ஆசாரம் - வியவகாரம் - பிராயச்சித்தமென்பர்.

ஆன்பால்மூவர் - ௩ - திருவள்ளுவர் - அதிசமான் கபிலர்.

ஆசிரியர் - ௩ - நூலாசிரியர் - உரையாசிரியர் - போதகாசிரியர். உபாத்யாயர்

ஆசை - ௩ - பெண்ணாசை - மண்ணாசை - பொன்னாசை; இவை - புத்திரவேஷணை - உலோகவேஷணை அத்தவேஷணையெனப்படும்.

ஆன்மாவகை - ௩ - விஞ்ஞானகலர் பிரளயாகலர் - சகலர்; இவருள் - விஞ்ஞானகலர் - ஒரும

லத்தர், பிரளயாகலர்- இருமலத்தர், சகலர்-மும்மலத்தர்.

இச்சைத்தொழில்-௩- ஆகாரம்-நித்திரை-மைதுனம்.

இசை ௩-மந்தம்-மத்திமம்-தாரம்.

இடம்-௩-மலை-நாடு-யாறு.

இடம் ௩-தன்மை-முன்னிலை-படர்க்கை.

இடப்-௩-முதல்-இடை-கடை.

இந்திரியவகை-௩-ஞானேந்திரியம்- கருமேந்திரியம்-அந்தரிந்திரியம்.

இயல்-௩-துரிதம்-மத்திமம்-விளம்பம்.

இயல்புவழக்கு-௩.இலக்கணம்-போலி-மரூஉ.

இரப்பு-௩-உயர்ந்தோனிரப்பு-இழிந்தோனிரப்பு-ஒப்போனிரப்பு.

இராசி-௩-சரராசி திரராசி உபயராசி.

இலிங்கம்-௩-இட்டலிங்கம் -பிராணலிங்கம்-பாவலிங்கம்.

இன்பம்-௩-ஆகாரம்-நித்திரை-காதல்.

ஈச்சுரன்-௩- விராட்புருடன்-இரணியகருப்பன்-அந்தரயாமி.

ஈச்சுரன்பிரபுத்துவ சாமர்த்தியகுணம்-௩-கர்த்தத்துவம்-அகர்த்தத்துவம்- அன்னியதாகர்த்தத்துவம்.

உத்திரத்திரயம்-௩ - உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி.

உத்திரிப்பொருளைச்சேர்ந்த அதிகாரசமைய விசேடம்-௩-மந்திரம்-அருச்சனை-யோகம்.

உபதேசமுறை-௩ - உத்தேசம்-இலக்கணம்-பரீட்சை.

உபநிதி-௩ - உபநிதி, நிக்ஷேபம்-நியாசம்

உபாதி-௩. அவச்சின்னோபாதி-பதிவிம்போபாதி-அத்தியாசோபாதி.

உயர்திணை-௩-மக்கள்-தேவர்-நரகர்.

உயிர்ப்பொருள்வகை-௩-நடத்தல்-பறத்தல்-ஊருதல்.

உயிரிடத்துப்பொருள்-௩ ஞானம்-இன்பம்-துன்பம்.

உரிச்சொல்-௩ - பண்புரிச்சொல், இசையுரிச்சொல்-குறிப்புரிச்சொல்.

உலகம்-௩ - சுவர்க்கம்-மத்தியம்-பாதாளம்; இவற்றைத் தெய்வலோகம்-பூலோகம்-பாதாளலோக மென்பாருமுளர்.

உவமையணி-௩-பண்புவமை-தொழிலுவமை-பயனுவமை.

எதிர்மறைவிகுதி-௩ - இல்-அல்-ஆ.

எழுத்துக்கணம்-௩ - வல்லினம்-மெல்லினம்

இடையினம்; இவை எழுத்தினமெனப்படும்.

எழுத்துவகை-௩-உயிர்-மெய்-உயிர்மெய்.

ஏஷணை-௩-ஆசைகாண்க.

ஏது-௩-இயல்பேது-காரியவேது-அனுபலத்தியேது; இவற்றுள்- மாவும்-கைமாவும்-ஒருமென்புளி கைமாயாளேயெனக்கருதல்-இயல்பேது, புகையைக்கண்டு நெருப்புண்டெனல்-காரியவேது, சீதமின்மையாற் பனியின்றெனக்கோடல்-அனுபலத்தியேது.

ஒத்தாழிசைக்கலிப்பா-௩- வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா-அம்போதரங்கவொத்தாழிசைக்கலிப்பா-நேரிசையொத்தாழிசைக்கலிப்பா.

ஓசை-௩-செப்பலோசை-துள்ளலோசை-தூங்கலோசை.

கடுகம்-௩-சுக்கு-திப்பிலி-மிளகு; இவை-திரிகடுகெனப்படும்.

கணம்-௩-தேவர்கணம்-மானிடர்கணம்-இராட்சசகணம்.

கதிபெறும்வகை-௩- உபரதி-வைராக்கியம்-ஞானம்; இவற்றுள்-யானெனதென்னுமபிமானம் நீக்கினதே-உபரதி, பிரமாதிபத்திரணீகாரமே-வைராக்கியம், ஆத்துமசொரூபத்தையறிவதே-ஞானம்.

கருடபட்சை-ங-காடம்-சுப்பிரம்-காளம்.
கருவி-ங- அகக்கருவி-புறக்கருவி-ஒற்றுமைக் கருவி.
கலி ந-அன்னகலி சொர்ணகலி ஆடைக்கலி
கலிப்பா-ங ஒத்தாழிசைக்கலிப்பா-வெண்கலிப்பா-கொச்சகக்கலிப்பா.
கலை-ங- தந்திரகலை-மந்திரகலை-உபதேசகலை.
கனி ங-வாழைக்கனி-பலாக்கனி-மாங்கனி.
கன்மமலம்-ங-சாதி-வடிவு-புசிப்பு; அன்றியும் தனு-கரணம்-புவனம்-போகம்-எனுநான்கெனவும்படும்.
கன்மம்-ங-சஞ்சிதம்-பிராரத்துவம்-ஆகாமியம்.
கன்மத்திரயம்-ங-கர்மம்-பத்தி-வைராக்கியம்
கன்மத்திரயம் ந-புண்ணியகன்மம்-பாவகன்மம்-மிசிரக்கன்மம்.
காதலர்-ங-புருடன்-தோழன்-மகன்.
காயம்-ந-பூதகாயம்-புரியட்டகாயம்-யாதனாகாயம்.
காரணத்திரயம்-ந-அஞ்ஞானம்-மாயை-வாசனை சித்து.
காரணம்-ங முதல்-துணை-நிமித்தம்.
காரணம்-ங - அகக்காரணம்-புறக்காரணம்-வெளிக்காரணம்.

காலம் - ௩ - இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்.

காற்றிடத்துப்பொருள் - ௩ - அணுத்திரள் - நற்கந்தம் - தூர்க்கந்தம்.

குடை - ௩ - பொற்குடை - முத்துக்குடை - மணிக்குடை; இவை யருகனுக்காம்.

குடை - ௩ - சந்திராதித்யம் - நித்தியவிநோதம் - சகலபாஜனம்; இவையுமருகனுக்காம்.

குணம் - ௩ - சாத்துவிகம் - இராசதம் - தாமதம்; அவையாவன - ஞானம் - அருள் - தவம் - பொறை - வாய்மை - மேன்மை - மோனம் - ஐம்பொறியடக்கலென - வெட்டுஞ்சாத்துவிகம், மனவூக்கம் - ஞானம் - வீரம் - தவம் - தருமம் - தானம் - கல்வி - கேள்வியெனவெட்டுமிராசதம், பெருண்டிநெடுந்துயில் சோம்பு - நீதியழூ - ஒழுக்கவழூ வஞ்சம் - மறதி - பொய் - கோபம் காமம் - கொலை - இவை தாமதம்.

குருவிற்குக்கொடுக்கும்பொருள் - ௩ - உடல் - பொருள் - ஆவி.

குற்றம் - ௩ - காமம் - வெகுளி - மயக்கம்.

கௌரவர்குலம் - ௩ - சந்திரகுலம் - சூரியகுலம் அக்கினிக்குலம்.

கௌரவர்குலத்தரசர்-௩- சேரன்-சோழன்-பாண்டியன்.

சங்கம்-௩- தலைச்சங்கம்-இடைச்சங்கம்-கடைச்சங்கம்.

சங்கற்பத்திரயம்-௩ - மனம்-மனனம்-மனனியம்.

சங்கத்திரயம் ௩- சர்ச்சங்கம்-துர்ச்சங்கம்-மத்திமச்சங்கம்-

சங்கிலி-௩ - இலாடசங்கிலி- திரிவட்டச்சங்கிலி-விரச்சங்கிலி; இவை யவதானஞ்செய்கையிற் சிக்கெடுத்தலுமுண்டு.

சத்தி-௩ - இச்சாசத்தி - ஞானசத்தி - கிரியாசத்தி; இவற்றுளிச்சாசத்தி-உயிர்க்கருணை சமாயிருப்பது, ஞானசத்தி-கருமங்களையறிந்தூட்டுவது, கிரியாசத்தி-உலகங்களாக்குவது.

சத்து-௩- விவகாரிகம்-பிராதிபாதிகம்-பாரமார்த்திகம்.

சம்சயத்திரயம்-௩- சம்சயம்-அசம்பாவனை-விபரீதபாவனை.

சலத்திடத்துப்பொருள்-௩ - கிரிமி-மச்சம்-நுணா.

சாதனாத்திரயம்-௩ - சிரவணம்-மனனம்-நிதித்தியாசனம்.

சாத்திரம் ௩-சாங்கியம்-பதஞ்சலியம்-வேதாந்தம்; இவைமுறையே-கபிலர்-பதஞ்சலியர்-வியாசர்-இம்மூவராற்கூறப்பட்டன, இவற்றை யத்தியான்மீக நூலென்பர்.

சாந்தி-௩- இருதுசாந்தி - புத்திரசாந்தி, கிரகசாந்தி.

சிவன்றிருமேனி ௩-கலை-நாதம்-விந்து.

சிவதேகம்-௩-தூலம்-சூக்குமம்-காரணம்.

சீவாவத்தை-௩-சாக்கிரம்-சொப்பனம் சுழுத்தி.

சுடர்-௩-ஆதித்தன்-சோமன்-அங்கி.

சுடர் ௩ ஆலோகம் பிரபாமூர்த்தி கனப்பிரபை

சுட்டெழுத்து-௩-அ-இ-உ

சுபாவம்-௩-பதிபாவம், பசுபாவம், மாயாபாவம்.

சுழி-௩-வலச்சுழி-இடச்சுழி-நடுச்சுழி.

சூக்குமசிரவணதி-௩-தற்பதம்-தொம்பதம்-அசிபதம்,

சூரியர்சந்திரர்முதலியவீதி-௩-உத்தராயனம் தெட்சணாயனம்-மத்தியாயனம்.

செல்வம்-௩-தனச்செல்வம்-தானியச்செல்வம் புத்திரசெல்வம்; இவற்றையே-சம்பத்தென்பர்,

சேர்வையணி-௩-பொருளணிச்சேர்வை-சொல்லணிச்சேர்வை-சொற்பொருளணிச்சேர்வை.

சொல் - ௩ - இயற்சொல் திசைச்சொல் - திரிசொல்

சொல்லிலக்கணம் - ௩ - சொல்லியல் - வேற்றுமையியல் - ஒழிபியல்.

சோகம் - ௩ - பிள்ளைசோகம் - பெண்சோகம் - பிணிச்சோகம்.

ஞானம் - ௩ - பாசஞானம் - பசுஞானம் - பதிஞானம்.

ஞானம் - ௩ - வாய்ஞானம் - ஏட்டுஞானம் - வேஷஞானம்.

ஞானதரிசனம் - ௩ - சிவதரிசனம் - ஆத்தும தரிசனம் - பாசதரிசனம்.

தகுதிவழக்கு - ௩ - இடக்கரடக்கல் - மங்கலம் - குழூஉக்குறி.

தமிழ் - ௩ - இயற்றமிழ் - இசைத்தமிழ் நாடகத்தமிழ்.

தத்துவம் - ௩ - ஆத்துமதத்துவம் - வித்தியாதத்துவம் - சிவதத்துவம்.

தரம் - ௩ - உத்தமம் - மத்திமம் - அதமம்; இவற்றை முதலிடை கடையென்பர்.

ஸ்தானத்திரயம் - ௩ - நேத்திரம் - கண்டம் - இருதயம்.

தவம் - ௩ - மானதம் - காயிகம் - வாசிகம்; இவற்றுள் - மானதம் மனத்தாற்செய்வது, காயிகம் - காயத்தாற்செய்வது, வாசிகம் - வாக்கா ற்செ

தாமத்திரயம்-ங - சகசதாத்மிகம்-கர்மதாதாத்மிகம்-பிராந்திசைதன்னியதாத்மிகம்.

தாதுக்கோள்-ங-சந்திரன்-செவ்வாய்-சனி-

தாபத்திரயம்-ங-ஆதியாத்மீகம்-ஆதிபௌதீகம் ஆதிதெய்விகம்.

தாபம்-ங - அத்தியான்மிகம்-அதிதேவிலம்-பௌத்திகம்.

தாமரை-ங-வெண்டாமரை-செந்தாமரை-ஆகாயத்தாமரை.

தாழ்வு ங-தன்னால்வருதாழ்வு-தாரத்தால்வருதாழ்வு-பிறரால்வருதாழ்வு.

தாளம்-ங கைத்தாளம்-பிரமதாளம்-சில்லரித்தாளம்.

தானம்-ங - உத்தமதானம்-மத்திமதானம்-அதமதானம்; அவையாவன-அறத்தாலீட்டியபொருளை முக்குற்றமற்ற நற்றவத்தோரைக்கொள்கெனப்பணிந்து குறையிரந்து தம்முள்ளமுவந்தீதல்-தலைப்படுதானம்; ஆதுலர் குருடர்- மாதர் முதற்பிறர்-சிறுமையைப்பற்றி மனமிரங்கியீவது இடைப்பட்டதானம், புகழார்வங்கைமாறச்சம்-கன்மேறைட்டங்காரணம், கடைப்பாடிவந்தைறப்பற்றியீவது-கடைப்பட்டதானம், இவைமுறையே - உவமை-பனை தெங்கு பூகம்.

திக்கிடத்துப்பொருள்-௩-கடல்-மலை ஆறு.

தியானம்-௩ - கடவுட்டியானம் - கல்வித்தியானம்-மந்திரத்தியானம்.

திரிசிராதி-௩- கரன் - தூடணன் - திரிசிரன்.

திரிபு-௩- எழுத்துத்திரிபு-சொற்றிரிபு-பொருட்டிரிபு.

திரிபுடி-௩ ஞாதுரு - ஞானம் - ஞேயம்.

திரியாங்கம்-௩ வாரம்-திதி-நட்சத்திரம்.

தீ-௩ - உயிரிலுள்ளதீ, உதரத்துள்ளதீ, சினத்திலெழுந்தீ; அன்றியும்-வேதாக்கினி-௩-காருகபத்தியம்-தக்கணாக்கினியம் ஆகவனீயம.

தீட்சை-௩ - சமையதீட்சை விசேடதீட்சை-நிருவாணதீட்சை.

தீபம் ௩-முதனிலைத்தீபம்-இடைநிலைத்தீபம் கடைநிலைத்தீபம்.

தூலசிரவணாதி-௩- சிரவணம்-மனனம்-நிருத்தியாசனம்.

தேயுவின்குணம்-௩-சத்தம் பரிசம் ரூபம்.

தேவர்களியல்பு ௩ - இமையாநாட்டம்-நிலந்தோயாபாதம்-எழுதாவல்லி.

தேவி-௩-சரச்சுவதி, பார்வதி-இலக்குமி.

தேன்-௩ - கருந்தேன்-செந்தேன்-சரமண்டலத்தேன்.

தேன்-௩-மலைத்தேன், கொசுகுத்தேன், பொந்துத்தேன்.

தொடை-௩-அந்தாதித்தொடை-இரட்டைத்தொடை-செந்தொடை.

தொழில்-௩-ஆக்கல்-காத்தல்-அழித்தல்.

நட்சத்திரக்கூறுவிதம்-௩-தலையற்றநாள்-உடலற்றநாள்-காலற்றநாள்.

நாகம்-௩-பறவைநாகம்-புள்ளடிநாகம்-புற்றுநாகம்.

நாடி-௩-வாதநாடி-பித்தநாடி-சேத்துமநாடி.

நாடி-௩-இடை, பிங்கலை, சுழுமுனை.

நாடு-௩-சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு, இவற்றுள்-தொண்டைநாடு-நடுநாடு-இரண்டுஞ்சேர்த்தைந்தென்பார்.

நிகழ்காலவிடைநிலை-௩-ஆநின்று-கின்று-கிறு.

நியாசம்-௩-சிருட்டிநியாசம்-திதிநியாசம்-சங்காரநியாசம்; இவையே பஞ்சப்பிரமஷடங்கநியாசமெனப்படும், அன்றியும்-ஸ்ரீகண்டாதிநியாசம்-கலாநியாசமென இருவகைப்படும்; இவற்றுள்-ஸ்ரீகண்டன் முதலியவக்கரதேவர்களையுஞ் சத்திகளையுங்கூட்டிநியாசஞ்செய்வது-ஸ்ரீகண்டாதிநியாசம், பஞ்சப்பிரமகலை ௫-அதற்குட்முறையே நியாசஞ்செய்வது-கலாநியாசம்; இவற்றுள்-சிரசில்

தனுக்கு-சிருட்டி நியாதம், பிரமசாரிக்கு-திதிநியாதம், வானப்பிரத்தனுக்கு-சங்கார நியாதம்.

நிமிளை ௩ - கஞ்சநிமிளை-காகநிமிளை பொன்னிமிளை.

நூல் ௩ - முதனூல்-வழிநூல்-சார்புநூல்; எதிர்நூலுஞ்சேர்த்து நான்கென்பார்.

பகை ௩ - பைசாசு-உலகு-உடல்.

பக்கம் ௩ - ஒத்தபட்சம்-ஒவ்வாதபட்சம்-துல்லியபட்சம்; இவற்றுள் பொருளிருக்குமிடம்-ஒத்தபட்சம், பொருளிருக்கக்கூடாதவிடம்-ஒவ்வாதபட்சம், உண்மைபொருந்துமிடம்-துல்லியபட்சம்.

பக்குவர் ௩ - கருமகாண்டி, ஞானகாண்டி, பத்திகாண்டி.

பட்சம் ௩ பட்சம்-சுபட்சம்-விபட்சம்; இவற்றை-பக்கம்-நிகர்பக்கம்-நிகரில்பக்கம் என்பாருமுளர்.

பணிவிடை ௩ - அன்பொடுசெய்பணிவிடை-அன்பின்றிச்செய்பணிவிடை-பொருட்குச்செய்பணிவிடை.

பண் ௩ - விளரிப்பண்-செவ்வழிப்பண்-கந்திருவப்பண்.

பதம் ௩ - சிவபதம் பந்தபதம்-இல்வரபதம்.

பதவி-௩ கைலாயம் வைகுந்தம்-சத்தியலோக
பதி-௩-திருப்பதி-சேதுபதி-அமராபதி. [ம்
பதிவிரதைகுணம்-௩-பிறர்மனைச்செல்லாமை
பிறர்முகம்பாராமை - பிறதெய்வந்தொ
ழாமை
பதிவிரதையிலக்கணம்-௩-கணவனைத் தெய்வ
மென்றெண்ணல் - கற்புடைமை-தலைவனி
ன்பதுன்பத்தானுமுறல்
பந்தத்திரயம்-௩-தேசம்-காலம்-வஸ்து.
பரதவுறுப்பு-௩-பாவம் அராகம்-தாளம்.
பரிச்சேதம்-௩-காலபரிச்சேதம்-தேயபரிச்
சேதம்-வத்துப்பரிச்சேதம்; அவையாவன
ஒருகாலத்துண்டொருகாலத்தின்றென்ப
து-காலபரிச்சேதம், ஒருதேயத்தின்றென்
பது-தேயபரிச்சேதம், ஒருபொருளிது ஒ
ருபொருளிஃதன்றென்பது-வத்துப்பரிச்
சேதம்.
பலிவகை-௩-ஆடு-பன்றி-கோழி; இவற்றை
முப்பூசையென்பர்.
பலை-௩-கடுக்காய்-நெல்லிக்காய்-தான்றிக்காய்
பவளக்குணம்-௩-கிளிமூக்குநிறம் முருக்கம்
பூநிறம்-கொவ்வைக்கனிநிறம்.
பவளக்குற்றம்-௩-திரிகைகோணல்-புழுவரித்
தல்-முக்மொடிதல்

பறை-௩ - அறிவிக்கும்பறை-பிணப்பறை மணப்பறை.

பாகல்-௩ - பழுபாகல்-மிதிபாகல்-கொம்புப் பாகல்.

பாசம்-௩-கொடிப்பாசம்-இலைப்பாசம்-நொய்ப்பாசம்.

பாடம் ௩ வாய்ப்பாடம் மனப்பாடம்-கேள்விப்பாடம்; எட்டுப்பாடஞ்சேர்த்து - நான்கென்பர்.

பாடுந்திறம்-௩-வகைபாடுந்திறம்-இசைபாடுந்திறம் சமுத்திபாடுந்திறம்.

பார்வை-௩- இரக்கப்பார்வை-காமப்பார்வை-கொடூரப்பார்வை.

பார்வை-௩ - விட்டபார்வை-விடாதபார்வை-விட்டுவிடாதபார்வை.

பால்-௩-ஆண்பால்-பெண்பால்-அலிப்பால்.

பால்-௩ அறப்பால்-பொருட்பால்-காமத்துப்பால்.

பாவனை-௩-கண்டபாவனை-காணாதபாவனை-கேட்டபாவனை.

பாவபுண்ணியவழக்கம்-௩-செய்தல் செய்வித்தல் உடன்படல்.

பாவினம்-௩-தாழிசை-துறை-விருத்தம்.

பிணி-௩-வாதம்-பித்தம்-சிலேட்டுமம்; இவற்றை-முத்தோஷமென்பர்.

பிரணவவெழுத்து-௩-அகாரம் உகாரம் மகாரம்
பிரத்தியக்ஷம்-௩-சந்தேகப்பிரத்தியக்ஷம்-விபரீதப் பிரத்தியக்ஷம்-யதார்த்தப்பிரத்தியக்ஷம்
பிராணாயாமம் ௩-சரிதைப்பிராணாயாமம்-கிரியைப்பிராணாயாமம்-யோகப்பிராணாயாமம் இவைமுறையே (௰௬) மாத்திரை பூரித்து (௩௨) கும்பித்து (௮) விடுவது சரிதைப்பிராணாயாமம், (௭) பூரித்து (௩௨) கும்பித்து (௰௬) விடுவது - கிரியைப்பிராணாயாமம், (௩௨) பூரித்து (௬௪) கும்பித்து (௰௬) விடுவது-யோகப்பிராணாயாமம்.
பிரார்த்தம்-௩.தெய்வீகம்-ஆத்துமீகம்-பௌ
பிறப்பு-௩-இம்மை உம்மை-அம்மை. [திகம்
புகழ் ௩-செல்வத்தால்வருபுகழ்-கல்வியால்வருபுகழ்-வீரத்தால்வருபுகழ்-கொடையால்வருபுகழுஞ்சேர்த்து நான்கென்பார்.
புடம்-௩ - காடைப்புடம் - குக்குடப்புடம்-கெசபுடம்.
புண்ணியம் ௩ - மனத்தாற்செய்புண்ணியம் வாக்காற்செய்புண்ணியம்-காயத்தாற்செய் புண்ணியம்.
புத்தி-௩ நற்புத்தி-துர்ப்புத்தி-கூர்மைபுத்தி
புத்திரர்-௩ - குலபுத்திரன்-விகுலபுத்திரன்-தத்தபுத்திரன்.

புரம்-௩- இருப்புமதில் வெள்ளிமதில் பொன்மதில்; இவையே முப்புரம். [செய்தல்.
புலவர்தொழில்-௩ - ஓதல் ஓதுவித்தல்-நூல்
புளி-௩-நற்புளி-உருத்திராக்ஷப்புளி-கொறுக்காய்ப்புளி.
புறத்திணை-௩ - ஒழுக்கப்புறத்திணை-கரிப்புறத்திணை-நூற்புறத்திணை.
புறநிலையகத்திணை ௩-ஒப்பகத்திணை-இழிவகத்திணை-ஆக்கவகத்திணை. [பொதுவியல்.
புறப்புறவிலக்கணம் - ௩ - வாகை-பாடாண்-
பூதாதி-௩-வைகாரிகம்-வைசதம்-பூதாதி.
பூரத்திரயம்-௩-பூரம்-பூராடம்-பூரட்டாதி.
பெயரெச்சம்-௩- இறந்தகாலப்பெயரெச்சம்-நிகழ்காலப்பெயரெச்சம்-எதிர்காலப்பெயரெச்சம். [சினைமுதற்பெயர்.
பெயர்ச்சொல்-௩-முதற்பெயர்-சினைப்பெயர்-
பெயர்ச்சொல்-௩-பொதுப்பெயர்-உயர்திணைப்பெயர்-அஃறிணைப்பெயர்.
பேதம்-௩.சுத்தபேதம்-சுசாதிபேதம்-விசாதிபேதம்; அவையாவன-மரத்துக்கிலை-அரும்பு-காய்-கனி முதலிய-சுத்தபேதம், மரத்துக்கு மறுமரம்-சுசாதிபேதம், மரத்துக்குக்கல்-விசாதிபேதம்.
பொசிப்பு-௩- தன்முயற்சியால் வருபொசிப்பு-பிறர்முயற்சியால்வருபொசிப்பு-தெய்வமு

பற்சியால்வருமொலிப்பு.
பொருள் ௩-ஒழுக்கம்-வழக்கு-தண்டம்.
பொருள் ௩ முதற்பொருள்-கருப்பொருள்-
உரிப்பொருள்.
பொறி-௩ மனம்-வாக்கு காயம்.
பொன் - ௩ - இயற்கைப்பொன் - செயற்கைப்
பொன்-வாதப்பொன். [தன்மை.
பொன்னிறம்-௩-பசுமை-செம்மை-அரிதாரத்
போதப்பிரகாரம்-௩-உத்தேசம்-இலக்கணம்
பரீக்ஷை; அவையாவன-தான்விவகரிக்கும்
பொருளைப் பெயர்மாத்திரம்-கூறலுத்தே
சம், அப்பொருளில் சிறப்புத்தன்மை-கூற
லிலக்கணம், அப்பொருளிவ்விலக்கணமு
ண்டோவின்றோவெனப்பார்த்தல்-பரீக்ஷை.
போதம்-மதியால்வரும்போதம்-விதியால்வரு
ம்போதம் குருவால்வரும்போதம்.
போலி-௩-தலைப்போலி-இடைப்போலி-கடை
ப்போலி. [மகிமை
மகிமை-௩-தலமகிமை-தீர்த்தமகிமை-மூர்த்தி
மங்களாசரணை ௩-வாழ்த்து, வணக்கம்-செயப்
படுபொருள். [மஞ்சள்.
மஞ்சள் - ௩-மரமஞ்சள்-பசுமஞ்சள்-கஸ்தூரி
மண்டலம்-௩ - அக்கினிமண்டலம்-ஆதித்தம
ண்டலம், சந்திரமண்டலம்.

மணி-௩-சிந்தாமணி-கவுஸ்துபமணி-சம்மந்தர்.
மணி-௩ ஆராய்ச்சிமணி-கொத்துமணி-கைம்மணி; இம்மூன்றும்-அரசன் முற்றத்திலிருப்பன-குறையுற்றோராலடிக்கப்படுவது ஆராய்ச்சிமணி, முறையுற்றோராலடிக்கப்படுவது கொத்துமணி, நாழிகையறிவிக்க வடிக்கப்படுவது கைம்மணி.
மணிக்குளிகை ௩-ககனமணிக்குளிகை-நடைமணிக்குளிகை-யோகமணிக்குளிகை.
மதம்-௩-கன்னமதம்-கபோலமதம்-பீசமதம்
மதுரை-௩-வடமதுரை-தென்மதுரை-மாறுமதுரை; இவற்றுள்-தலைச்சங்கம்-வடமதுரை, இடைச்சங்கம்-மாறுமதுரை, கடைச்சங்கம்-தென்மதுரை.
மந்திரம்-௩-சரிதைமந்திரம், கிரியைமந்திரம், யோகமந்திரம். [வ்மருந்து,
மருந்து-௩-சீவமருந்து-அசீவமருந்து-கோ
மலம்-௩-ஆணவம்-மாயை-கன்மம்
மலம்-௩ மலம்-சலம்-இந்திரியம்.
மல்லிகை-௩-குடமல்லிகை ஊசிமல்லிகை-நாகமல்லிகை.
மறை-௩-நிலைமொழிமறை, வருமொழிமறை, இருமொழிமறை. [நிலைவு.
மனநிகழ்த்துப்பொருள்-௩-பற்று-அலைவு-

மாணாக்கர்-௩-தலைமாணாக்கர், இடைமாணாக்கர், கடைமாணாக்கர்.

மாணிக்கம்-௩-சிவமாணிக்கம்-அசிவமாணிக்கம்-சலமாணிக்கம்இவற்றுள் நாகத்திலுற்பவம் சிவமாணிக்கம்சிலையிலுற்பவம் அசிவமாணிக்கம், நீரிலுற்பவம் சலமாணிக்கம்.

மாரணம்-௩- மந்திரமாரணம் -கருமாரணம்-மருந்துமாரணம்.

மாலை ௩-பூமாலை பாமாலை-மணிமாலை.

மார்க்கக்கோட்பாடு-௩- தன்மார்க்கமேமெய்யெனல்-புறமார்க்கமேபொய்யெனல்-தன் மார்க்கப்படி நடக்குதல்.

முகம்-௩-ஊர்த்துவமுகம்- திரியக்குமுகம்-அதோமுகம்.

முத்திவிக்கினம்-௩- அறியாமை-ஐயம் திரிபு.

முத்துக்குணம்-௩ -திரளை-ஒளிவிடுதல்-வெள்ளிநிறங்கொளல்.

மூட்மை-௩- உப்மை-இம்மை-மறுமை.

முரசு-௩-மங்கலமுரசு-கொடைமுரசு-செயமுரசு. [யாஷிாண்டி மூடம்

மூடம்-௩ - உலோகமூடம்-தேவதாமூடம்

மூர்த்திகள்-௩-பிரமா-விட்டுணு உருத்திரன்-

மூவர்வாகனம்-௩-அன்னம்-கருடன்-இடபம்

மை ௩ -பாதாளமை-மறைப்புமை-வசியமை

மொழி ௩ - ஒருமொழி பெருமொழி திரண்மொழி.

மொழி ௩ - ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி.

மொழி ௩ - மெய்கூறல் புகழ்கூறல் - பழிகூறல்

மொழி ௩ - தற்சமம் - தற்பவம் தேசிகம்.

மொழிக்குறை ௩ - இடைக்குறை - தலைக்குறை கடைக்குறை.

மொழிநிலை ௩ - ஓரெழுத்தொருமொழி ஈரெழுத்தொருமொழி - இரண்டிறந்திசைக்குந்தொடர்மொழி.

யானை ௩ - கிரிசரம் - வனசரம் - நதிசரம்,

வாசனாத்திரயம் ௩ - சாத்திரவாசனை - தேகவாசனை உலோகவாசனை.

விகற்பம் ௩ - சத்து சித்து - ஆநந்தம்.

விகாரம் ௩ - தோன்றல் - திரிதல் - கெடுதல்.

விண்ணிடத்துப்பொருள் ௩ - கதிர் - மதி - தாரகை.

விந்துத்திரயம் ௩ - நாதம் விந்து கலை.

விருத்தித்திரயம் ௩ - அறிவுவிருத்தி - ஆநந்தவிருத்தி மனோவிருத்தி.

விருத்தி ௩ - மனோவிருத்தி - அகண்டாகாரவிருத்தி - விவேகவிருத்தி.

வினை ௩ - அறிந்துசெய்வினை - அறியாதுசெய்வினை - அசேதனஞ்செய்வினை; இவற்றிற்குதாரணம் - கோழியைத்தின்னக்கொண்டான் - இ

ஸந்தைதக்கனியைப் புழுவோடுசதித்தான் -
நஞ்சுகொன்றதுமுறைமெயகாண்க

வினைத்தொகைவகை - ௩ - இறந்தகாலவினைத்தொகை - நிகழ்காலவினைத்தொகை எதிர்காலவினைத்தொகை.

விரர்செய்கை ௩ - போர்க்குச்செல்லுதல் - போர்வெல்லுதல் - போர்புரிதொழில்பயிலல்.

வீரசைவதீட்சை ௩ - வீரசாமானியம் - வீரவிசேடம் - வீரநிராபாரம்.

வெண்பாவினம் - ௩ - வெண்டாழிசை - வெண்டுறை - வெளிவிருத்தம்; இவற்றுள் மூன்றடியாய் முதலிரண்டடியு நாற்சீராயு மீற்றடியொன்றுமட - வெண்பா, முடிவுபெற்றுவேற்றுத்தளை விரவவருவனவும் - சிந்தியல்வெண்பா, ஒருபொருண்மேல்மூன்றடுக்கிவருவனவும்வெண்டாழிசை மூன்றடி முதல் ஏழடியீறாகப் பின்புநின்றசிலஅடிகளில் சிலசீர்குறைந்து சில எல்லாவடியு மோரோசையாய்வந்தும் - அல்லது முன்பிற்சிலவடிகள் ஓரோசையாயும் பின்பிற் சிலவடிகள் மற்றோரோசையாயும் வருவது - வெண்டுறை, மூன்றடியினாலேனும் நான்கடியினாலேனு முற்றுப்பெற்று அடிதோறுமிறுதியில் ஒருசொல்லைத்தனிச்சொல்லாகக்

கொண்டுவருவது-வெளிவிருத்தம்.

வெள்ளி ௪ - இரசவெள்ளி வெள்ளங்கவெள்ளி அயவெள்ளி, இயற்கை வெள்ளியுஞ்சேர்த்து நான்கென்பார்.

வெறி-௩-இயற்கைவெறி-செயற்கைவெறி-ஏவல்வெறி.

வேந்தர்-௩-செங்கோல்வேந்தர் கொடுங்கோல்வேந்தர்-குறுநிலவேந்தர்.

வேந்தர்செய்கை-௩-பலகலைகற்றல்-படைமுகத்தஞ்சாதுசெல்லல் செங்கோல்செலுத்தல்.

வேள்வில்-௩- கருப்புவில்-இருப்புவில்-பூவில்.

வைசியர்-௩ - தனவைசியர் பூவைசியர் கோவைசியர், இவரோ - வணிகர் உழவர் இடையர்; இவர்க்குமுறையேதொழில் -பொருளீட்டல் - பயிர்செய்தல் - ஆன்காத்தல்.

வைரத்தின்குணம் ௩-ஒன்றோடுமறுபடாமை கீற்றில்லாமை வெள்ளொளியுடைமை.

வைராக்கியம்-௩- மயானவைராக்கியம்-பிரசவவைராக்கியம்-சத்துருவைராக்கியம்.

---

முத்தொகைமுற்றுப்பெற்றது.

ஆகத்தொகை-உ௱௬௰௯.

# நாற்றொகை.

அகவற்பா - ௪ - நேரிசையாசிரியப்பா - நிலமண்டிலவாசிரியப்பா - அடிமறிமண்டிலவாசிரியப்பா - இணைக்குறளாசிரியப்பா.

அகராதி - ௪ - பெயரகராதி, பொருளகராதி - தொகையகராதி - தொடையகராதி.

அங்கம் - ௪ - கரி - காலாள் - தேர் - பரி.

அசைச்சீர் - ௪ - ஓரசைச்சீர் - ஈரசைச்சீர் - மூவசைச்சீர் - நாலசைச்சீர்.

அடுக்குச்சொல் - ௪ - பெயர்ச்சொல்லடுக்கு - வினைச்சொல்லடுக்கு - இடைச்சொல்லடுக்கு - உரிச்சொல்லடுக்கு.

அத்தியாசலட்சணம் ௪ - மித்தை - இரதம் - இதரேதரம் - சத்தியம்.

அபாவம் - ௪ - முன்னின்மை - பின்னின்மை - என்றுமின்மை - ஒன்றிலொன்றின்மை.

அப்புவின்குணம் - ௪ - சத்தம் - பரிசம் - உருவம் - இரசம்.

அரண் - ௪ - மலை - காடு - மதில் - கடல்.

அளவு - ௪ - எண்ணல் - எடுத்தல் - முகத்தல் - நீட்டல்.

அனுபந்தம் ௪ அதிகாரி - சம்பந்தம் - பிரயோசனம் - விடயம்.

ஆச்சிரமம் - ௪ - பிரமசரியம் - இல்லாச்சிரமம் - வானப்பிரத்தம் - சந்நியாசம்; இவற்றுள் - ஆசிரியனிடத்தே தாதிவிரதங் காத்து விரதமின்றியிருப்பது பிரமசரியம், இல்லறம்வழுவாது மனைவியோடுகூடியிருத்தல் - இல்லாச்சிராமம், - மனைவியோடாயினுமனைவியைநீத்தாயினும் வனத்திற்புகுந்திருத்தல் வானப்பிரத்தம், முற்றத்துறந்திருத்தல் - சந்நியாசம். [யாரதம்.

இரதம் - ௪ - அதிரதம் - ஆரதம் சமரதம் - மத்தி

இராகத்தொகுதி - ௪ - இடம் - செய்யுள் - குணம் - காலம்; இவற்றுளிடம்பற்றியவிராகமைந்திணையிராகம், செய்யுட்பற்றியவிராகத்துள் வெண்பாவிராகம் சங்கராபரணம் - அகவவிராகந்தோடி - கலிப்பிராகம் பந்தவராளி - கலித்துறையிராகம் பைரவி தாழிசையிராகம்தோடி - விருத்தவிராகங் கலியாணி - காம்போதி மத்தியமாவதி - லவுடம், உலாவிராகஞ்சௌராட்டிரம் - தோடையவிராகஞ் - சௌராட்டிரம் நாட்டை, மங்கலராகம் - மங்கலகௌசிகம் தேவராத்திராகம், பூபாளம், பிள்ளைக்கவியிராகம் கேதாரகௌளம், குணம்பற்றிய விராகத்துள் - ஆகிரி - கண்டாராகம் நீலாம்புரி பியாகடம் புன்

ஞுகவராளி, சுக்கராகம் இரக்கவிராகங்க ளென்றிவராளியின்மேலாம் மெஞ்சசியிராக ம் காம்போதி சாவேரி தன்னியாசி, யுத்தவி ராகம் நாட்டை, காலம்பற்றியவிராகத்து ள் வசந்தகாலவிராகம் காம்போதி ஆசா வேரி தன்னியாசி; அன்றியும்மாலையிராகம் கலியாணி காபி கன்னடம் காம்போதி, யா மராகம் ஆகிரி; விடியலிராகம் இந்தோள ம் இராமகலி தேசாட்சரி நாட்டை பூபா ளம்; உச்சியிராகம்- சாரங்கம் தேசாட்சரி அன்றியும் ஆகிரி இந்தோளம் இராமகலி சாரங்கம் பூபாளம் நீக்கி நின்றமற்றவை யெக்காலத்தும் பொதுமைய.

இழிச்சொல் ௪- குறளை பொய் கடுஞ்சொல் ( ) பயனில்சொல்.

இறந்தகாலவிடைநிலை ௪ - த ட-ற என்றுமெ ய்களும்-இன் என்பனவுமாம்.

ஈடு ௪ - துய்ப்பிடு காய்ப்பிடு காலவளையிடு காலவளையிலிடு.

உண்டி ௪- உண்டல் தின்றல்-நக்கல்-பருகல்; இவற்றுள்-சோறுமுதலியவுண்டல், கறிமு தலியதின்றல், தேன்முதலியநக்கல், நீர்மு தலியபருகல்; அன்றியும்-கடித்தல் நக்கல் பருகல் விழுங்கல் சுவைத்தல், என வைத்

தெனக்கொள்வாருமுளர்.

உபயராசி-௪-மிதுனம்-கன்னி-தநுசு-மீனம்.

உபாயம் ௪-சாமம்-தானம்பேதம் தண்டம் அவையாவன- சமாதானத் தோடாயினும் பொருள்கொடுத்தாயினும் பிறரைப்பிரித் தாயினும்-படைகொண்டாயினும்-காரியங் கொள்ளல் இந்நான்குமரசர்க்குரியனவாம்.

உரை-௪-கருத்துரை-பதவுரை-பொழிப்புரை அகலவுரை; இவற்றுட் செய்யுட்கருத்து ரைத்தல்-கருத்துரை, சொற்றோறும் பத ப்பயனுரைத்தல்-பதவுரை, பொருட்டொ குத்துரைத்தல்-பொழிப்புரை, இலக்கண இலக்கியமெடுத்துக்காட்டிப்பொருள்விரி த்துரைத்தல்-அகலவுரை.

ஊறுபாடு-௪ எறிதல்-குத்தல்-வெட்டல்-எய்தல்.

ஓசை-௪-எடுத்தல் படுத்தல் நலிதல் விலங்கல்.

கணம்-௪-உயிர்க்கணம் வன்கணம் மென்க ணம்-இடைக்கணம்.

கணக்குவகை-௪-கூட்டல்-கழித்தல்-பெருக் கல் பிரித்தல்.

கணை-௪-மரக்கணை-மலர்க்கணை-வடிகணை- வைரக்கணை.

கதி ௪-தேவகதி மக்கட்கதி விலங்கின்கதி-நர கக்கதி.

கரணம்-௪-மனம்-புத்தி-சித்தம்-அகங்காரம்.

கலசம் ௪-பஞ்சத்தால் வருகலசம், பிணியால்வரு கலசம், கள்ளரால்வருகலசம், பேயால்வருகலசம்.

கலசம்-௪-தாபக்கலசம்-தூபிக்கலசம்-தீபக்கலசம் கும்பக்கலசம். தூபியென்பது முகடு.

கலைவயணி ௪-உறுப்புறுப்பிக் கலைவயணி-நிசர்தலைமைக்கலைவயணி ஐயக்கலைவயணி ஒருதொடர்ப்பொருட் கலைவயணி.

கவி-௪ ஆசு-மதுரம் சித்திரம்-வித்தாரம்-இவற்றுள்-பொருளடியாவணிமுதலியகொடுத்து மற்றொருவன் பாடுகவென்றவுடனே பாடுவோன்-ஆசுகவி, பொருட்செல்வம் சொற்செல்வம் தொடை-தொடைவிகற்பம் செறியவுருவகமுதலியவலங்காரத்தோடின்னிசைத்தாயமுதமுறப்பாடுவோன்மதுரகவி, மாலைமாற்றுச் சுழிகுளம் ஏகபாதம் சக்கரம் எழுகூற்றிருக்கை காதைகரப்பு கரந்துறை தூசங்கொளல் வாவண ஞற்றுப் பாதமயக்குப் பாவின்புணர்ப்புக்கூடசதுக்கம் கோமூத்திரி ஓரெழுத்தினம் ஒற்றெழுத்துத்தீர்ந்த வொருபொருட் பாட்டுச் சித்திரப்பாவிசித்திரப்பா வினாவுத்தரம்சருப்பதோபத்திரம் எழுத்துவரு

த்தன முதலிய மிலேறக்கவிதெரிந்து பாடுவோன் சித்திரக்கவி, மும்மணிக்கோவை பன்மணிமாலை பறம் லிவெண்பா தூசாங்கம் மடலூர்தல் கிரீடை இயல்இசை கூத்துப்பாசல்லாடத்துறை ஆனைமுதலியவிரித்துப்பாடுவோன் வித்தாரக்கவி.

காட்சி ச-ஐயக்காட்சி- திரிபுக்காட்சி-விகற்பக்காட்சி- நிருவிகற்பக்காட்சி-

காரணவகத்தினை -ச - கருத்தகாரணம்- முதற்காரணம்- துணைக்காரணம் - குறிப்புக்காரணம்.

கிரககேந்திரசதுட்டயம்-ச - லக்னகேந்திரம சதுர்த்தகேந்திரம்- சப்தமகேந்திரம்-தசமகேந்திரம.

கிரகபலக்குறைசதுட்டயம் -ச -மூன்றாமிடம் ஆறாமிடம்-எட்டாமிடம்- பன்னிரண்டாமிடம்; இவற்றைத்-திரிதியசட்டாட்டம விரையத்தானமெனவும்படும்.

கிரகபலசதுட்டயம் ச தனஸ்தானம் இலாபஸ்தானம் கேந்திரஸ்தானம் திரிகோணஸ்தானம்.

குணம்-ச- ஆடூஉக்குணமாவது- அறிவு - நிறை ஓர்ப்பு-கடைப்பிடி, மகடூஉக்குணமாவது நாணம்-மடம்-அச்சம் பயிர்ப்பு.

குலம் ௪ வருணங்காண்க

குருவணக்கம் - ௪ - ஆர்த்தம் - அங்கம் - தானம் - சற்பாவம்

கேள்வி ௪ - அறம் பொருள் - இன்பம் - வீடு; எனுநான்கினொடு அவற்றின் - வழிநிற்றலென ஐவகைப்படவும் - வழங்கும்.

கைக்கிளைத்திணைநிகழ்ச்சி ௪ - காட்சி ஐயம் துணிவு குறிப்பறிவு; இவற்றுள் - தலைமகன் தலைமகளைத் தனித்துழிக்காண்டல் காட்சி, தலைமகள் வடிவும் - காட்சிபெற்ற இடமும் - சிறப்புடைத்தாய்க்கண்டுழி நிகழ்வது ஐயம், மலர்முதலியவற்றின் - குறிப்புக்களாற்றெளிதல் துணிவு, பார்வைமுதலியவற்றினிகழ்ச்சியா னுள்ளக்கருத்தறிதல் குறிப்பு.

கொன்னைச்சொல் - ௪ - அச்சம் - பயமிலி - காலம் - பெருமை.

சதுரங்கவாட்டம் ௪ - குதிரையடிபந்தம் முகலாய் - கருநாடகம் கட்டாட்டம்.

சந்தானம் - ௪ - புட்பகிரி மெய்கண்டம் - வள்ளல் - ஆபரணம் - இந்நான்கிலுஞ் சந்தானமொட்டுக.

சநகாதியர் - ௪ - சநகன் - சநந்தனன் - சநற்குமாரன் - ~~சநற்சுசாதனன்~~.

சபை-௪-பிரமசபை-விஷ்ணுசபை-உருத்திர
சபை-இந்திரசபை-இராஜசபையுஞ்சேர்த்
தைந்தெனயாருமுனார்.

சயை:௪. அப்பிரதிட்டை-பிரதிட்டை-முத்திர
தை-சாத்திரதை.

சரணம்-௪-அருகசரணம்-சித்தசரணம்-சா
துசரணம்-தன்மசரணம்-

சராசி-௪-மேடம்-கடகம்-துலாம்-மகரம.

சரிதைந்கருத்தர்-௪-நந்தி-சனகர்-வேதவியா
சர்-சூதர்.

சரீரம்-௪-தூலம்-சூக்குமம்-காரணம்-மகா
காரணம்.

சாதனம்-௪-நித்தியாநித்தியவத்துவிவேகம்-
இகபரபுத்திராத்தபரயோக விராகம்-ச
மாதிசட்கசம்பத்தி முமூட்சுத்துவம்.

சாந்துவகை-௪-பீதம்-கலவை வட்டிகை-புவீ.

சிஷியருஷைசதுஷ்டயம்-௪-ஆத்மசிஷியரு
ஷை அங்கசிஷியருஷை-ஸ்தானசிஷியரு
ஷை-பாவசிஷியருஷை.

சித்து ௪-சீவன்-ஈசன்-கூடத்தன்-பிரமம்.

சிவபூசையியல்பு-௪-சரியை-கிரியை-யோகம்
ஞானம்.

சினைப்பெயர்-௪-ஆண்மைச்சினைப்பெயர்-
பெண்மைச்சினைப்பெயர்-ஒருமைச்சினைப்
பெயர்-பன்மைசினைப்பெயர்.

சினைமுதல் ௪ - ஆண்மைச்சினைமுதல் - பெண்மைச்சினைமுதல் - ஒருமைச்சினைமுதல் - பன்மைச்சினைமுதல்.

செய்யுள்வகை - ௪ - தொகைநிலைச்செய்யுள் - தொடர்நிலைச்செய்யுள் - குளகச்செய்யுள் - முத்தகச்செய்யுள்.

சொல் - ௪ - பெயர்ச்சொல் - வினைச்சொல் - இடைச்சொல் - உரிச்சொல்.

ஞானம் - ௪ - கேட்டல் - சிந்தித்தல் - தெளிதல் நிட்டை.

தபோகன்மசதுஷ்டயம் - ௪ - தவம் மந்திரம் யோகம் - கர்மம்.

தமிழெல்லைநாடு - ௪ - குணகடல் - குடகடல் தென்குமரி - வேங்கடம்.

திணை ௪ - அகம் - அகப்புறம் - புறம் புறப்புறம்

தேவகணிகையர் - ௪ - மேனகை அரம்பை உருவசி திலோத்தமை

தேவர் - ௪ - பவனர் வியந்தரர் சோதிடர் கற்பவாசிகர்.

தோற்றம் - ௪ பை முட்டை நிலம் வியர்வை இவைமுறையே சராயுசம் அண்டசம் உற்பீசம் சுவேதசம் எனப்படும்.

நால்வர் - ௪ - அப்பர் சம்பந்தர் சுந்தரர் மாணிக்கவாசகர்.

நாற்றிசையாவன குணதிசை பச்சிமதிசை, பூர்வதிசை உத்தரதிசை; இவைமுறையே கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு நாற்பாங்கெனவுமாம்

நித்தியகர்மசதுஷ்டயம் ௪-கிரசகிரம், சாந்தராயணம்-நித்தியம்-நைமித்தியம்.

நிலை ௪-வைசாகம் மண்டலம் ஆலீடம் பிரத்தியாலீடம் இவை நான்கும் விற்றொடுத்தம்பினை யெய்வார்க்குரியநிலை இவற்றுள் ஒருகாலி னின்றொருகால்முடக்கல் வைசாகநிலை, இருகாலும் பக்கல்வளைய மண்டலித்தலே-மண்டலநிலை; வலக்கால்மண்டலித்திடக்கால் முந்துநலே-ஆலீடநிலை; வலக்கால்முந்துற் றிடக்கான் மண்டலித்தலே பிரத்தியாலீடநிலை.

நூல்கேட்கும்வகை ௪-பொருள் பயன் அதிகாரி இயைபு.

நூல்-௪-முதனூல் வழிநூல் சார்புநூல் எதிர்நூல்.

நூற்சம்பந்தம்-௪- ஆநந்தரியம் விடயம், அதிகாரி, பிரயோசனம்; ஆனந்தரிய நீக்கிச்சம்பந்தங்கூட்டி நான்கென்பாருமுளர் சம்பந்தம் பாட்டென்னும் பொருட்சொல்லாற் கொளப்படும்.

பகுபதம்-௪-காரணப்பெயர் - தெரிநிலைவினைப்பெயர் குறிப்புவினைப்பெயர் வினையாலணையும்பெயர்.

பக்கம்-௪-வலப்பக்கம் இடப்பக்கம் முன்பக்கம பின்பக்கம்

படைவகுப்பு ௪-அணி உண்டை ஒட்டை [யூகம்]

பட்சம் - ௪ - விருத்தி பரிணமம் ஆரம்பம் விவர்த்தகம்.

பண்-௪-பாலை குறிஞ்சி-மருதம் செவ்வழி.

பதவி-௪-சாலோகம் சாமீபம் சாரூபம் சாயுச்சியம்- இவற்றுள்-கடவுளுலகத்துவாழ்தல் சாலோகம்- கடவுள் சமீபத்தில்வாழ்தல்சாமீபம் கடவுள்வடிவமாவாழ்தல் சாரூபம்- கடவுளுடன் கலந்துவாழ்தல் சாயுச்சியம்.

பரிட்சை-௪- அசுவபரிட்சை, கெசபரிட்சை, பூமிபரிட்சை, இரத்தினபரிட்சை

பா -௪- வெண்பா ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பா இவற்றுள் மருட்பாவொன்றுகூட்டி ஐந்தெனவும் வழங்கும்.

பாதம் - ௪- தருமநிச்சயம் விவகாரநிச்சயம், சரித்திரநிச்சயம், இராசசாசனநிச்சயம்.

பாயிரங்கூறுவர்-௪- தன்னாசிரியன், தன்னோடு கற்றோன், தன்மாணாக்கன், தகுமுரைகாரன்

புண்ணியதோற்றம்- ௪- தவம், ஒழுக்கம், கொடை, கல்வி.

புலமையோர் - ௪ - கவி கமகன் வாதி வாக்கி
இவருள் ஆசு மதுரம் சித்திரம் வித்தார
ம் என்னுநாற்கவிகளைப்பாடுவோன் கவி,
அரும்பொருளைச் செம்பொருளுடையா
கக்காட்டி விவகரிப்போன் கமகன், கார
ணமுமேற்கோளுமெடுத்துக்காட்டிப் பு
றங்கோண்மறுத்துத் தன்மத நிறுத்துப
வன் வாதி; அறம் பொருள் இன்பம் வீடு
என்னுநாற்றிறங்களைக்கேட்க வேட்க விரித்
துக்கூறுவோன் வாக்கி. [பூ
பூ-௪ கொடிப்பூ-கோட்டுப்பூ-நீர்ப்பூ-புதர்ப்
பெண்பால் -௪- உப்பை - ஔவை - உறுவை-
வள்ளி. [அத்தினி.
பெண்வகை ௪ பதுமினி சித்தினி சங்கினி
பெயர்-௪ பொருட்பெயர் - வினையாலணையு
ம்பெயர்- தொழிற்பெயர் பண்புப்பெயர்.
பொன்வகை- ௪ - ஆடகம், கிளிச்சிறை, சாத
ரூபம் சாம்பூநதம்-
போகசதுஷ்டயம்- ௪- ஸ்தூலபோகம்-சூட்சு
மபோகம் காரணபோகம் நித்தியசர்வசா
ட்சி போகம்.
மடநல்லார்குணம்- ௪- நாணம் மடம் அச்
சம் - பயிர்ப்பு.
மானுடகுணம்-௪-ஞானம், கன்மம், ஐசுவரி
யம், வைராக்கியம்.

மொழி ௪ - சங்கிரதம் சங்கதம் அவப்பிரஞ்சனம் பாகதம்.

யாழ் ௪ - பாலையாழ் குறிஞ்சியாழ் மருதயாழ் செவ்வழியாழ்.

யாழ்வகை - ௪ - பேரியாழ் சகோடயாழ் மகரயாழ் செங்கோட்டியாழ்-

யுகம் - ௪ - கிரேதாயுகம் - திரேதாயுகம் - துவாபரயுகம் - கலியுகம்.

வண்டுவகை - ௪ - பொன்வண்டு - கரிவண்டு - தேன்வண்டு - இசைவண்டு -

வருணம் - ௪ - பிரம - சத்திரிய - வைசிய - சூத்திர - இவற்றைச்சாதியென்றுங்கூறுவர் - இவர்க்குமுறையே வருணத்திரம் - வேதியர்க்கு வேதம் வேந்தர்க்குவீரம் - வணிகர்க்கு - நிதியம் சூத்திரர்க் காசாரம்.

வழி ௪ - அல்வழி - வேற்றுமைவழி - அடங்காவழி - பொதுவழி -

வாக்கு - ௪ சூக்குமை - பைசந்தி - மத்திமை - வைகரி.

வானோர்வரம் - ௪ - இலகு சூக்குமம், அட்சயம் - பிரகாசம் - இவைகனமின்மை, கண்டிப்பின்மை - கேடின்மை விளக்கம்.

விகாரம் - ௪ தோன்றல் திரிதல் - கெடுதல் - நிலைமாறுதல்.

வெண்பாவாய்பாடு - ௪ - காசு - நாள் - மலர் - பிறப்பு.

வினைவழி - ௪ - தனு - கரணம் புவனம் - போகம்.

வேதகர்த்தர்கள் - ௪ - நந்தி சனற்குமாரன் வேதவியாசன் சூதன்.

வேதம் ௪ - இருக்கு தைத்திரியம் சாமம் அதர்வணம், அன்றியும் உபவேதம் ஆயுள்வேதம் அருத்தவேதம் தனுர்வேதம் காந்தருவவேதம்.

வேதவாக்கியம் - ௪ - விதி - நிட்டேதம் - சித்தார்த்தபோதகம், தத்தொம்சிமாவாக்யம.

வேல்வகை - ௪ - வெள்வேல் - கருவேல் - தல்லுடை டேவல்.

---

நாற்றொகைமுற்றுப்பெற்றது

ஆக தொகை - ௱௰௪.

# ஐந்தொகை.

அகம் - ரு - குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல்-

அகிற்கூட்டு - ரு - சரிகாசு ஏலம் கருப்பூரம் சந்தனம், தேன்-

அக்கினி - ரு - இராகம் காமம் கோபம் சடம் தீபனம்.

அங்கதண்டம் - ரு - கால், கை, தலை, பெரு மைந்து றுப்பு நின்றேதாயவணங்கல்

அங்கம் - ரு - திதி வாரம் கரணம் யோகம் நட்சத்திரம்

அடி - ரு - அளவடி சிந்தடி குறளடி நெடிலடி கழிநெடிலடி-

அடி - ரு - பெயரடி வினையடி இடையடி உரியடி பண்படி

அதிகாரிகள் - ரு - கருமி முமுட்சி அப்பியாசி அனுபவி ஆரூடன்-

அபாவம் - ரு - என்றுமபாவம், இன்மையபாவம், ஒன்றினொன்றபாவம், உள்ளதனபாவம், அழிவுபட்டபாவம்.

ஆப்புவின்கூறுபாடு - ௫ - நீர் உதிரம் மூளை மச்சை சுக்கிலம்-

ஆமுதம் - ௫ - பால், சருக்கரை, தேன், நெய், வாழைப்பழம்

அரசர்க்குக்குழு - ௫ - மந்திரியர், புரோகிதர், சேனாபதியர், தூதர், சாரணர்.

ஆண்பருவம் ௫ - பாலியம், குமாரம், மனனம், மூப்பு, விருத்தம். இவர்க்கு முறையே வயசு (௰௬) (௩௨) (௪௮) (௬௪) இவற்றின்மேற்பட்டது - விருத்தம்-

ஆயுதம் - ௫ - சங்கு சக்கரம் வாள் தண்டு வில்.

இசைத்துறை - ௫ - ஆயுத்தம், எடுப்பு, உற்கிரகம், சஞ்சாரம், இடாயம்-

இரத்தினம் - ௫ சுகந்தி பொன் மரகதம் மாணிக்கம், முத்து-

இரேகை - ௫ - அன்னரேகை சங்கரேகை சக்கரரேகை பதுமரேகை விலங்கிரேகை - இவை கரலட்சணம் - விலங்கிரேகை - தீமை.

இலாகிரி - ௫ - சாதிக்காய் சாதிபத்திரி கிராம்பு குரோசனி கஞ்சா-

இலிங்கம் - ௫ - பிருதிவிலிங்கம் காஞ்சியில் அப்புலிங்கம் திருவானைக்காவில் தேயுலிங்கந் திருவண்ணாமலையில் - வாயுலிங்கம் - காளத்தியில் ஆகாயலிங்கஞ் சிதம்பரத்தில்

இவையே பஞ்சபூத வடிவங்களான பிரதா
னபஞ்சலிங்கம்.

இழிதிணை - ரு - விலங்கு, பறவை, மரம், நிலம் நீர்.

இறந்துமிறவாதவர் - ரு - கவியீச்சுரன் தியாகி சுத்தவீரன், செங்கோல்வேந்தன், தருமஞ் செய்தோன்.

ஈச்சுரன்முகம் - ரு - ஈசானம், தற்புருடம், அகோரம், வாமம், சத்தியோசாதம் இவற்றுள் ஈசானமனைத்துமாளுதல், தற்புருடங் காத்தல், அகோரமழித்தல், வாமம் விளக்கல், சத்தியோசாதம் தோற்றுவித்தல்.

உபவாயுபஞ்சகம் - ரு - நாகன் - கூர்மன் - கிரிகரன் - தேவதத்தன் - தனஞ்சயன்.

உப்பு - ரு கறியுப்பு வெடியுப்பு வளையலுப்பு இந்துப்பு கல்லுப்பு.

உயிரிருந்துமுயிரற்றவர்கள் - ரு - தீராப்பிணியன் உலோபன், தரித்திரன், உழைத்துண்பவன், ஐயாமற்பாவிப்பான்.

உரையிலக்கணம் - ரு - பதம், பதப்பொருள் வாக்கியம், கேள்வி, மறுமொழி.

உலோகம் - ரு - பொன் - வெள்ளி - செம்பு - இரும்பு ஈயம்.

எழுத்துத்தானம் - ௫ - பாலன் குமரன் அரசன் விருத்தன் மரணம் இவற்றிற்குமுறையே யெழுத்துக்களாவன; அ-ஆ, இ-ஈ ஐ, உ-ஊ ஔ, எ ஏ, ஒ-ஓ; பாட்டுடைத்தலைவன் பேரெழுத்தைப் பாலதானமாகக் கொண்டெண்ணப்படும் இவற்றின் முன்னையமூன்றும் நன்மைபயக்கும் பின்னையிரண்டுந் தீமைபயக்கும்.

எழுத்துவிதம் - ௫ - ஆணெழுத்து, பெண்ணெழுத்து, அலியெழுத்து, அமிர்தவெழுத்து, நஞ்செழுத்து.

ஐம்புலனுகர்ச்சியிலிறப்பன - ௫ - சுவையாலிறப்பதுமீன் நாற்றத்தால்வண்டு பரிசத்தால் யானை ஓசையாலசுணம் ஒளியால்விட்டில.

ஒட்டுப்பிணி - ௫ - கக்குவான், கண்வலி, காய்ச்சல், சிரங்கு, வசூரி.

கதி - ௫ - மல்லகதி மயூரகதி வல்லியகதி வானரகதி இடபகதி.

கருத்தாக்கள் - ௫ - அயன், அரி, உருத்திரன், சதாசிவன் மகேச்சுரன், இவர்க்குமுறையே பஞ்சகிர்த்தியமாவன சிருட்டி திதி சங்காரந் திரோபவம் அநுக்கிரகம்.

கருமேந்திரியம் - ௫ - வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம்.

கருமேந்திரியத்தின்றொழில் - ரு - வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆநந்தம்.

கருமேந்திரியகாரியம் - ரு - வசனுதியாய் வழங்குகை உருபம், மாயையளவு மத்தொழில் வழங்குகை சுருபம், சூக்குமத்துக்குத் தூலம்போல நிற்றல் சுயாபம், தொழில் காரணமாக்கொள்ளல் விசேடம், யொழிநீக்க நீங்குகை சுத்தி.

கல்யாணம் - ரு - சொக்காவதானம் மந்தராபிஷேகம் மகாப்பிரத்தானம் கேவலோத்பத்தி பரிநிர்வாணம்.

கற்பிலக்கணம் - ரு - உள்ளமகிழ்ச்சி, ஊடல், ஊடலுணர்த்தல், பிரிவு, பிரிந்துழி வரும் விகற்பம்.

கன்னிகை - ரு - அகலியை, துரோபதை, சீதை தாரை, மண்டோதரி.

காப்பியம் - ரு குண்டலகேசி, சிந்தாமணி, சிலப்பதிகாரம் மணிமேகலை, வளையாபதி.

காயம் - ரு - பெருங்காயம், வெண்காயம், சுக்கு திப்பிலி மிளகு.

கிரகபலம் - ரு - நட்பு - ஆட்சி - உச்சம் - பகை நீச்சம்.

குருகுலாதிபர் ரு - தருமன் வீமன் - அருச்சுனன் - நகுலன் - சகாதேவன்.

குரவர்-ரு-அரசன், உபாத்தியாயன், தந்தை தேசிகன், மூத்தோன்

கைத்தொழில் ரு எண்ணல் எழுதல் இலேகிய ஞல்-பூத்தொடுத்தல், யாழ்வாசித்தல்-

கொச்சகக்கலிப்பா-ரு-தரவுகொச்சகக்கலிப்பா தரவிணைக்கொச்சகக்கலிப்பா சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா பஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா மயங்கிசைக்கொச்சகக் கலிப்பா.

கோசம்-ரு-அன்னமயகோசம், பிராணமய கோசம், மனோமயகோசம், விஞ்ஞானமய கோசம் ஆனந்தமயகோசம், அவையாவன உடல் அன்னமயகோசம், கருமேந்திரியமும் பிராணனும் பிராணமயகோசம், கருமேந்திரியமும், மனமும் மனோமயகோசம், ஞானேந்திரியமும் புத்தியும் விஞ்ஞானமயகோசம், அவித்தை ஆநந்தமய கோசம்.

கோலம்-ரு-சித்திரமூலம், சுக்கு, செவ்வியம் திப்பிலி, திப்பிலிமூலம்-

கௌடம்-ரு-சுத்தசௌடம் கானகுடசம் சாரசுவதம் உற்கலம் மைதுலை-

கௌவியம்-ரு-கோசலம், கோமயம், பால் தயிர், நெய்.

சத்தகருவி - ரு - தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, கண்டக்கருவி இவையேசத்தத்துக்கைந்துகாரணம்-

சத்தி ரு சிற்சத்தி பராசத்தி இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்தி, அவையாவன உயிர்க்கொளியாய் நிற்பதுசிற்சத்தி, பிராணமுதலிய வாயுவாக நிற்பதுபராசத்தி, பஞ்சபூதமாக நிற்பது இச்சாசத்தி, ஐம்பொறியுணர்ச்சியாகநிற்பது ஞானசத்தி வினைத்துணையாக நிற்பது கிரியாசத்தி-

சயனம் - ரு - இலவம்பஞ்சு செம்பஞ்சு வெண்பஞ்சு மயிர் அன்னத்தூவி இவையேபஞ்சசயனம்-

சாரம் - ரு - நவச்சாரம் யவச்சாரம் சத்திசாரம் ஏமச்சாரம் சீனிச்சாரம்-

சிவதத்துவம் - ரு - சுத்தவித்தை இச்சுரம் சதாக்கியம் சத்தி சிவம், அவையாவன ஞானமேறிக்கிரியை குறைந்தது சுத்தவித்தை, ஞானங்குன்றிக் கிரியையுயர்ந்தது இச்சுரம், ஞானங்கிரியையொத்தது சதாக்கியம், கிரியை நாடல்சத்தி; ஞானமொன்றல்சிவம்

சூதகம் - ரு - சனனசூதகம், மரணசூதகம், சண்டாளர்நீர்தோய்தல், சுராபானம்பண்ணல், பொய்கூறல்-

சைவதலத்தோர்முத்திரை-ரு உருத்திராக்கம், கமண்டலம், காவிப்புடவை, சடை, தண்டு.

ஞானேந்திரியம் - ரு - சிரோத்திரம், தொக்கு, சட்சு, சிங்ஙுவை, ஆக்கிராணம்-

ஞானேந்திரியத்தின்றொழில் ரு சத்தம் பரிசம் உருபம் இரசம் கந்தம்-

தந்தையர்-ரு-பிறப்பித்தோன், கற்பித்தோன் மணமுடிப்பித்தோன், அன்னந்தந்தோன் ஆபத்துக்குதவினோன்-.

தந்திரம் - ரு - அசம்பிரோட்சியகாரித்துவம் அத்தநாசம் - சந்திவிக்ரகம் - சுகிர்லாபம் மித்திரபேதம்-

தரு - ரு - அரிச்சந்தனம் கற்பகம் சந்தானம் பாரிசாதம் மந்தாரம்-

தனுஷ்டாபஞ்சகநட்சத்திரங்கள் - ரு - அவிட்டம்-சதயம்-பூரட்டாதி - உத்திரட்டாதி இரேவதி.

தாயர்-ரு- பாராட்டுந்தாய், ஊட்டுந்தாய், முலைத்தாய், கைத்தாய், செவிலித்தாய் அன்றியும் அரசன்தேவி, குருவின்தேவி, அண்ணன்றேவி, தன்றேவியையீன்றாள், தன்னையீன்றாள்-

தாரதம்மியபக்குவபஞ்சகம்-ரு - தாரித்திரன், ஆட்டியன்-சாமி-பக்தன், மூடன்.

தாழிசை-௫- அகவற்றாழிசை வெண்டாழிசை வஞ்சித்தாழிசை கலித்தாழிசை குறட்டாழிசை.

தாளம் - ௫ - சச்சற்புடம், சாசற்புடம், சட்பிதாபுத்திரிகம், சம்பத்துவேட்டம், உற்கடிதம்.

திணை - ௫ - குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல் இவற்றுள் மலைச்சார்புகுறிஞ்சி நீரில்லாக்கடுநிலம் பாலை, காட்டுச்சார்பு முல்லை, வயற்சார்பு மருதம், கடற்சார்பு நெய்தல்.

திரவிடம்-௫- திரவிடம் ஆந்திரம் கன்னடம் மகாராட்டிரம் கூர்ச்சரம்.

திரவியம் ௫ மலைபடுதிரவியம் காடுபடுதிரவியம் நாடுபடுதிரவியம் நகர்படுதிரவியம் கடல்படுதிரவியம் இவற்றுள் மலைபடுதிரவியம் மிளகு கோட்டம் அகில் தக்கோலம் குங்குமம், காடுபடுதிரவியம் இருல் தேன் அரக்கு மயிற்பீலி நாவி, நாடுபடுதிரவியம் செந்நெல் சிறுபயறு கரும்பு வாழை செவ்விளநீர், நகர்படுதிரவியம் அரசன் பித்தன் மந்திரி யானை கண்ணாடி, கடல்படுதிரவியம், உப்பு முத்து பவளம் சங்கு ஒக்கோலை.

திருமாலாயுதம் - ௫ - சக்கரம் தனுசு. வாள் தண்டு சங்கு -

தினை - ௫ - கருந்தினை செந்தினை வெண்டினை சிறுக்குத்தினை பெருந்தினை -

தீர்க்கம்-௫-உதரம கண் கை மார்பு மூக்கு

தென்யானக்ஷத்திரம்-௫-அனுஷம் கேட்டை மூலம் பூராடம்-உத்திராடம்.

தேயுவின் கூறுபாடு - ௫ - சோம்பு, ஆகாரம் நித்திரை, பயம், மைதுனம்.

தேவயோகமாதர் - ௫ - அரப்பை, மேனகை உருப்பசி, திலோத்தமை திருதாயி.

நாவி-௫ சூத்திரநாவி, நீலகண்டநாவி, வெறிவிஷநாவி பறங்கிநாவி, பிரபநாவி

நியமம் - ௫ - தவம், ஆகமநூலோதல், சிவபூசை மனமடக்கல், சவுசஞ்செய்தல் -

பஞ்சநீராஞ்சனம்-௫- சட்டாங்சம் சீலை தளர், தாடனை விளக்கு

பஞ்சபட்சி-௫-வலலூறு ஆந்தை காகம் கோழி மயில் இவற்றிற்கு முறையே எழுத்து - அ - இ - உ - எ - ஒ.

பஞ்சவில்வம் - ௫ - ஆத்தி மா முட்கிளுவை முல்லை வில்வம்-

பஞ்சபாணம்-௫ முல்லை அசோகு வனசம் சூதம் நீலம்; இவை முறையே தைக்குமிடம்

உச்சி நெற்றி நெஞ்சு முலை குய்யம்-
பஞ்சபாணவத்தை-ரு-சுப்பிரயோகம் விப்பி
ரயோகம் சோகம் மோகம் மரணம-
பஞ்சபிராணன்-ரு-அபானன் உதானன் ச
மானன் பிராணன் வியானன்.
பஞ்சபூதம்-ரு-பிருதிவி அப்பு தேயு வாயு
ஆகாயம்.
பஞ்சமாயெக்கியம்-ரு-அக்கினிகருமம், தேவ
பூசை, பிதிர்பூசை, விருந்தோம்பல், வேதா
த்தியாயனம்.
பஞ்சபிரமம்-ரு-ஈசானமூர்த்தி, தற்புருட
மூர்த்தி, அகோரமூர்த்தி, வாமனமூர்த்தி
சத்தியோசாதமூர்த்தி-
பஞ்சமுத்திரை-ரு தேனு பதுமம் சூலம், மக
ரம், சுருக்கு-
பஞ்சமூலம்-ரு-செவ்வியம் சித்திரமூலம் க
ண்டு பாங்கி பேரரத்தை சுக்கு-
பஞ்சார்க்கம்-ரு-இந்திரவில் கேது தூமம்
பரிவேடம் விதியாதம்.
பஞ்சாஸ்திகாயம-ரு-சீவாஸ்திகாயம் அஜீவா
ஸ்திகாயம் தர்மாஸ்திகாயம அதர்மாஸ்தி
காயம ஆகாசாஸ்திகாயம-
பண்பு-ரு-வண்ணப்பண்பு, வடிவப்பண்பு

சுவைப்பண்பு அளவுப் பண்பு இருபெய ரொட்டுப்பண்பு-

பாஷாணம் ௫-வெள்ளைபாஷாணம் செவரி பாஷாணம் தொட்டிபாஷாணம் பரங்கி பாஷாணம் எலிபாஷாணம்-

பாதகம் -௫- கெடுசிந்தை, கோபம், பொறாமை, வஞ்சம், துர்ப்புத்தி; அன்றியும் - கொலை, பொய் களவு கள்ளருந்தல், குருநிந்தை இவையே பஞ்சமாபாதகம்

பாதுகை - ௫ - மரப்பாதுகை தந்தப்பாதுகை வெண்பொன்பாதுகை செம்பொற் பாதுகை தோற்பாதுகை.

பால் ௫-ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பல.

பால்-௫ முடி கொண்டை சுருள் குழல் பனிச்சை - இவற்றுள் மயிரை யுச்சியின்முடித்தலேமுடி - பக்கன்முடித்தல் கொண்டை பின்னேசொருகல் சுருள் - சுருட்டிமுடித்தல்குழல் - பின்னிவிடுதல்பனிச்சை.

பித்தக்குணம்-௫ - மயக்கம் உலர்த்தி, பிதற்றல், கசத்தல்-தள்ளல்.

பிருதிவியின் கூறுபாடு - ௫ - நரம்பு தோல் எலும்பு, தசை, மயிர்.

புராணவுறுப்பு- ௫ - சரிதைத்தலைவர்வம்சம் பிரபஞ்சத்தோற்றம், பிரபஞ்சநாசம்

னுக்களரசாட்சி, மனுவம்சவரலாறு.

புலமை - ரு - பாடற்புலமை, படித்தற்புலமை, வாதுவெல்புலமை, நூற்குணஞ்செய்புலமை, ஒதுவித்தற்புலமை.

பிருதிவியின்குணம் - ரு - சத்தம், பரிசம், உருபம், இரசம், கந்தம்.

புலன் ரு - சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்.

புலி ரு - சிறுத்தைப்புலி கழுதைப்புலி வேங்கைப்புலி கரும்புலி செம்புலி.

பூசை - ரு - தியானபூசை, விக்கிரகபூசை, புராணபூசை, திருவடிபூசை, தோத்திரபூசை.

பூதம் - ரு - நிலம் நீர் தீ காற்று விசும்பு இவையே பிருதிவு அப்பு தேயு வாயு ஆகாயம்.

பூதம் ரு வேதாளம், பிர்மராக்ஷதன் இருளன் மாடன் கருப்பன்.

பெண்பருவம் - ரு - வாலை, குமரி, தெரிவை, பேரிளம்பெண், விருத்தை இவர்க்கு முறையேவயசு (அ) (கஅ) (உஅ) இவற்றிற்கு மேற்பட்டவரெல்லாம் விருத்தையர்.

பெண்கள்சாதிபேதம் - ரு - தெய்வசாதி - மக்கட்சாதி, இராக்கதசாதி, பூதசாதி, மிருகசாதி

பொறி - ரு - மெய் வாய் கண் மூக்கு செவி-

பொன்னிலக்கணம் - ரு - புடத்துக்குநிற்றல் ஆணிக்குறல், நின்றுருகல், கணங்காட்டல்,

கமபிக்கிவருதல்-

பொன்னுலகப்பொருள் - ரு - சங்கநிதி பதுமநிதி - கற்பகத்தரு காமதேனு - தேவாமிர்தம்

மரகதக்குணம் - ரு - புல்லினிறம், கிளியிறகினிறம், செந்நெல்நிறம், தாமரைநிறம், பொன்வண்டுநிறம.

மாணிக்கக்குற்றம் - ரு - பிறநிறச்சார்பு, புள்ளி, புள்ளடி, கீற்று, தராசம்-

மாயைலட்சணம் ரு - அசத்து, சடம், துக்கம், அநித்தம், கண்டம்-

மாயவித்தை - ரு - காட்டல், மறைத்தல், அழைத்தல், ஆக்கல், கொடுத்தல்-

மாயை ரு - தமம் மாயை மோகம் அவித்தை அநிரதம்; அவையாவன சீவகை தன்னியத்தை, மறைக்கையாற்றமம், சகத்துரூபமான வன்னிதாத் தோற்றத்துக்குக் காரணமாகையான் மாயை, விடரீதஞான முண்டாக்குகையான் மோகம், உணர்வழிக்கையாலவித்தை, சத்துருபத்துக் கன்னியமாகையால நிரதம்.

முரசு - ரு - புத்தமுரசு - கொடைமுரசு செயமுரசு சுபமுரசு அசுபமுரசு-

முன்னிலைப்பெயர் - ரு - நீ நீர் நீயிர் நீவிர் எல்லிர்-

மூலம்-ரு-சுக்கு திப்பிலி திப்பிலிமூலம்செ வ்வியம் சிறுதேக்கு-

யாகத்தம்பம் ரு-வச்சிரத்தம்பம் இருப்புத் தம்பம் செம்புத்தம்பம் வெள்ளித்தம்ப ம் பொற்றம்பம்.

யாகம் - ரு - பிரமம் தெய்வம் பூதம் பிதிர் மானுடம் இவற்றுள் வேதமோதல் பிர மயாகம், ஓமம்வளர்த்தல் தெய்வயாகம், பலியீதல் பூதயாகம் தர்ப்பணமுடித்தல் பிதிர்யாகம் இரப்போர்க் குணவுமுதலி யவீதலே மானுடயாகம்.

யாக்கைக்குணம்- ரு-சோம்பலின்மை, தூக்க மின்மை, வியாதியின்மை, மயக்கமின்மை வருத்தமின்மை.

யாக்கைக்குற்றம்- ரு கொட்டாவி, நெட்டை குறுகுறுப்பு, கூன்கிடை, நட்டுவிழல்.

யோகம்-ரு மந்திரயோகம், பரிசயோகம், பா வயோகம், அபாவயோகம், மகாயோகம் இ வற்றை நிருத்தியாசன வடிவமென்பாரு முளர்.

யோகம்-ரு-மௌனம் நிட்டை மனவசப்படு த்தல் நடக்கையிற்றியானம், கிடக்கையிற் றியானம்-

வண்ணம் - ரு- வெண்மை கருமை செம்மை

பொன்மை பசுமை.

வாக்குக்குற்றம் - ௫ - பொய்சொல்லல், வாதுகூறல், புறங்கூறல், வசைகூறல், கோட்சொல்லல்.

வாசம் - ௫ - இலவங்கம் - ஏலம் - கருப்பூரம் - சாதிக்காய் - தக்கோலம்.

வாதம் - ௫ - மாயவாதம், தந்திரவாதம், மந்திரவாதம், சாலவாதம், உண்மைவாதம் இவை யிரசவாதம்.

விரை - ௫ - கோட்டம், சந்தனம், அகில், தகரம், துருக்கம்.

வினா - ௫ - அறியான்வினவல், அறிவொப்புக்காண்டல், ஐயமறுத்தல், அவனறிவுதான்கோடல், மெய்யவற்குக் காட்டல்.

வினையடக்கம் - ௫ - முதனிலை தொழிற்பெயர் முற்று பெயரொச்சம் வினையெச்சம்.

வினாவெழுத்து - ௫ - ஆ - எ - ஏ - ஓ - யா.

ஐந்தொகைமுற்றுப்பெற்றது.

ஆறுதொகை - ௱௯௫.

# ஆறு தொகை.

அகவல்-௬- அகப்பாவகவல் புறப்பாவகவல் நூற்பாவகவல் உறுப்பினகவல் சித்திரவகவல் ஏந்திசையகவல்.

அங்கம் ௬-மந்திரம் வியாகரணம் நிகண்டு சந்தோவிசிதி நிருத்தம் சோதிடம்; இவற்றை மந்திரவாதம் தருக்கவாதம் சொல்லிலக்கணம் பாடற்கிலக்கணம் ஆடற்கிலக்கணம் சோதிடசாத்திரம் என்றும்வேதாங்கமென்றுஞ் சொல்லுவார்கள்.

அதமத்தொழில்-௬-சேவகம் பிச்சைவாங்கல் வியாபாரம் சவிபாடியேற்றல் கருமதானங்கொள்ளல் முறிப்படல்.

அத்துவா-௬-மந்திரம் பதம் வன்னம் புவனம் தத்துவம் கலை

அரசியல்-௬- படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண்.

அறிவுள்ளவுயிர்கள் -௬-புல்-ஓரறிவுயிர் நந்து ஈரறிவுயிர் சிதல் மூவறிவுயிர் வண்டு நான்கறிவுயிர் பறவை ஐயறிவுயிர் மனிதர் ஆறறிவுயிர் - தொல்காப்பியத்திற்காண்க.

ஆசனமைப்பு-௬-சாசனம் வெற்றிபடித்தி

ரம், ஆக்கினேயபத்திரம், அறிக்கையபத்திர
ம், நியந்தயபத்திரம், அருள்புரியபத்திரம் என
ன ஆறுவகைப்படும்.

ஆகமமென்பது — ௬ — தந்தையிடத்தினின்றே
னும் திதியைக்கண் டெடுத்தலி னாலேனு
மடைவதும் — தானத்தாலடைவதும் கிரயத்
தாலடைவதும் சௌவுரியத்தா லடைவது
ம் மனைவியாலடைவதும், சந்ததியில்லாத
தாயாதனமுதலானவனிடத்தினின் றடைவ
துமென ஆறுவகைப்படும்.

ஆசனம் — ௬ — சிங்காசனம் தருப்பையாசனம
தோலாசனம மணியாசனம மடலாசனம
மரவாசனம்.

ஆதாரம் — ௬ — மூலாதாரம் சுவாதிட்டானம்
மணிபூரகம் — அநாகதம் — விசுத்தி — ஆஞ்ஞை
இவற்றிற்குமுறையேயிடம் — குதம் — குய்
யம் — நாபி — இதயம் — அடிநா — நெற்றி; இவற்
றிற்குமுறையே தேவதைகள் — விநாயகர் —
பிரமன் விஷ்ணு — உருத்திரன் — மகேச்சு
ரன் — சதாசிவமென்பர்.

இருதுகாலம — ௬ — வசந்தருது கிரீஷ்மருது
வருஷருது சரருது ஏமந்தருது சசிருது
இவை சித்திரைமாதமுதலாக விரண்டிர
ண்டாக ஒவ்வொரு ருது வரும்.

இச்சுரன்முக்கியகுணம் - ௬ - சருவஞ்ஞத்துவம் சருவேச்சுரத்துவம் சருவநியாதிருத்துவம் சருவாந்திரியாமித்துவம் சருவகற்பிதத்துவம் சருவசத்தித்துவம்; அன்றியும் தன்வயத்தனாதல் முதலிலனாதல் உடம்பிலனாதல் எல்லாநலமுமுளனாதல் எங்கும் வியாபகனாதல் எவற்றிற்குங்காரணனாதல்.

இறு - ௬. இயல்பீறு, விதியீறு, உயிர்முதலுயிரீறு, மெய்முதன்மெய்யீறு, மெய்முதலுயிரீறு, உயிர்முதன்மெய்யீறு.

உட்சமயம் - ௬ - வைரவம் வாமம் காளாமுகம் மாவிரதம் பாசுபதம் சைவம் இவற்றின் விரிவுபேதம் (௨௬) சமயம் (௬௮) றிகாண்க.

உட்பகை - ௬ - காமம் குரோதம் உலோபம் மோகம், மதம், மார்ச்சரியம்.

உத்திரிவகை - ௬ - மந்தர தீட்சை (௰௧) பத தீட்சை (௮௧) புவன தீட்சை ([illegible]க) வண்ண தீட்சை (௫௧) தத்துவ தீட்சை (௨௬) விசேட தீட்சை (௧)

உவர்ப்பு - ௬ - ஆசியம், இரதி, அரதி, சோகம், பயம், குர்ச்சை இவைமுறையே சிரிப்பு ஆசை வெறுப்பு சோர்வு, அச்சம், அருவருப்பு.

எழுவாய்க்குப்பயனிலை - ௬ - வினை - வினா. சுட்டு வியங்கோள் - பண்பு - பெயர்.

(ம)

அஷ்டாவவிகாரம் - ௬ - சிசுத்வம், காவிகாபுத்தம் யக்ஞூவம் பாலியம், எவ்வனம், வார்த்திகம்-

அஷ்டகோசங்கள் - ௬ - மூளை, அஸ்தி, நரம்பு மாமிசம் தோல் உரோமம்-

அஷ்டவிதலிங்கம - ௬ - உபக்ரமம் உபசம்மாரம், இவையும் - ஒன்று - முதல் இலிங்கம் அப்பியாசம், இரண்டாவது அபூரவதம், மூன்றாவது பலம், நான்காவது அர்த்தவாதம், ஐந்தாவது உபர்த்தி.

கருத்தாகாரகம் - ௬ - காரணக்கருத்தா, கருமகருத்தா, தெரிந்தகருத்தா, தெரியாக்கருத்தா, தலைமைக்கருத்தா, தலைமையில்கருத்தா.

கருவுளமைப்பு - ௬ - பேறு, இழவு, இன்பம் பிணி, மூப்பு சாக்காடு.

கற்பிற்பிரிவு ௬ பரத்தையிற்பிரிவு, கல்வியிற்பிரிவு, காவலிற்பிரிவு, தூதிற்பிரிவு, உதவியிற்பிரிவு, பொருள்வயிற்பிரிவு; இவற்றுட் பரத்தையிற்பிரிவு அயன்மனைப்பிரிவு அயற்சேரியிற்பிரிவு புறநகர்ப்பிரிவு எனமூவகைப்படும்,

குருவிலட்சணம் - ௬ - கலாவல்லபம், சமயாசாரம் துலாக்கோல்போற்குணம், சுகுணம் சீலம் கருணை.

கொல்ட - ௬ - பயந்துகொடுத்தல் நயந்துகொ

டுத்தல் விருப்பாக்கொடுத்தல் வெறுப்பாக்கொடுத்தல் அழுதுகொடுத்தல் தொழுதுகொடுத்தல்.

சக்கிரவர்த்திகள் - ௬ - அரிச்சந்திரன் நளன் முசுகுந்தன் புருகுச்சன் புரூரவன் கார்த்தவீரியன்.

சமாதிசட்கம் - ௬ - சமை தமை திதிக்ஷை உபரதி சிரத்தை சமாதி.

சாத்திரம் - ௬ - வேதாந்தம் வைசேடிகம் பாட்டம் பிரபாகரம் பூருவமீமாஞ்சை உத்திரமீமாஞ்சை.

சுவை - ௬ - கைப்பு தித்திப்பு புளிப்பு உவர்ப்பு துவர்ப்பு கார்ப்பு.

செய்யுள்விகாரம் - ௬ - வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல் விரித்தல் தொகுத்தல்.

தானை - ௬ - தேர் - கரி - பரி - வாள் - வில் - வேல்.

தொகைநிலை ௬ - அன்மொழித்தொகை உம்மைத்தொகை உவமைத்தொகை பண்புத்தொகை வினைத்தொகை வேற்றுமைத்தொகை; இவற்றுட்படுதொகை சேர்த்தேழென்பாருமுளர்.

தொழில் ௬ - உழவு தொழில் வரைவு வாணிபம் வித்தை சிற்பம்,

தொழில் - ௬ - அந்தணரறுதொழில் - ஓதல் ஓதுவித்தல் - வேட்டல் - வேட்பித்தல் - ஈ

ல்-ஏற்றல்; அரசரறுதொழில் - ஓதல் வேட்டல் - ஈதல் - உலகோம்பல் - படைபயிற்றல் - பொருதல்; வைசியரறுதொழில் - ஓதல் வேட்டல் - பொருளீட்டல் - ஈதல் - பசுக்காத்தல் - ஏருழல், சூத்திரரறுதொழில் - முதன் மூவர்க்கேவல்செய்தல் - பொருளீட்டல் உழுதல் - பசுக்காத்தல் - குயிலுவத்தொழில் செய்தல் - காருகவினைகளாக்கல்.

நாட்டமைதி-௬-செல்வம் - விளைநிலம் - செங்கோல் - நோயின்மை - வளம் - குறும்பின்மை.

பகுதிப்பொருள்-௬-பொருள் இடம் காலம் சினை குணம் தொழில்.

பகுபதவுறுப்பு ௬-பகுதி விகுதி இடைநிலை சாரியை சந்தி விகாரம்.

படையுறுப்பு-௬-வில் வாள் குதிரை யானை தேர் காலாள்.

படைத்துணை-௬-மூலபடை வளபலம் கூலிப்படை துணைப்படை கைப்படை நாட்டுப்படை.

பா-௬-வெண்பா அகவற்பா கலிப்பா வஞ்சிப்பா மருட்பா நூற்பா; இவற்றுண்முன்னைநான்குஞ் சிறப்புடையவாம்.

பாவியல்பு-௬ - சாதி - நிலம் - நிறம் - நாள் - கோள் - இராசி.

புறச்சமயம்-சு-உலகாயிதம் பௌத்தம் சமணம் மீமாஞ்சை யாஞ்சராத்திரம் பாட்டாசாரியம்; - இவற்றின் விரிவு பேதம் (உ௪) சமயம் (௪அ) (சும) (ஈசும) ற்சாண்க.

பெயர்ப்பகுபதம்-சு பொருட்பெயர் இடப்பெயர் காலப்பெயர் சினைப்பெயர் குணப்பெயர் தொழிற்பெயர்.

பொழுது-சு-மாலை யாமம் வைகறை விடியல் நண்பகல் எற்பாடு.

போகபூமி-சு-ஆதியரிவஞ்சம் நல்லரிவஞ்சம் ஏமதவஞ்சம் ஏமவஞ்சம் தேவகுருவம் உத்தரகுருவம்.

முனைவரறம் -சு - அடக்கம் துறவு தூய்மை தவம் மறநீங்கல் புணர்தலின்மை.

யாப்புறுப்பு- சு - எழுத்து, அசை சீர் தளை அடி-தொடை.

வட்டி - சு - காயிகைவிருத்தி - காலிகைவிருத்தி சக்கரவிருத்தி- காரிகைவிருத்தி-சிகரவிருத்தி-போகலாபவிருத்தி.

விகாரம்- சு - காமம்-குரோதம்-உலோபம் மோகம்-மதம்-மாச்சரியம்; அன்றி இடும்பை அருவையோ டெட்டெனவும படும்-

விகுதிவகை-சு-பெயர்விகுதி தொழிற்பெயர் விகுதி பண்புப்பெயர்விகுதி முற்றுவினை விகுதி பெயரெச்சவினைவிகுதி வினையெச்

சவினைவிகுதி.

வினா - ௬ அறிவினா அறியாவினா ஏவல்வினா ஐயவினா கொடைவினா கொளல்வினா.

வினைச்சொற்பொருள் - ௬ - செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செய்ப்படுபொருள்

வினைச்சொல்வகை - ௬ - தெரிநிலைவினைமுற்று தெரிநிலைவினைப்பெயரெச்சம் தெரிநிலைவினைவினையெச்சம் குறிப்புவினைமுற்று குறிப்புவினைப்பெயரெச்சம் குறிப்புவினைவினையெச்சம்.

வெண்பாவியல்பு ௬ - சாதி நிலம் நிறம் நக்ஷத்திரம் இராசி வாரம்; இவைமுறையே பார்ப்பனம், முல்லைநிலம், வெண்மை, கார்த்திகை முதலேழும், கடகம் விருச்சிகம் மீனம், திங்கள் வியாழம்.

வெண்பா - ௬ - குறள்வெண்பா நேரிசைவெண்பா இன்னிசைவெண்பா சிந்தியல்வெண்பா பஃறொடைவெண்பா கலிவெண்பா அன்றியும் - செப்பல்வெண்பா வெண்கூ வெண்பா இரண்டுஞ்சேர்த் தெட்டெனக்கொள்க.

---

ஆறுதொகை முற்றுப்பெற்றது.

ஆறுதொகை - ௫௰௯.

# எழுதொகை.

அக்கினிநா - எ - இரண்ணியை-கனகை-இரத்தை - கிருட்டினை - சுப்பிரவை-அதிரத்தை வெகுரூபை; இவற்றிற்குமுறையே நிறம்-வெளுப்பு-பொன்மை-புகை கறுப்பு-மிக்க வெளுப்பு-மிக்கச்சிவப்பு-பச்சை; இவற்றிற்குமுறையேயுணவு-சமிதை நெய் குளநெல்-பொரி-எள்-கடுகு-அன்னம்.

இசை எ - குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் இவற்றுண் மிடற்றிற்குரல் நாவிற்றுத்தம் அண்ணத்தாற்கைக்கிளை சிரத்தாலுழை நெற்றியாலிளி நெஞ்சால்விளரி மூக்காற்றாரம் இங்ஙனம் தனித்தனிபிறக்கும், இவையே ஏழ்சுரமெனவும் வீணையின் ஏழ்நரம்பெனவும்படும்; இவற்றிற்கோசையுவமை மயில் - இடபம் ஆடு-கொக்கு-குயில்-குதிரை-யானை, சுவையுவமை பால்-தேன் கீழான்-நெய்-ஏலம்-வாழை-மாதுளங்கனி, வாசனையுவமை-மவ்வல்-முல்லை-கடம்பு-வஞ்சி-நெய்தல்-பொன்னுவிரா-புன்னை, அக்கரம்- ஆஅ - ஈஇ - ஊஉ - ஏஎ - ஐஇ - ஓஒ ஔஉ, மாத்திரை, குரல் ௪ - துத்தம் ௪ - கைக்கிளை ௩

உழை-௫ - இளி-௬ - விளரி-௭ - தாரம்-௨ ;
இவற்றால் - ஏழுபாலை பிறக்கும், அவையா
வன - குரலே குரலாயிற் செம்பாலை,
துத்தமே குரலாயிற் படுமலைப்பாலை, கை
க்கிளையே குரலாயிற் செவ்வழிப்பாலை; உ
ழையேகுரலாயின் அரும்பாலை, இளியேகு
ரலாயின் கோடிப்பாலை, விளரியேகுரலா
யின் விளரிப்பாலை, தாரமே குரலாயின்
மேற் செம்பாலை; இவற்றுட் - செம்பாலை
க்குக் கோடிப்பாலைவலிது, கோடிப்பாலை
க்கு விளரிப்பாலையும் மேற் செம்பாலையு
ம்வலிது, அன்றியும் - தாரத்திலுழையும்
உழையுட்குரலும் குரலுள்இளியும் இளி
யுட்டுத்தமும் துத்தத்துள்விளரியும் விள
ரியுட்கைக்கிளையும் பிறப்பதுதகுதி; இவற்
றிற்கிறைவர் -விசுவாமித்திரன் சமதக்கினி
சந்திரன் சூரியன் கௌதமன் காசிபன்
ஈசன்; இவற்றிற்குயிரீசன்.

உலோகம் ௭ - செம்பொன்-வெண்பொன் கரு
ம்பொன் செம்பு இயம்-வெண்கலம்- தராம.

கடல்-௭ - உவர்நீர்-நன்னீர்-பால்-தயிர்-நெய்
கருப்பஞ்சாறு-தேன்.

கடைப்படுதானம் ௭-ஆர்வம்-புகழ்-அச்சம்-
கைம்மாறு-காரணம் - கண்ணோட்டம்-கி
டைப்பாடு.

கருமகாரகம் எ - பற்றுக்கருமம்-விட்டுக்கருமம்-இருபுறக்கருமம்- தான்றெரிகருமம் தெரியாக்கருமம்-தீபகக்கருமம்-கருத்தா கருமம்.

கோணம் எ - முக்கோணம் - ஐங்கோணம்- அறுகோணம்-சத்தகோணம், அட்டகோணம் - நவகோணம் - நாற்பத்துமுக்கோணம்; இவை - சக்கரங்கள்.

சத்தரிஷிகள்-முனிவரொழிற்காண்க.

சிரஞ்சீவியர்-எ- அசுவத்தாமன், மாபலி-வியாசன் - அநுமான் -விபீஷணன் -கிருபாசாரியன்-பரசிராமன்.

சிலேடை-எ ஒருவினை-பலவினை முரண்வினை நியமம் - அநியமம்-விரோதம்- அவிரோதம்.

சுகுணவிருத்தி-எ-ஞானநூலோதல்-ஓதுவித்தல் ஞானநூற்பொருளுணர்த்தல்- ஞானநூற்பொருள்கேட்டல், ஞானநூற்பொருளைச்சிந்தித்தல்-சர்ச்சங்கஞ்சேர்தல்-அவரோவல்வழிநிற்றல்.

சுரம்-எ- பித்தசுரம்-சீதளசுரம்-வாதசுரம்-அத்திசுரம்-நளிர்சுரம்-முறைசுரம்-காலைச்சுரம்.

சுரம்-ஏ-ச-ரி-க-ம-ப-த-நி; அன்றியும். இசை யெழுத்தென்க.

செங்கோன்மை ஏ - அறம்-பொருள்-இன்பம் அன்பு-புகழ்-மதிப்பு திறமை:

தளை ஏ வெண்சீர்வெண்டளை - இயற்சீர்வெண்டளை - ஒன்றியவஞ்சித்தளை - ஒன்றாவஞ்சித்தளை - நேரொன்றாசிரியத்தளை - நிரையொன்றாசிரியத்தளை - கலித்தளை.

தாது ஏ - இரதம் - இரத்தம் - சுக்கிலம் - மூளை - தசை எலும்பு தோல்.

தாளம் ஏ - துருவம் மட்டியம் - உருபகம் - சம்பை - திரிபுடை - அட தாளம் ஏக தாளம்.

தீவு - ஏ - நாவல் - இறலி குசை - கிரவுஞ்சம் - புட்கரம் - தெங்கு - சமுகு; இவ்வெழுவகைப்பொருளும் அவ்வத் தீவின் மிக்கன வாகையா லிவற்றாற் பெயர்பெற்றன.

நரகம் - ஏ - அள்ளல்; இரௌரவம்; கும்பியாகம் - கூடசாலம் - செந்துத்தானம் - பூதி - மாபூதி.

நதி ஏ - கங்கை - யமுனை சரச்சுவதி - நருமதை - காவேரி - குமரி கோதாவிரி; இவையே சத்த தீர்த்தம் இவற்றோடுசிந்து தாமிரபருணி துங்கபத்திரி கிட்டிணி, யெனு நான்குங்கூட்டி ஏகாதசநதி யெனவுமடும்.

நரகவட்டம்-௭-தமப்பிரவை-இமப்பிரவை-தூமப்பிரவை வாலுகப்பிரவை-சாகாப்பிரவை-இரத்தப்பிரவை-அழற்பிரவை; அவையாவன இருள்-குளிர்-புகை-மணல்-துயிலாமை-இரத்தப்-தீ.

நாட்டுக்குற்றம் ௭-தொட்டியர்-கள்வர்-யானை பன்றி-விட்டில்-கிள்ளை-பெருமழை.

பாதகம்-௭-சித்தசமுன்னதி - அருத்தலோபம் - காமம் வைடம்மியம்-அசனப்பிரியம்-கோபம்-அனுட்டணம்; இவையே சத்தவிசனம்-இவை முறையே-அகங்காரம்-உலோபம் காமம் பகைபோசனப்பிரியம் காய்தல் சோம்பல் இவையேழுந்தலைமையான பாதகமெனப்படும்.

பாலை-௭-செம்பாலை-படுமலைப்பாலை-செவ்வழிப்பாலை உருமபாலை-கொடிப்பாலை-இளிப்பாலை விளரிப்பாலை-எனவேழாம்.

பிறப்பு ௭ தேவர்-மக்கள் விலங்கு-பறவை-நீர்வாழ்வன ஊர்வன-தாபரம்; இவற்றின்யோனிபேதம் (௮௰௪௱௲) அவையாவன தேவர் (௰௪௱௲) மக்கள் (௯௱௲) விலங்கு (௰௱௲) புள் (௰௱௲) ஊர்வன (௰௧௱௲) நீர்வாழ்வன (௰௱௲) தாபரம் (௨௰௱௲) அன்றி - தேவர் (௰௧௱௲) எனவும் - தா

வரம், (௰௮ ஆரூ) எனவுங்கூறுப.

புண்ணியம் - எ - நகங்கிருதி - தானம் - விரதம் - சிநேகம் - நயபோசனம் கமை - உற்சாகம்.

புரி எ - அயோத்தி - மதுரை - மாயை - காசி - காஞ்சி அவந்திகை - துவாரகை.

புறப்பொருட்டிணை - எ வெட்சித்திணை - வஞ்சித்திணை - உழிஞைத்திணை - தும்பைத்திணை - வாகைத்திணை - காஞ்சித்திணை - பாடாண்டிணை.

பெண்பருவம் - எ - பேதை பெதும்பை - மங்கை - மடந்தை - அரிவை - தெரிவை - பேரிளம்பெண்; இவர்க்குமுறையேவயதெல்லை - எ ௰க - ௰௩ - ௰௯ - உ௫ ௩க - ௪௰.

பெரியோரியல்பு எ - அறம் - பொருள் - இன்பம் அன்பு - புகழ் - மதிப்பு - பொறுமை.

பேர் - எ - உயர்திணையியற்பேர் - அஃறிணையியற்பேர் - உயர்திணைச்சாதியொருமை - அஃறிணைச்சாதியொருமை - உயர்திணைச்சாதிப்பன்மை - அஃறிணைச்சாதிப்பன்மை - பொதுப்பெயர்.

மடக்கணி - எ - ஆதிமடக்கு - இடைமடக்கு - கடைமடக்கு - ஆதியோடிடைமடக்கு ஆதியோடுகடைமடக்கு - இடையோடுகடைமடக்கு மூன்றிடத்துமுற்றுமடக்கு.

மண்டலம் ஏ - வாயுமண்டலம் - வருணமண்டலம் அக்கினிமண்டலம் - சூரியமண்டலம் சந்திரமண்டலம் - நட்சத்திரமண்டலம் துருவமண்டலம், இவ்வேழு மண்டலங்களும ஒன்றின்மேலொன் றடுக்காக விருக்கும - அன்றியும் திரிசங்குமண்டல மென முன்னுலிருக்கினும - அஃது திரிசங்கு சுவர்க்கமெனவாகும.

மந்திரமுடிவு - ஏ - நம - சுவாகா - வஷ்ட - வெளஷிட சுத - உம் பட்.

மருத்துக்கள் - ஏ - கிழக்கு - தெற்கு - மேற்கு - வடக்கு - கீழ் - மேல் - பலயோனியுயிர்.

மருந்துவருக்கம் ஏ - நெல்லிக்காய், வெட்டிவேர் - குருவேர் - சடாமாஞ்சி ஏலம் - இலவங்கம் திராட்சம்.

மலை - ஏ - கைலை, இமயம் - மந்தரம் - விந்தம் - நிடதம் - ஏமகூடம் - நீலகிரி; அன்றியுங் கந்தமாதனங்கூட்டி யெட்டெனப்படும்.

மாதாக்கள் - ஏ - அபிராமி - மாயேச்சுவரி கௌமாரி நாராயணி - வராகி - இந்திராணி காளி; இவர்க்குமுறையே வாகனம் - அன்னம் - இடபம் - மயில் - கருடன் - சியம் - யானை - பேய் முறையேஆயுதம் - மறை - பினாகம் - வேல் - ஆழி கலப்பை வச்சிரம் - சூலம.

முனிவர் - எ - அத்திரி - ஆங்கீரசன் - கௌதமன் - சமதக்கினி பாரத்துவாசன் - வசிட்டன் - விசுவாமித்திரன் - அன்றியும் - அகத்தியன் - ஆங்கிரசன் - கௌதமன் - காசியபன் - புலத்தியன் - மார்க்கண்டன் - வசிட்டன் - எனக்கூறுவர்.

மேகம் - எ. சம்வர்த்தம் - ஆவர்த்தம் - புட்கலாவர்த்தம் - சங்காரித்தம் - துரோணம் - காளமுகி - நீலவருணம்; இவை பொழிவன முறையே - மணி - நீர் - பொன் - பூ - மண் - கல் - தீ.

வழு - எ - இடவழு - காலவழு - திணைவழு - பால்வழு - மரபுவழு - விடைவழு - வினாவழு.

வாரம் - எ. ஞாயிறு - திங்கள் - செவ்வாய் - புதன் - வியாழம் - வெள்ளி - சனி; இவர்கட்கு முறையே சென்ற நட்சத்திரம், - பரணி - சித்திரை - உத்திராடம் - அவிட்டம் - கேட்டை - பூராடம் - இரேவதி; இவ்வாரங்களில் இந்நட்சத்திரங்கள் வரில் - மரணயோகம்.

வித்தியாதத்துவம் - எ - காலம் - நியதி - கலை - வித்தை - இராகம் - புருடன் - மாயை.

---

ஏழுதொகை - முற்றுப்பெற்றது.

௮ தொகை - - ௯௰௩.

# எண்டொகை.

அங்கம்-௮ - நெற்றி-இருதோள்-மார்பு-இரு
கை இருகால்.

அங்கயோகம்-௮- இயமம்- நியமம்-ஆதனம்-
பிராணாயாமம்-பிரத்தியாகாரம்-தாரணை-
தியானம்-சமாதி; இவற்றுள் (இயமம்-கொ
ல்லாமை மெய்மைகூறல்-கள்ளாமை-பிற
ர்பொருளிச்சியாமை - இந்திரியமடக்கல்)
நியமம்;-தவம்-தூய்மை-தத்துவநூலோர்
தல்-மனமுவந்திருத்தல்-தெய்வவழிபடல்
ஆதனம்;-சுவத்திகம்-கோமுகம் பதுமம்
வீரம்-கேசரி-பத்திரம்-முத்தம்-மயூரம்
சுகம்;-அவையாவன-சுவத்திகம்;-தொடை
க்கும் முழங்காலுக்கும்நடுவே இரண்டுள்
ளங்காலையுஞ்செலுத்தியிறுமாந்திருத்தல்,
கோமுகம்;-சகனப்பக்கத்திருகாற்பாட்
டையும்மாறவைத்து அவ்விருகாற்பெருவி
ரலைக்கைப்பிடித்திருத்தல், பதுமம்;-இரு
தொடைமேலும் இரண்டுள்ளங்காலையுமா
றித்தோன்றவைத்தல், வீரம்; வலதுதொ
டையில் இடக்காற்பரட்டைச்சேர்த்திரு
மார்புறத்திருத்தல், கேசரி; பீசத்தின்கீழ்ச்

சீவனிபிடத்துப்பாட்டைவைத்திடமுழங்
கையைமுழந்தாளில்வைத்து அங்குலிவிரி
த்துநாசியைப்பார்த்திருத்தல், பத்திரம்,-
பீசத்தின்கீழ்ச்சீவனிபிடத்து இருகாற்பா
ட்டையும்வைத்து அவ்விருபதத்தையும் இ
ருகையாலிறுகப்பிடித்தசையாதிருத்தல்,
முத்தம்,-இடக்காற்பாட்டாற் சீவனியைய
ழுத்தி வலக்காற்பாட்டின் கீழழுந்தவிருத்
தல், மயூரம்,-முழங்கையிரண்டும் உந்திப்
புறத்திலழுந்தப் புவியிற்கையூன்றிக் காலை
நீட்டித் தலைநிமிர்ந்திருத்தல், சுகம்,-சுக
முந்திடமு மெவ்வாறிருக்கினெய்துமோ
வவ்வாறிருத்தல், பிராணயாமம்;-பிரா
ணவாயுவை இரேசக பூரக கும்பகஞ்செ
ய்தல், பிரத்தியாகாரம்,-உபாதியைநீக்கியு
ள்ளேணெக்கல், தாரணை,-கண்டம்-இதயம்-
நெற்றி கபாலம் நாபி இவற்றொன்றில் சந்
ததம் சிந்தைவைத்தல், தியானம்,-ஐம்புல
மடக்கிச்சிவயோகஞ்சேர்தல், சமாதி,-இந்
திரியமுதலியதத்துவசேட்டைகட்கேதுவா
யாக்கையுணின்றவற்றோடுகூடினும் அற்றிற்
பற்றின்றியிருக்குமாண்மாவாகிய தன்னைத்
தான்காண்டல்.

அசை - அ - நேரசை - நிரையசை - நேர்பசை - நிரைபசை சிறப்புடைநேர்பசை - சிறப்பில் நேர்பசை - சிறப்புடைநிரைபசை - சிறப்பில் நிரைபசை.

மலை எழுதொகையிற்காண்க.

அரசர்க்குத்துணைவர் - அ - மந்திரியர் - கருமாதிகாரர் - சுற்றம் - கடைகாப்பாளர் - நகர் மாக்கள் - படைத்தலைவர் - குதிரைவீரர் - யானை வீரர்.

அவதானம் - அ - வாய்வேலுமயிலுமெனச்சொல்லல் - கையாலிலாடசங்கிலிகழற்றல் - கவியெண்மர்கருத்தின்படிசொல்லல் - முதுகிலெறிகல்லளவு நெல்லளவுசொல்லல் - திரைமறைவில்வைக்குங் கல்லணியளவுசொல்லல் - மறைவிலாடுஞ் சொக்கட்டான சதுரங்கமிவற்றிற்கெத்துச்சொல்லல் - அயலொருவர்சொல்லுங்கவியையவதானித்துச் சொல்லல் - உடலிலே துவாதசதானத்தெழுத்தாணிவைத்தெழுதல்.

அளபெடை - அ - இயற்கையளபெடை - செயற்கையளபெடை - எழுத்துப்பேறளபெடை - இசைநூலளபெடை - ஒற்றுப்பேறளபெடை - குற்றெழுத்தளபெடை - நெட்டெ

மூத்தளபெடை ஒற்றெழுத்தளபெடை.

அளவை-அ-பிரத்தியட்சம்-அநுமானம்-ஆகமம்-அருத்தாபத்தி-உவமானம்-அபாவம் சம்பவம்-ஐதீகம்; இவற்றுள் -காணல்-பிரத்தியட்சம், புகையைக்கண்டு நெருப்புண்டெனல்-அநுமானம், மரையாப்போலெனல் - உவமானம், பெரியோர்வாய்ச்சொல்-ஆகமம், பகலுண்ணான் பருத்திருப்பானென்புழி யிரவிலொளித் துண்பானெனவுணர்தல்-அருத்தாபத்தி, முன்னில்லையின்றுமில்லை யொருகாலத்துமில்லையெனல்-அபாவம், ஆயிரத்தினூறுண்டெனல்-சம்பவம், இம்மரத்திற் பேயுள்ளதென்பது-ஐதீகம்.

அறத்துறுப்பு-அ - ஐயப்பாடின்மை - விருப்பின்மை-வெறுப்பின்மை மயக்கமின்மை-பழியைநீக்கல் - அழிந்தோரைநிறுத்தல்-அறம்விளக்கல்-பேரன்புடைமை.

ஆண்விளையாடல்-அ-சப்பாணிகொட்டல் செங்கீரையாடல் - சிற்றில்சிதைத்தல்- சிறுதேரோட்டல் பந்தடித்தல் - பம்பரமாடல்-சிறுபறைகொட்டல்- நீராடல்.

ஆநந்தம்-அ-விடயாநந்தம்-பிரமாநந்தம்-வாசனாநந்தம்-முக்கியாநந்தம் நிசாநந்

தம் - ஆன்மாநந்தம் - அத்துவிதாநந்தம்-வித்தையாநந்தம்.

ஆரியத்துள் வேற்றுமை. அ - வினைமுதல் - விளி-செயப்படுபொருள் - கருவி கொள்வோன்-நீக்கம் - குறை - இடம்.

இடைச்சொல் - அ - அஃ - ஆன் - அள் - ஆள் முதலியவிகுதியுருபுகளும் வேற்றுமையுருபுகளும் காலங்காட்டும் இடைநிலையுருபுகளும்; அன் - ஆன் - இன் - அல் முதலியசாரியையுருபுகளும்; போல - மான - புரைய-பொருவ - முதலியவுவமையுருபுகளும்; பிறவாறு தத்தமக்குரியபொருளையுணர்த்திவரும்; ஏ ஓ - உம் - மன் முதலியனவும் இசைநிறைத்தலே பொருளாகவருவனவும், அசைத்தலே பொருளாக நிற்பனவுமாம்.

இலக்குமி - அ - தனலட்சுமி - தானியலட்சுமி-தைரியலட்சுமி - வீரலட்சுமி - வித்தியாலட்சுமி - கீர்த்தியாலட்சுமி - விசயலட்சுமி-இராச்சியலட்சுமி.

இராகம் - அ - காமம் - குரோதம் - உலோபம் - மோகம் - மதம் - மாற்சரியம் - இடும்பை - வேகம்.

இச்சுரன் குணம் - அ - தன்வயத்தனாதல் - தூயவுடம்பினனாதல் இயற்கையுணர்வினனாதல் முற்றுமுணர்தல் - இயல்பாகவே பாசங்

களைநீங்குதல் - பேரருளுடைமை - முடிவிலாற்றலுடைமை வரம்பிலின்பமுடைமை; என்பனவும் - வரம்பில்காட்சி வரம்பில்ஞானம் - வரம்பிலின்பம் - வரம்பிலாற்றல் - நாமமின்மை, கோத்திரமின்மை - ஆயுவின்மை - இடையூறின்மை என்பனவுமாம்.

உலோகபஞ்சகம் - அ - பொன் - வெள்ளி - செம்பு இரும்பு - வெண்கலம் - தரா - வங்கம் - துத்தநாகம்.

ஊறு - அ - வெம்மை - தண்மை - மென்மை - வன்மை - திண்மை நொய்மை, சீர்மை - சருச்சரை - இவையே தொடப்படும் பொருட்கெண்குணம்

எச்சம் - அ - குறள் - கூன் - ஊமை - செவிடு - குருடு - முடம் - உறுப்பு மயக்கம் - உறுப்பில்பிண்டம் - இவை எண்வகையுடற்குறை.

எழுத்திலக்கணவகை - அ பெயர் - பிறப்பு - மாத்திரை - முதனிலை - இறுதிநிலை இடைநிலை - பதம் - புணர்ச்சி.

ஏகாரம் - அ - தேற்றவேகாரம் இற்றேகாரம் - பிரிநிலையேகாரம் - வினாக்குறிப்பேகாரம் எண்ணேகாரம் - இசைநிறையேகாரம் - பிரிநிலையேகாரம் - ஈற்றசையேகாரம்.

ஐசுவரியம் - அ - இராசாங்கம் - மக்கள் - சுற்றம் -

பொன் - மணி - நெல் - வாகனம் - அடிமை.

சட்டம் - அ - மோகம் - யாசகம் - இல்லெனல் - மூப்பு - முடிசுமத்தல் - உணவருகல் - பானவருகல் - நீரருகல்.

கணம் - அ நிலம் - நீர் - மதி - இயமானன் - சூரியன் - தீ - வாயு - ஆகாயம், இவற்றுண்முன்னர் நான்கு நன்று பின்னர் நான்குங் கடிகம். நிரை நிரை நிரை நிலக்கணம், நேர் நிரை நிரை நீர்க்கணம், நிரை நேர் நேர் மதிக்கணம், நேர் நேர் நேர் உயிர்க்கணம், நேர் நிரை நேர் சூரியகணம், நிரை நேர் நிரை தீக்கணம், நேர் நேர் நிரை வாயுக்கணம், நிரை நிரை நேர் ஆகாயகணம்.

கணிதம் - அ - சங்கலிதம் - விபகலிதம் - குணனம் - பாகாரம் - வர்க்கம் - வர்க்கமூலம் - கனம் - கனமூலம்; இவற்றுள் - சங்கலிதம் கூட்டல், விபகலிதங் கழித்தல், குணனம் பெருக்கல், பாகாரம் பங்கிடல், வர்க்கம் சமமாகிய விரெண்ணின் பெருக்கம், அஃதாவது நிலத்தைச் சமமாக நாற்கோணஞ்செய்தல்; வர்க்கமூலம் - அவ்வர்க்கத் தொகையினின்றதன் மூலமாகிய வர்க்கமறிதல், கனம் சமமாகிய மூவெண்ணின் பெருக்கம், அஃதாவது குழியைச் சமமாகப் பன்னிருகோணப்

படித்தல் கனமூலம், அக்கணத்தொகையி
னின்றதன் மூலமாகிய வொருமூலையறிதல்.

கரந்துறைகோள் - அ. சூரியன், சந்திரன், இரா
கு - கேது - வாலநட்சத்திரம் - தூமகம்பம்
- வானவில் - பரிவேடம்.

கருமம் - அ - வசியம், மோகம், தம்பனம், உச்
சாடனம், ஆகருட்டணம், வித்துவேட்டணம்
பேதனம் மாரணம.

காட்சி - அ - அறம், ஐயப்படாமை, அவாவின்
மை, அறுசமயத்தவர்க்கன்னமிடல், அழி
ந்தோர்நிறுத்தல், கொலைமறுத்தல், மூட
மறுத்தல் அறிவுவரம்பின்மை.

குற்றம் - அ - ஞானவர்ணியம், தரிசனவர்ணிய
ம் வேதநீயம் மோகநீயம், ஆயு, நாமம்,
கோத்திரம், அந்தராயம்.

குன்மம் - அ. சூலைகுன்மம் வாதகுன்மம் பி
த்தகுன்மம் சிலேற்பனகுன்மம் எரிகுன்
மம் சத்திகுன்மம் சன்னிகுன்மம் வலிகு
ன்மம்.

சித்தி - அ. உருக்கம், கண்ணீரொழுக்கம், திகை
ப்பு, கம்பம், புளகம், களிப்பு, சிரிப்பு, வலி.

சித்தி - அ - அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பி
ராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்து
வம், அவையாவன - அணுவாய்ப்போலாதல

ணிமா, மகத்துவமாதலே மகிமா, தன்னுடற்கனைருப்பின்றாய்க் கண்டிப்புள்ளவற்றையுருவவல்லவனாதல் கரிமா, இலகித்துவமாதல் இலகிமா, வேண்டுவன வடைதலேபிராத்தி, நிறைவுள்ளவனாதலே பிராகாமியம், ஆட்சியுளனாதலேயீசத்துவம், எல்லாந்தன்வசமாக்க வல்லனாதலே வசித்துவம்.

சுவையணி அ - வீரம் அச்சம் இழிபு வியப்பு காமம் அவலம் உருத்திரம் நகை.

செய்யுளுறுப்பு - அ - எழுத்து அசை சீர் பந்தம் அடி தொடை பா பாவினம்.

செருக்கு - அ - அறிவு, மிக்கூற்று, உரன், எழில், தவம், செல்வம், ஆணை, குலம்.

சைவஞானம் - அ - ஈச்சுரவைச்சியவாதம் பாடாணமோட்சவாதம் சங்கிராந்த வாதம் ஈச்சுர அவிகாரவாதம் நிமித்தகாரணபரிணாமவாதம் சைவவாதம் - பேதவாதம் சிவசமவாதம்.

துயாவிருத்தி - அ - பிறர்க்குப்பொருள் வரவை யுவத்தல், பிறர்செல்வம் பெறுத்தல், பிறர் சுடுமத்திற் குடன்படல், இடைக்கஞ்சல், பிறர்கருமமுடிக்கவில்லாதல், பிரளாயந்தீர்த்தல், நல்லமசகைட்பித்தல், பிறர்

துயர்க்கிரங்கல்.

தனம்-அ-உருபம், சம்பத்து, வித்தை, விவேகம், குணம், தனம், சுகுலம், தீர்க்காயுள்.

திக்கு-அ கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு, அன்றியும் கீழ்மேலிரண்டுங் கூட்டிப் பத்துத்திக்கெனவும்படும், இவற்றுள் கிழக்கு கருடத்திசை, தென்கிழக்குப் பூனைத்திசை, தெற்குச் சிங்கத் திசை, தென்மேற்கு சுணகதிசை, மேற்கு நாகத்திசை வடமேற்கு, எலித்திசை, வடக்கு யானைத்திசை வடகிழக்கு முயற்றிசை மேல்விசும்புத்திசை கீழ்ப்பாதாளதிசை.

திக்குப்பாலகர்-அ-கிழக்காதி முறையே, இந்திரன் அங்கியமன் நிருதி வருணன் வாயு குபேரன் ஈசானன் இவர்க்கு முறையே குறிகளாவன இடி புகை சீயம் தாய் இடபம் கழுதை யானை காகம்.

திக்குப்பாலகாதேவி - அ - இந்திராணி சுவாகை, காளி, தீர்க்கை, சாடவீ, அஞ்சனை, சித்திரா பார்ப்பதி.

திக்குப்பாலகர்பதி-அ-அமராபதி-தேசாபதி சமணைபதி, சித்தாபதி இலட்சாபதி கர்த்தாபதி அளகாபதி கைலாயபதி.

திக்குப்பாலகர்வாகனம்-அ - வெள்ளையானை-ஆட்டுக்கடா-எருமைக்கடா-தண்டிகை-முதலை-கலை-அசுவம்-இடபம்.

திக்குப்பாலகராயுதம்-அ - வச்சிராயுதம்-சத்தாயுதம்-சூலாயுதம்-கத்தாயுதம் - பாலாயுதம்-தூசாயுதம்-கட்காயுதம்-சந்திராயுதம்.

திக்குயானைகள்-அ-கிழக்காதிமுறையேஐராவதம் புண்டரீகம் வாமனம் குமுதம் அஞ்சனம் புட்பதந்தம் சாருவபூமம் சுப்பிரதீபம்;-இவையே அட்டதிக்கயம் இவற்றிற்குமுறையே பிடி அப்பிரமை கபிலை பிங்கலை அனுபமை தாமிரபருணி சுதந்தி அஞ்சனை அஞ்சனவதி.

தேகசுவாத்தியபரிட்சை - அ - நாடி-முகம்-மலம்-மூத்திரம்-கண்-நா-சரீரம்-தொனி.

நாகம்-அ-வாசுகி-அனந்தன்-தக்கன்-சங்கபாலன் குளிகன்-பதுமன்-மகாபதுமன்-கார்க்கோடகன், இவற்றைக் கடவுட்பாம்பென்ப; இவைமுறையே - கிழக்குமுதலெண்டிக்கிற்பூமியைத்தாங்குவதன்றியநடுவே சேடனெனுநாகம் பூமியைத்தாங்காநிற்கும் இந்நவநாகமும் காசிபபிரமாவுக்கும் அவன்மனைவிகள் பதின்மூவருட் கத்துரு

வைக்கும் பிறந்தன.

நாட்டுக்குற்றம்-அ- விட்டில்- தன்னரசு-வே ற்றரசு-யானை-மிகுமழை மிகுகாற்று -கிள்ளை-நட்டம்.

ஸ்நானம்-அ - மலஸ்நானம் - சலஸ்நானம்- ஆக்கிநேயஸ் நானம் - திவ்வியஸ் நானம்- வாய்வியஸ்நானம் - மந்திரஸ்நானம்-மானதஸ்நானம்- தியானஸ்நானம்;-இவற்றுள்- மிருத்துகையெடுத்து நீரிற் கரைத்துமுழுகல்-மலஸ்நானம், நெல்லியெண்ணெய் முதலானவைதடவிமுழுகல் சலஸ்நானம், விபூதியை ஆபாதசூடமும் பூசி முழுகல்- ஆக்கிநேயஸ்நானம், வெய்யிலிலே மழை பெய்யுமிடத்துக்கிழக்குநோக்கி ஏழடி முன்போய் ஏழடி பின்போதல்- திவ்வியஸ்நானம், கோபாததூளியிற்படிதல்-வாய்வியஸ்நானம், மந்திரங்களையுச்சரித்து முழுகல்- மந்திரஸ்நானம், கங்கைமுதல்நவநதியுந் தியானித்துமுழுகல்-மானதஸ்நானம், சலத்தை யமுதமாகத் தியானித்துமுழுகுவது- தியானஸ்நானம்,- இவ்வெட்டுஞ்சரியையாக்கும் கிரியையர்க்கும்; அன்றியும், ஆக்கினேய முதலாறும் யோகியர்க்கு மானதாதி யிரண்டும் ஞானியர்க்குமாம்.

பரிசம்-அ - குற்றல்-பற்றல்-தட்டல்-தடவல்-வெட்டல்-ஊன்றல் - தீண்டல்- கட்டல் - இவை :- மெய்ப்பொறியாற்செய்யப்படுந் தொழில்கள்.

பெண்விளையாடல்-அ - செங்கீரையாடல் சப்பாணிகொட்டல் - அம்மானையாடல்-கழங்காடல்-ஊசல், பூப்பறித்தல் - புனலாடல் சிறுவீடுகட்டல்.

போகம்-அ- பெண்-ஆடை-அணிகலன்-போசனம்-தாம்பூலம்-பரிமளம்-பாட்டு-பூவமளி-

மங்கலம்-அ-சாமரம்-நிறைகுடம்-கண்ணாடி - தோட்டி-முரசு விளக்கு- கொடி-இணைகயல்; இவையே அட்டசுபமெனவும்படும்.

மணம்-அ - பிரமம் - பிரசாபத்தியம் - ஆரிடம் - தெய்வம் - காந்தருவம் - ஆசுரம் - இராக்கதம் - பைசாசம்; - இவற்றுட் பிரமசாரிக்குக்கன்னியைத்தீமுன்னர்க்கொடுப்பது - பிரமமணம், தலைமகளினத்தார்வேண்டத் தலைமகளினத்தாரிட்டபட்டவனைத் தீமுன்னர்க்கொடுப்பது - பிரசாபத்தியமணம், ஒன்றிரண்டுபசுவும்எருதும் வாங்கிக்கொண்டு கன்னியைத்தீமுன்னர்க்கொடுப்பது - ஆரிடமணம், வேள்வியால் வந்தகன்னியைத் தீமுன்னர்க்

கொடுப்பது-தெய்வமணம், கொடுப்பா ருங்கேட்பாருமின்றி யிருவருந்தனியிடத் தெதிரப்பட்டுத் தாமேகூடுவது-காந்தருவமணம், பெண்ணுக்குப் பொன்பூட்டிச சுற்றத்தார்க்கும் பொனவேண்டுவன கொடுத்துக்கொள்வது - ஆசுரமணம், பெண்ணும் பெண்ணினத்தாருமுடன்படாமல் வலிந்திற்கொள்வது-இராக்கதமணம், துயின்றாளைச்சென்றுகூடுவது-பைசாசமணம்

மூர்த்தம்-அ-பூமி-நீர்-தேயு-வாயு-ஆகாயம்-சூரியன்-சந்திரன்-ஆன்மா.

மூலம்-அ-சுக்கு-அரத்தை-செவ்வியம்-சித்திரமூலம்-கண்டுபாரங்கி-கோரைக்கிழங்கு நன்னாரிவேர்-காஞ்சொறிவேர்.

யோகமுயற்சி-அ-இயமம்-நியமம்-ஆசனம்-பிராணாயமம்-பிரத்தியாகாரம்-தியானம்-தாரணை-சமாதி.

வசுக்கள்-அ-அனலன்-அனிலன்-ஆப்சைசவன்-சோமன்-தரன்-துருவன்-பிரத்தியூசன்-பிரபாசன்.

வணிகர்குணம்-அ-தனிமையாற்றல்-முனிவிலனாதல்-இடனறிந்தொழுகல்-பொழுதோடுபுணர்தல்-உறுவதுதெரிதல்-இறுவதஞ்சாமை-ஈட்டல் பகுத்தல்.

வயிரவர்-அ-அசிதன்-கணன்-கண்டன்-சோதன்-மத்தன்-காபாலி-விட்டணன்-சங்காரன்.

வருக்கம்-அ-சீரகம்-கருஞ்சீரகம்-சுக்கு-மிளகு-திப்பிலி-இந்துப்பு-பெருங்காயம்-ஓமம்.

வனப்பு-அ-அம்மை-அழகு-தொன்மை-தோல்-விருந்து-இயைபு-புலன்-இழைபு.

வித்தியேச்சுரர்-அ-அநந்தர்-சூக்குமர்-சிவோத்தமர்-ஏகநேத்திரர்-ஏகருத்திரர்-திரிமூர்த்தி-சிகண்டர்-சிகண்டி.

வினை-அ-ஞானாவரணீயம்-தர்சநாவரணீயம்-வேதநீயம்-மோகநீயம்-நாமம்-கோத்திரம்-ஆயுஷ்யம்-அந்தராயம்.

வெற்றி-அ-பகைநிரைகவர்தல், பகைவர்கவர்ந்ததன்னிரைமீட்டல்-பகைமேற்செல்லல்-வரும்பகைமுன்னெதிரூன்றல்-தன்னரண்காத்தல்-பகையரண்வளைத்தல்-பொருதல்-போர்வெல்லல்; இவற்றிற்கு முறையேவெற்றிமாலையாவன-வெட்சி-கரந்தை-வஞ்சி-காஞ்சி-நொச்சி-உழிஞை-தும்பை-வாகை.

வேற்றுமையுருபு-அ-பெயர்-ஐ-ஆல்-கு-இன்-அது-கண்-விளி.

---

எண்டொகை-முற்றுப்பெற்றது.

ஆகதொகை-ராயின.

# ஒன்பதின்றொகை.

அடுக்குச்சொல் - ௯ - பொருள் - இடம் - காலம் - சினை - குணம் - தொழில் - வினை - இடை - உரி.

இரதம் - ௯ - அற்புதம் - இரௌத்திரம் - கருணை - குற்சை - சாந்தம் - சிங்காரம் - பயம் - பெருநகை - வீரியம்.

இளமைப்பெயர் - ௯ - பார்ப்பு - பறழ் - குட்டி - குருளை - கன்று - பிள்ளை - மகவு - மறி - குழவி.

உபக்கிரகம் - ௯ - இமகண்டன் - காலன் - வானவில் - உளர்கோள் - விதியாதன் - குளிகன் - அர்த்தப்பிராகன் - தூமையாதனன் - தூமகேது.

கிரகம் - ௯ - ஆதித்தன் - சந்திரன் - செவ்வாய் - புதன் - வியாழம் - சுக்கிரன் - சனி - இராகு - கேது.

சித்தர் - ௯ சத்தியநாதர் - சதோகநாதர் - ஆதிநாதர் - அநாதிநாதர் - வகுளிநாதர் - மதங்கநாதர் - மச்சேந்திரநாதர் - கடேந்திரநாதர் - கோரக்கநாதர்.

சிவபேதம் - ௯ - பிரமா - விட்டுணு - உருத்திரன் - மகேசுரன் - சதாசிவம் - சிவம் - சத்தி - நாதம் - விந்து.

தானியம்-௯- உளுந்து-எள்ளு-கடலை கொள்ளு-சாமை-தினை-துவரை-நெல்- பயறு.

நாட்டியம்-௯-சாபநாட்டியம்-மண்டல நாட்டியம்-இரதநாட்டியம்-கூர்ம நாட்டியம்-தோகைநாட்டியம்-சேவநாட்டியம்-கசநாட்டியம்-அசுவநாட்டியம்--வியாக்கிரமநாட்டியம்.

புண்ணியம்-௯-எதிர்கொள்ளல்-பணிதல்-ஆசனத்திருத்துதல்-தாள்கழுவல்-அருச்சித்தல்-தூபங்கொடுத்தல்-தீபங்காட்டல்-புகழ்தல்-அமுதமேந்தல்.

பொருள்கோள்-௯ - நிரனிறை-சுண்ணமொழிமாற்று, அடிமறிமாற்று, அடிமொழிமாற்று-அளைமறியாப்பு - விற்பூட்டு-யாற்றுப்புனல்-தாப்பிசை-கொண்டுகூட்டு.

மணி-௯-கோமேதகம்-நீலம்-பவளம்- புட்பராகம்-மரகதம்- மாணிக்கம்-முத்து-வைடூரியம்-வயிரம்,-இவையே நவரத்தினமாம்.

வாமேஞர்கணம்-௯- -பத்திச்சுவாலகர்- ஞானிக்கர்-பத்திராசனர் நாதகிருத்தியர் -சத்துவகர்-பலவத்தர் -பிராதமிகர்-அதிதூதர் தூதர்,-இவையே - நவவிலாச சபையாம்,-அவையாவன - பத்திச்சுவாலகர் கடவுளைக்குறித்த பத்தியினாலே சுவாலிக்கிறவர், ஞா

ஞேதிக்கர் - கடவுளைக்குறித்த ஞானத்திலா
திக்கம்பெற்றவர், பத்திராசனர் - கடவுளெ
ழுந்தருளியிருக்குந் தேவசிங்காசனத்தைத்
ப்புகழ்ந்திருப்பவர், இவர்முதலாம் அர்ச்
சியப்பிரபுத்துவமுடையோராம். நாதகிரு
த்தியர் - நாதனுடையகிருத்தியத்தை யவ
னருளாற்புரிபவர், சத்துவகர் - கடவுளரு
ளாற்பற்பலவற்புதங்களைச்செய்யுஞ் சத்து
வம்பெற்றவர் - சத்திகளென்றுமாம், பல
வத்தர் - கடவுட்டிருவுளப்படி யெய்துங்க
ருமங்கட்கு வருமிடையூற்றை யவனரு
ளாற்றடுக்கும்பலாத்காரம் பெற்றவர்.
இவர்இரண்டா மர்ச்சியப் பிரபுத்துவமு
டையோராம், பிராதமிகர் - கடவுட் டிருவு
ளப்படியே யிராச்சியசம்பந்தமான சாதா
ரணதன்மைகளை நடத்துந் தலைமைபெற்ற
வர், அதிதூதர் - அதிகப்பிரதானவிசேடங்
களை யுலகத்திலறிவிக்கத் தானுபதியாகவ
ருபவர்கள், தூதர் - மனிதர்பிறந்தகண மு
தலாகத் தனித்தனியே யவரவரைப்பாது
காத்து நன்னெறியினடத்தி மற்றும் பிர
தானவிசேடங்கட் கனுப்பப்படுவர்.
இவர் மூன்றும் அர்ச்சியப் பிரபுத்துவமு
டையோர் - அர்ச்சியப் பிரபுத்துவத்திற்கு

அதீச்சுரபதவியென்பாருமுளர்.

விக்கிரகவகை ௯ - கல்-மண்-மரம்-நெட்டி-சாந்து-தாம்பிரம் - பொன்-வெள்ளி-மெழுகு-இவற்றாற் செய்வனவற்றை நவவிக்கிரகமென்பர்சிற்டர்.

வீரர்கள் - ௯ - வீரபாகு-வீரமாரன் -வீரகோளரி-வீரசாம்புவன் - வீரகேசவன் - வீரதுரந்தரன் -வீரதீரன் -வீரவுத்தண்டன் -வீரமார்த்தாண்டன்;- இவர்கள் கடவுளைக் காற்பிறந்த நவவீரர்களாம்.

தாரணை ௯ - நாமதாரணை மாயாதாரணை -பேததாரணை -மந்திரதாரணை -துரங்கதாரணை சத்ததாரணை-வத்துத்தார -வச்சிரதாரணை சித்திரதாரணை; இவற்றுள்;முழுதுநிறைந்திருக்கிறபிரமத்தை ஒருவரையறைப்பொருளாகத்தியானித்தற்குக் கற்பித்திருக்கிற நாமதியானத்தினால் அவ்வரையறைப்பொருளறிவுவாய்த்தல்- நாமதாரணை, நாமம் வடிவுமுதலிய விகாரங்களின், றிக்காலத்த கட்டுமிட்டத்தகத்துப்படாத பரமான்மாவிடத்தில் அந்தக்கரணச்சேர்வையாற்புனைந்துணாக்கப்பட்ட விப்பிரபஞ்சத்தை வியாபாரமின்றித் துறத்தற்குக் கருவியா

ன மகாவாக்கியத்தைப் பொருளுணர்ச்சி
யோடுச்சரித்தல் - மாயாதாரணையாவது மு
றை இயமம் நியமம் முதலியஞ்செய்து இரு
தயத்தாகிய பிராணன் - குதத்தாகிய அபா
னன் - உடம்பெங்கணுமாகிய வியானன் -
கண்டத்தாகிய உதானனென்னு நான்குவா
யுக்களை நாபியதாகிய சமானவாயுவுடனே
சேர்த்து எட்டிதழா மதோமுகமாயிருக்
கிற இதயகமலத்தைப் பிராணவோச்சார
ணத்தான் மேன்முகமாக்குகை - பேததா
ரணை, மேலாயதெய்வம் சிவனே இவ்வுலக
மெல்லாம் சிவமயமே - சிவனில் வேறுசிறி
தாயினுமில்லை - ஆதலால் எவற்றிற்கும் அதி
ட்டானமாயெவையுமாகின்றவன் சிவனே
யென்று பிரணவமில்லாட்பௌராணிகம
ந்திரங்களால் சிவத்தியானஞ்செய்தல் மந்
திரதாரணை, காயசோதனம்பண்ணுகிறவ
னுக்கு ஆகாயம் பிரமத்தானமும் நில நீர்
தீ கா லிந்நான்குமங்கமுமாதலால் இந்
நான்கையும் ஆகாயத்திற்சேர்க்கவேண்டு
ம் அச்சேர்த்த லெங்ஙனமோவெனின்
காலவழிவாய் மனதிற்றீவழிவாய் புத்தி
யையும் அப்புத்தியினீர்வழிவாய் சித்தத்
தையும் அச்சித்தத்திலிவ்வழிவா யகங்கா

ரத்தையுஞ் சேர்த்து எஞ்சிநின்ற காலவடி
வான்மனது ஆகாயத்திற் சேரும்படியந்
தரத்தியானஞ்செய்தல் - சதுரங்கதாரணை,
அகர உகர மகரங்கள்சேர்ந்து ஓரக்கர
மாய்ப் பிரமவடிவைச்சொல்லிக்கொண்டி
ருக்கிற பிரணவத்தைத் தியானதாரணைச
மாதிகளா லடைந்து கண்முதலிய புறக்க
ரணச்செய்கையின்றிக் கும்பகத்தான் வா
தநாடியைச்சோதிக்கவேண்டும் அந்தவி
சாரத்தால் நாடிசுத்தியையடைந்த மனித
னுதானுஞ் சந்தானத்தையடைதல் - சுத்த
தாரணை, பிறபொருளையடையாம லசைவ
ற்றிருக்கிற மனம் புத்தியைச் சித்தத்திற்
சேர்க்கின்றது அச்சித்தம் புத்தியைமன
திற் சேர்க்கின்றது புத்தியைச் சேர்த்துக்
கொண்டசித்தமும் மனமும் அப்புத்தி
யை அகங்காரத்திற்சேர்க்கின்றன - பின்னர்
அகங்காரம் புத்தி சித்தங் கண்மூன்று ம
னதிற்சேர்க்கின்றன - அம்மனத்தாற் பிரம
தரிசனம்பிறத்தல் - வத்துத்தாரணை, பிரம
ன்வடிவாகிய பீடத்தையும் திருமால்வடிவா
கிய விவாதத்தையுநீக்கி இலிங்கத்தைமா
த்திரம் பூசித்தல் என்றால் அகங்காரத்தை
யும் சிவதத்துவத்தையு நீக்கிப் பரதத்து

வமே தியானஞ்செய்யத்தக்கதென்றறிதல் - வச்சிரதாரணை, சத்தார்த்தங்கட்குப்பேதமின்றிச் சத்தத்தை யுச்சரித்து மந்திரங் கைவந்தபின்பு அச்சத்தத்தைவிட் டப்பொருளையே மனதில் அனுசந்தானம்பண்ணிக்கொண்டு முறையே ஷிடவிம்சகயாவத்தையடைந்து பிரார்ப்தமென்கிற கருமத்தால் நேரிடுகிற காரியங்களைச்செய்து நுகர்கையறியாமற்செய்துகொண்டு சத்தார்த்தங்களையும்விட் டறிவுமயமாயேயிருத்தல் - சித்திரதாரணை.

தாளம்-௯ - அரிதாளம்-அருமதாளம்-சமதாளம்-சயதாளம்-சித்திரதாளம்-துருவதாளம்-நிவிர்த்ததாளம்-படிமதாளம்-விடதாளம் இவையே நவசந்திதாளம் என்பர்.

ஒன்பதின்றொகை - முற்றுப்பெற்றது.

௮௲ தொகை-௰௭.

# பதின்றொகை

அங்கம்-ம - மலை-யாறு-நாடு-ஊர்-மாலை-பரி-கரி-முரசு-கொடி-செங்கோல்; இவை-தசாங்கமெனப்படும்.

அபராதம்-ம - அரசனாணைகடத்தல்-பெண்கொலைசெய்தல்-வருணங்கலத்தல்-அடலவன்மனைவியைச்சேர்தல்-திருடல்-கணவனின்றிக்கருத்தாங்கல்-சொற்கொடுமை-தண்டக்கொடுமை-சொல்லத்தகாதசொற்சொல்லுதல்-கருவழித்தல்

அருச்சிக்குமலர்-ம - மல்லிகை-முல்லை-இருவாட்சி-தும்பை-புன்னை-பொலனறை-மந்தாரை-பிச்சி-ஊமத்தை-வெள்ளெருக்கு.

அருச்சிக்குப்பத்திரம்-ம - வில்வம்-திருநீற்றுப்பத்திரிகை-கொன்றை-ஆத்தி-துளபம்-நொச்சி-இருவாட்சி-சிவகரந்தை-மருகுருந்து.

உட்கரணகாரியம்-ம-மனதிற்குருவம்-பற்றல்-புத்திக்குருவம்-நிச்சயித்தல்; ஆங்காரத்திற்குருவம் எழுப்புதல், சித்தத்திற்குருவம்-சிந்தித்தல்;-இவைநான்கிற்குமுறையே-கருடம்-மற்கடம்-பித்து-மதக்கரியரு

ம்பு; இவற்றிற்குச்சுபாயம்-எரி கொள்ளி
கறங்குபோல் வினாதல்;- இவற்றிற்குக்கு
ணம் - பிடித்ததுவிடாமை;-இவற்றிற்கு
விசேடம் - ஆத்துமாவினிச்சைசெல்லுமு
ன்னே தாமுந்திச்செல்வது; இவற்றிற்கு
வியாத்தி ஆத்துமதத்துவமளவுஞ்செல்லல்;
இவற்றிற்குவியாபகம் - ஆத்துமபோதமளா
வும்;-இவற்றின் நிறம் தத்தம் தொழிற்
பேதியமை -இந் நான்கிற்குந் தெரிசனம்
சட்டெழாக்காண்டல்;- இவை நான்கிற்குஞ்
சத்திதானுஞ்செயல்புரியாவெனவறிதல்.

உரிப்பொருள்-ரு - புணர்தல்-புணர்தனிமித்
தம்-பிரிதல் - பிரிதனிமித்தம் - இருத்தல்-
இருத்தனிமித்தம் - ஊடல் - ஊடனிமித்
தம்-இரங்கல்-இரங்கனிமித்தம்.

எச்சம்- ௰ - பெயரெச்சம் வினையெச்சம்-உம்
மையெச்சம் - சொல்லெச்சம் - பிரிப்பெச்
சம்-எனவெனெச்சம் - ஒழியிசையெச்சம்-
எதிர்மறையெச்சம் -இசையெச்சம்-குறிப்
பெச்சம்.

ஸலாதிகாரியம்-௰ - ஆத்துமாவுக்குச் சூக்கும
உடலாகை-உரூபம், ஆன்மாவுக்கு இச்சா
ஞானகிரிகளாய்ப்பதிந்து நிற்றல் - சுரூபம்,
ஆன்மாவுக்குச் சுத்தாசுத்தமென நிற்றல்-

சுபாயம், போகத்தைத்தரும் பாக்கிய மாகை குணம், மாயையளவுங் காரியப்பட்டுநிற்றல்-வியாத்தி, ஆணவமலத் தளவு நிற்றல் வியாபகம், முக்குணமளவும் பொருந்தல் குணம், அறிவுமறியாமையுமொத்து நிற்றல் நிறம், இவை சடமெனக்காண்டல் தரிசனம், சுத்தியிலடங்குதல் சுத்தி.

கலிப்பாவகை-௰ அம்போதரங்கவொத்தாழிசைக்கலிப்பா - கலிவெண்பா சிஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா தரவுகொச்சகக்கலிப்பா தரவிணைக்கொச்சகக்கலிப்பா நேரிசையொத்தாழிசைக்கலிப்பா பஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா - மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா - வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா - வெண்கலிப்பா.

காமத்தோர்க்குப்பகைப்பொருள்-௰ முத்து களபம் பனிநீர்-பூங்கொத்து- குளிர்-பஞ்சணை- கடல் கங்குல் - மாலை - கதலி;- இவை பெண்பாற்குரியன.

கைக்கிளைப் பெருந்திணை ௰-காதல்-வள்ளி சுரநடை-முதுபாலை-தாபதம்- தபுதாரம் குற்றிசை குறுங்கலி- இல்லாண்முல்லை-பாசறைமுல்லை,

கடையின் தசாங்கம்-௰-அரசன்-பிராட்டிவா

கன் சபாசதர்கள்;- மிருதி - கணகன் லேககர் பொன் - நெருப்பு - நீர் - சாத்தியபாலன்; இவற்றிற்குமுறையே அங்கமுந்தண்டமும்;- அரசன் சிரம், - பொருட்டண்டமுமுடற்றண்டமுஞ்செய்வித்தல், பிராட்டுவிவாகன் - முகம், - உபயவாதிகளுடைய வாய்மொழிகேட்டாராய்ந்து அரசனுக்குரைத்தலும் வாக்குத்தண்டமு மதிகாரதண்டமுஞ்செய்தல், சபாசதர்கள் - தோள், - காரியபரிசோதனைஞ்செய்தல், மிருதி - கை, - செய்முறைந்தானமும் தண்டமுங்காட்டல், - கணகன் - லேககர் - கணைக்கால்கள், - திரவியத்தைதயெண்ணிக்கொள்ளுதலும் வாக்குமூலமுதலானவைகளை யெழுதுதலுஞ்செய்தல், பொன் - நெருப்பு நீர் - கணகன்;- பிரமாணங்களாயிருத்தல், சாத்தியபாலன் - பாதம், - சான்றினர் சபையினர் உபயவாதியர் இவர்களையழைத்தலும் சாத்தியப்பொருளைக்காத்தலுஞ்செய்தல்.

சார்பெழுத்து ௰ - உயிர்மெய் - குறுகாதவாய்தம் - உயிரளபெடை - ஒற்றளபெடை - குற்றியலிகரம் - குற்றியலுகரம் - ஐகாரக்குறுக்கம் ஔகாரக்குறுக்கம் மகரக்குறுக்கம் - ஆய்தக்குறுக்கம்.

சிற்பத்தொழிற்கருப்பு-ய - கருங்கல்-உலோ
கம் செங்கல்-மரம்-மண் - சுதை - தந்தம்.
வண்ணம்-கண்டச்சருக்கரை-மெழுகு.

சுத்தத்துவகாரியம்-ய உருபம்-சுருபம் - சுபா
யம் விசேடம்-குணம் - வியாத்தி-வியாபக
ம்-நிறம் தரிசனம் சுத்தி; நின்மலமாகைஉ
ருபம் (விஞ்ஞானகலர்க்கும் பிரளயாகலர்
க்கும்;) தனுகாதிகளைக்கொடுத்தல்-சுருப
ம், அநாதியாயழியா திருத்தல்- சுபாயம், சி
வருபங்கட்கிருப்பிடமாகை விசேடம், சு
த்தமாயையு மதன்காரியங்களையு நடத்தல்
குணம், விந்து அளவாய்த்தோற்றல் வியா
த்தி, சிவருபமளவுமிடமாயிருத்தல்-வியா
பகம், படிகப்போற்றோன்றல்-நிறம். சிவச
த்தியறிவித்தாலன்றி யறியாதெனக்காண்ட
ல்-தரிசனம், இவற்றைநீங்கிநிற்பது சுத்தி.

செய்யுட்குற்றம்-ய - குன்றக்கூறல்-கூறியது
கூறல்-மிகைபடக்கூறல்- மாறுகொளக்கூ
றல்-வழூச்சொற்புணர்த்தல் - மயங்கவைத்
தல் வெற்றெனத்தொடுத்தல் - மற்றொன்
றுவிரித்தல் - சென்றுதேய்ந்திறுதல்-நின்
றுபயனின்மை.

(௰௩)

செய்யுட்குரியவழகு-௰ - சுருங்கச்சொல்லல்-விளங்கவைத்தல் - நவின்றோர்க்கினிமை-நன்மொழிபுணர்த்தல்-ஓசையுடைமை ஆழமுடைத்தாதல் - முறையின்வைப்பு-உலகமலையாமை - விழுமியதுபயத்தல்-விளங்குதாரணத்ததாகுதல்.

சேனைத்தொகை-௰-பதாதி-சேனாமுகம்-குமுதம்-கணகம்-வாகினி-பிரளயம்-சமுத்திரம்-சங்கம்-அநிகம்-அக்கோணி;-அவையாவன யானை-க-தேர்-க-குதிரை-௩-காலாள்-௫-இவைகூடியது - பதாதி, பதாதிமும்மடிகொண்டது-சேனாமுகம், சேனாமுகம்மும்மடி-குமுதம், குமுதம்மும்மடி-கணகம், கணகமும்மடி-வாகினி, வாகினிமும்மடி-பிரளயம், பிரளயமும்மடி-சமுத்திரம், சமுத்திரம்மும்மடி-சங்கம், சங்கம்மும்மடி-அநிகம், அநிகம்மும்மடி-அக்கோணி.

ஞானேந்திரியகாரியம்-௰ - உருபம்-சுருபம்-சுபாபம்-விசேடம்-குணம்-வியாத்தி-வியாபகம்-நிறம் - தரிசனம் - சத்தி;- இவற்றிற்குச் சத்தாதியைந்தும்- உருபம், விடயங்களையறிவிக்குந் தானமாய்நிற்பது - சுருபம், ஐந்துநிமிஷத்துக்குள் ஆன்மாவுக்கறிவிப்பது - சுபாபம், கண்டவற்றைக்கொ

ண்டு காணப்படாதவற்றையும் கண்டது
போலறிவிப்பது - விசேடம், இச்சைகொ
ளுதல் - குணம், தான் தனக்குச் செல்லு
மெல்லையையறிவிப்பது - வியாத்தி, சந்தா
திகள்செல்லுமிடமெல்லாம் உடம்பைவி
ட்டுநீங்காதிருந்து செல்லுகைவியாபக
ம், அடிபோற்றோன்றல் - நிறம், ஞானேந்
திரியமெனப்பட்டும் மாயையிற்றோற்றிய
தத்துவமாதலால் இவை சடமெனவறிவது
தரிசனம், ஞானேந்திரியமெனல - ஆன்மா
வறிதலுங் கருவியென்றவற்றை நீங்குதலு
ம் - சுத்தி.

தாளப்பிரமாணம் ௰ - காலம் - மார்க்கம் - கிரியை - அங்கம் - கிரகம் - சாதி - கலை - இலயை - யதி - பிரத்தாரம்; இவையே தாளதசப்பிரமாணமென்ப; - இவற்றுட் காலப்பிரமாணம் ௰ - அவையாவன - கணம் - இலவம் - காட்டை - நிமிடம் - துடி - துரிதம் - இலகு - குரு - புலு - காகபதம்.

தானம் - ௰ - அன்னதானம் - வஸ்திரதானம் - கோதானம் - பூதானம் - கன்னிகாதானம் - தருமதானம் - யாத்திராதானம் - புத்திரதானம் - உடற்றானம் - பொருட்டானம் - ஆவியையுஞ்சேர்த்து பதினொன்றென்பர்,

திருமாலவதாரம்-௰-மச்சம் கூர்மம்-வராகம் நரசிங்கம் வாமனன்-பரசிராமன்-இராமன்-பலபத்திரன்-கண்ணன்-கற்கி;-இவற்றிற்குக்காரணம் வேதத்தைத்திருடிக் கடலிலொளித்த (சோமுகாசுரனென்னுமிராக்கதனைக்)கொல்ல-மச்சாவதாரம், கடலைக்கடையும்போது (சாய்ந்தமலையைத்) தாங்கக் - கூர்மாவதாரம், பூமியைப்பாயாக (இரணியாக்கன் சுருட்டினதை) விரிக்கவு மவனைக்கொல்லவும்-வராகாவதாரம்;-இப்பழிவாங்கச் சருவதேவவணக்கம் விலக்கின வவன்றம்பி(யிரணியகசிபனைக்) கொல்ல-நரசிங்காவதாரம்;-இந்நான் கவதாரத்திற்குந் தாயில்லை, (மாவலியை)யடக்கக்காசிபனுந்திதியுந் தந்தைதாயாக-வாமனாவதாரம், அரசராற்றாழ்த்தப்பட்ட (பார்ப்பார்நிமித்த மவ் வரசனைக்)கொல்லச் சமதக்கினியு மிரேணுகையுந் தந்தைதாயாகப்-பரசிராமாவதாரம், இராவணன் முதலிய (விராக்கதரைக்)கொல்லத் தசரதருங் கௌசலையுந் தந்தைதாயாக-இராமாவதாரம், பிலரம்பன் முதல்(பலவிராக்கதரைக்)கொல்ல வசுதேவனுந் தேவகியு மரோசணியுந் தந்தைதாயாக - பலபத்திராமாவதாரம்

(பாரதநடத்த) வசுதேவனுந் தேவகியுந்த
ந்தை தாயாகக் - கண்ணனவதாரம், உலகங்க
ளைச் சங்கரிக்கக் - கற்கியவதாரம்.

தீக்குணம் - ௰ - பொய்சொல்லல் - கோட்சொல்
கோபித்துச்சொல்லல் - பயனில்சொல்லல் -
இந்நான்கும் வாக்கின் றீக்குணம் - களவா
டப்போதல் - வறிதேதொழில்செயல் - கொ
லைசெய்தல் இம்மூன்றுங்காயத் தீக்குணம் -
கொலைநினைக்கை - காமப்பற்று - இச்சை - இ
ம்மூன்று மனத்தீக்குணம்.

துவர் - ௰ - நாவல் கடுக்காய் - நெல்லிக்காய் -
தான்றிக்காய் - ஆல் - அரசு - அத்தி - இத்தி -
முத்தக்காசு - மாந்தளிர்.

தூது - ௰ - அன்னம் - மயில் - குயில் கிளி - மேக
ம் - பூவை - பாங்கி - வண்டு - தென்றல் - நாரை.

நற்குணம் - ௰ - மெய்புரை, நல்வார்த்தை - இ
னியவைகூறல் - பயன்படுசொல் இந்நான்
கும்வாக்கினற்குணம் - கோயில்வலம்வரல்
தவம்புரிதல் - தானஞ்செய்தல் இம்மூன்
றுங் காயநற்குணம் - அருணினைவு - ஆசை
யறுத்தல் - தவப்பற்று - இம்மூன்று மன
நற்குணம்.

நாடகம் - ௰ - வாரம் - பராமிருகம் - தயமித்தம்
ஆரட்டுசம் - பாரகம் வீதி சல்லாபம் உத்

இரட்டாங்கம்-விரசனனம் வியாயோகம்.

நாடி - ௰ - இடை-பிங்கலை-சுழிமுனை-காந்தாரி-அத்தி-சிகுவை-அலம்புடை-புருடன்-குகு-சங்கினி அவையாவன சுழிமுனை ஆதாரயாறினு மூடுருவி நிற்பது. இடைபிங்கலை இரண்டுங்கத்திரிகை கால்போற் பின்னிநிற்பன- காந்தாரிநாபியிற் றோன்றிச் சத்தமெழுக்கும் எழுநாடியாகக் கண்டத்துறுவது - அத்தி-சிகுவை இரண்டும்பத்துநாடியுற்றுக் கண்ணினிற்பன- அலம்புடை-புருடன் இரண்டும் செவியுணூற்றிருபது நரம்புற்றிருப்பன- குகு நாபியுறைந்து குய்யம்பற்றிநிற்பது- சங்கினி-உபத்தத்தைப் பற்றிநிற்பது.

பஞ்சபுலன்களின் காரியம் - ௰ - உருபம்-சுருபம்-சுயாபம்-விசேடம்-வியாத்தி-வியாபகம்-குணம்-நிறம்-தெரிசனம்-சத்தி-அவற்றுள், பஞ்சபூதவழியிற் காண்டல் - உருபம், வாறுதியாலே தன்றன்மை தோற்றப்படுதல் -சுருபம், ஓரறிவுமுதலை யறிவனவும் அதுவதுவாய் நிற்றல்-சுயாபம், தன்னெல்லைக்குமேற்பட்டு நிற்பது-விசேடம், பஞ்சப்பொறிவழி யுண்டாதல்-வியாத்தம், பஞ்சப்பொறியைக் கூடிப் புறத்தினுள்ள

ரேஷம் சென்றறிவிக்கை - வியாயகம், புறக்கரணமாயற்புதே சுகதுக்கங்கட்கு மூலமாகை குணம், ஓசைமுதலைந் தாய்நிற்பது - நிறம், இவைபுறமறிவிக்குங் கருவியெனக்காண்டல் தெரிசனம், இவை கடமெனக்காண்டல் - சுத்தி.

மகளிரான்மலருமரம் - ௰ - மகிழமரஞ் சுவைக்க - எழிலைப்பாலைமரம் நட்புற - பாதிரிமரம் நிந்திக்க முல்லைக்கொடி நகைக்க - புன்னையாட - குராவணைக்க - அசோகுதைக்க குருக்கத்திபாட - மா பார்க்க - சண்பக - நிழல்படத்தளிர்த்துப் பூப்பனவாம்.

மூலம் - ௰ - கண்டங்கத்திரிவேர் - சிறுவழுதுணைவேர் - சிறுமல்லிவேர் - நெருஞ்சிவேர் - பெருமல்லிவேர்;- இவ்வைந்துஞ் - சிறுபஞ்சமூலமென்ப, வில்வவேர் - பெருங்குமிழம்வேர் - தழுதாழைவேர் - பாதிரிவேர் - வாகைவேர்;- இவ்வைந்தும் பெரும்பஞ்சமூலம்.

வாயு - ௰ - பிராணன் - அபானன் - சமானன் - உதானன் - வியானன்;- இவ்வைந்துந் தேகவாயு, நாகன் - கூர்மன் - கிருகரன் - தேவதத்தன் - தனஞ்செயன்;- இவ் வைந்தும் பூதவாயு;- இவற்று ளிதயத் தியங்குவது - பிராணன், உச்சத் தலத்திலடை நிற்பது - அபா

ளன், கந்தரக்குழியிற் சந்திடைநிற்பது-சமானன், நாபியினிற்பது-உதானன் சரீரமுழுதும் வியாபித்திருப்பது - வியானன், நீட்டலும் முடக்கலும் விளக்கலும்-நாகன், உரோமம்புளகித்திமைப்பது-கூர்மன், முகத்திடைநின்றுதும்மலுஞ் சினமும் வெம்மையும் விளைப்பது-கிருதரன், ஓட்டமும் இளைப்பும் வியர்த்தலும் தேவதத்தன், உயிர்போகினும் போகாதுடவினைவிக்கித் தலைகிழித் தகல்வது - தனஞ்செயன்.

வேளாண்மை மாந்தரியல்பு ௰ - ஆணைவழிநிற்றல்-அழிந்தோரைநிறுத்தல் கைக்கடனாற்றல் - கசிவகத்துண்மை - ஒக்கல்போற்றல் ஓவாமுயற்சி-மன்னிறைதருதல்-ஒற்றுமைகோடல்-விருந்துபுறந்தருதல் - திருந்தியவொழுக்கம்.

கவைதருப்பம் - ௰ செறிவு தெளிவு சமநிலை - இன்பம் - ஒழுகிசை-உதாரம் - உயத்தலில்-பொருண்மை-காந்தம் - வலி - சமாதி.

பதின்றொகைமுற்றுப்பெற்றது.

ஆகத்தொகை - ௩௩.

# பதினொருதொகை.

ஆயிர்வெழுத்து - ௰௧ - அ - இ - உ - எ - க - ச - த - ந - ப - ம - வ.

உருத்திரர் - ௰௧ - மாதேவன் - அரன் - உருத்திரன் - சங்கரன் - நீலலோகிதன் - ஈசானன் - விசயன் - வீமதேவன் - பவோற்பவன் - கபாலி - சௌமியன்.

கரணம் ௰௧ - பவம் - பாலவம் - சவுலவம் - தைதுலை - கரசி - வணிசி - பத்திரவம் - சகுனி - சதுர்ப்பாதம் - நாகவம் - கிமிஸ்த்திக்கினம்.

அகுணவிக்கினம் - ௰௧ - பொருள்விரும்பல் - பொருள்விரும்பியிரத்தல் - போசவிருப்பம் - கோபம் - வேதனை - உலோபம் - பிறர்பொருளைக்கெடுத்தல் - கொலை - பிறர்க்கொவ்வாக்குணம் - துர்ச்சனசேர்வை - பிறர்மனைநயத்தல்.

பதினொருதொகை முற்றுப்பெற்றது.

ஆக தொகை - ௪.

# பன்னிருதொகை.

அகத்திணை - ௰௨ - பொதுவகத்திணை - வகையகத்திணை - சிறப்பகத்திணை - உவமையகத்திணை - புறநிலையகத்திணை - எதிர்நிலையகத்திணை - கருவியகத்திணை - காரியவகத்திணை - காரகவகத்திணை - முன்னவையகத்திணை - பின்னவையகத்திணை - - இயல்பகத்திணை.

ஆழ்வாராதிகள் - ௰௨ - பொய்கையாழ்வார் - பூதத்தாழ்வார் - பேயாழ்வார் - திருமழிசையாழ்வார் - நம்மாழ்வார் - மதுரகவியாழ்வார் - குலசேகராழ்வார் - பட்டர்பிரானாழ்வார் - சூடிக்கொடுத்த நாச்சியார் - தொண்டரடிப்பொடியாழ்வார் - திருப்பாணாழ்வார் - திருமங்கையாழ்வார்.

இராசி - ௰௨ - மேடம் - இடபம் - மிதுனம் - கற்கடகம் - சிங்கம் - கன்னி - துலாம் - விரிச்சிகம் - தனுசு மகரம் - கும்பம் - மீனம் - இவற்றுள்; முன்னாறுமுத்தராயணராசி - பின்னாறுந் தக்ஷிணாயனராசி - அன்றியும் - முதன்மூன்றுங்கடைமூன்றுமேறும் - இடையாறுமிறங்குமிராசி,

உபசாரம் - ௰௨ - வரவழைத்தல்-வந்தனஞ்செயல்-கைகால்கழுகநீர்தரல்- தவிசளித்தல்-நீராட்டல்- இரந்துவட்டல்- அமுதமிடல்-அடைகாய்தரல்-செந்தமபூசல்-புட்பஞ்சூடல்- சாய்மரம-விசல்-திபங்காட்டல்.

உயிர்வேதனை-௰௨- அனல்-சீதம் -அசனி-புனல்-வாதம்-ஆயுதம்-விடம்-மருந்து-பசி - தாகம் - பிணி - முனிவறுமை.

கொடுந்தமிழ்நாடு-௰௨ல்-தமிழ்நாடுகாண்க.

சீர்-௰௨-சிறப்புடைநேரீற்றியற்சீர் - சிறப்பில்நேரீற்றியற்சீர்-சிறப்புடை நிரையீற்றியற்சீர் - சிறப்பில் நிரையீற்றியற்சீர் - சிறப்புடைநேரீற்றுரிச்சீர் - சிறப்பில்நேரீற்றுரிச்சீர்-சிறப்புடைநிரை யீற்றுரிச்சீர்-சிறப்பில் நிரை யீற்றுரிச்சீர் - சிறப்புடை நேரீற்றுப்பொதுச்சீர்- சிறப்பில்நேரீற்றுப்பொதுச்சீர்-சிறப்புடைநிரை யீற்றுப்பொதுச்சீர்-சிறப்பில்நிரையீற்றுப்பொதுச்சீர்.

சூரியர்-௰௨-தாத்துரு-சக்கரன்-அரியமன்-மித்திரன் - வருணன்-அஞ்சுமான் - இரணியன்-பகவான்திவச்சுவான்-பூடன்-சவித்திரு-துவட்டன் - இப்பெயர் -சித்திரைமாதம்-மேடவிராசியிற் புகுந்து- சூரியனுக்கு-முறையேசெல்லு மென்பர் - இவரேதுவாத

சாதித்தார்.

மாதம்-௰௨-சைத்திரம்-வைகாசம்-சேட்டம்-ஆசாடம் சிராவணம்-பாத்திரபதம்-ஆசுவ்சம்-கார்த்திகம்-மார்க்கசிரம்-புசியம்-மாகம்-பாற்குனம்-இவைமுறையே-சித்திரை வைகாசி-ஆனி-ஆடி-ஆவணி-புரட்டாசி ஐப்பசி-கார்த்திகை-மார்கழி-தை-மாசி-பங்குனி-இவற்றிற்குமுறையேயுரிய நட்சத்திரம்-சித்திரை விசாகம் மூலம் உத்திராடம்-அவிட்டம்-பூரட்டாதி-அச்சுவினி-கார்த்திகை-மிருகசீரிடம் பூசம்-மகம்-உத்திரம்.

---

பன்னிருதொகை-

முற்றுப்பெற்றது.

ஆ௨ தொகை-௬.

# பதின்மூன்றுதொகை

தமிழ்நாடு ௰௩ - செந்தமிழ்நாடொன்று - இ
ற்றிகல்லே - கருவூரின்கிழக்கு மருவூரின்
மேற்கு வைகையாற்றின்தெற்கு மருதயா
ற்றின்வடக்கு - இத்தனைச்சூழ்ந்தகொடுந்த
மிழ்நாடு - ௰௨ - தென்பாண்டி குட்டம
-குடம சற்கா வெண் பூழி பன்றி அருவா
அருவாவடதலை சீதம மலடு புனநாடு.
நஞ்செழுத்து ௰௫ - யா - யோ - ரா - சோ -
லா - லோ - ய் - ர் - ல். உயிரளபு - ஒற்ற
ளபு - மகரக்குறுக்கம் - ஆய்தக்குறுக்கம்.

பதின்மூன்றுதொகை

முற்றுப்பெற்றது.

அ௰ தொகை - ௨.

# பதினான்குதொகை

அல்வழிப்புணர்ச்சி - ௰௪ - வினைத்தொகை - பண்புத்தொகை - உவமைத்தொகை - உம்மைத் தொகை - அன்மொழித் தொகை - எழுவாய்த்தொடர் - விளித்தொடர் - தெரிநிலைவினைமுற்றுத்தொடர் - குறிப்புவினைமுற்றுத்தொடர் - பெயரெச்சத்தொடர் - வினையெச்சத்தொடர் - இடைச்சொற்றொடர் - உரிச்சொற்றொடர் - அடுக்குத்தொடர்.

உலகம் - ௰௪ - பூலோகம் - புவலோகம் - சனலோகம் - தபோலோகம் - மகாலோகம் - சத்தியலோகம் - இவையேழும் மேலுலகெனவும் அதலம் - விதலம் - சுதலம் - தராதலம் - இரசாதலம் - மகாதலம் - பாதாளம் - இவையேழுங் கீழுலகெனவும்படும்.

கருப்பொருள் - ௰௪ - தெய்வம் - தலைவர் - குடி - புள் - விலங்கு - ஊர் - நீர் - பூ - மரம் - உணா - பறை - யாழ் - பண் - தொழில், - இவற்றுட் குறிஞ்சிக்கருப்பொருள், - குமரன் - கானகநாடன் - கொடிச்சி - குறவர்குறத்தியர் - கிளி - மயில் - புலி - கரடி - யானை - சீயம் - சிறுகுடி - மலையருவி - குன்று - நீர் - வேங்கை - குறிஞ்சி

காந்தள் - சந்தனம் - தேக்கு - அகில் - அசோ
கு - புன்னை - மூங்கிலரிசி - தினை - குளநெல் - க
ருந்தினை - தொண்டகம் - குறிஞ்சியாழ் - குறி
ஞ்சிப்பண் - தினைவித்திடல் - தினைகாத்தல் -
தேனெடுத்தல் - கிழங்ககழ்தல் - அருவியாட
ல் - குன்றுநீராடல்; (பாலைக்கருப்பொருள்)
பத்திரை - விடலை - எயிற்றி - எயினர் - எயிற்றி
யர் - மறவர் - மறத்தியர் - புறா - பருந்து - கழு
கு - செந்நாய் - குறும்பூழ் - வறுங்கூவல் -
குரா - மரா - உழிஞை - பாலை - ஓமை - இருப்
பை - வழிப்பறி - கொள்ளையாடின - துடி -
பாலையாழ் - பஞ்சுரம் - வெஞ்சமம் - பகற்
கொள்ளை; (முல்லைக்கருப்பொருள்) திரு
மால் - அண்ணல் - கிழத்தி - இடையர் - இ
டைச்சியர் - கானங்கோழி - பசு - முயல் - பா
டி - குறுஞ்சுனை - கானியாறு - குல்லை - முல்லை
காந்தள் - பிடவம் - கொன்றை - காடா - குரு
ந்து - வரகு - சாமை - முதிரை - பம்பை - முல்
லையாழ் - சாதாரி - சாமை - வரகு - வித்திட்
டல் - களைகட்டல் - அரிதல் - கடாவிடல் - கொ
ன்றையங்குழலூதல் - மூவினமேய்த்தல் - ஏ
று தழுவல் - குரவையாடல் - கானியாறுகு
ளித்தல்; (மருதக்கருப்பொருள்) இந்தி
ரன் - கிழவன் - கிழத்தி - உழவர் - உழத்தியர்

கொக்கு-அன்றில்-நாரை-அன்னம்-பெரு
நாரை, சம்பங்கோழி-கொய்யடிநாரை-தா
ரா-எருமை-நீர்நாய்-பேரூர்-மூதூர்-யா
று-கிணறு-குளம்-தாமரை-கழுநீர்-குவ
ளை-காஞ்சி-வஞ்சி-மருதம், செந்நெல்-வெ
ண்ணெல்-முழவம்-மருதயாழ்-மருதப்
பண்-விழாக்கொள்ளல்-களைகட்டல்-அரி
தல்-கடாவிடல்-குளங்குடைதல்-புதுநீரா
டல்; (நெய்தற்கருப்பொருள்) வருணன்
பரதவன்-பரத்தி-நுளையர்-பரதர்-பரத்தி
யர்-அளவர்-அளத்தியர்-கடற்காக்கை-சு
றவம்-பாக்கம்-உவர்நீர்க்கேணி-நெய்த
ல்-கைதை-முண்டகம்-அடம்பு-கண்ட
ல்-புன்னை-ஞாழல்-புலவு-உப்பு-விலையி
ற்பெற்றன-மீன்கோட்பறை-சாப்பறை-
விளரி-செவ்வழி-மீனுப்புப்படுத்தல்-மீனு
ணக்கல்-அலைவிற்றல்-புள்ளோப்பல்-
கடலாடல்;

தூயாவிருத்தி-௧௪-களாபடாணம்-விற்காகார
ம்-நிற்கத்தண்டமை-சந்தேகவாரணம்-
அன்னியகுணசகனம்-பரதிருதானயோ
கம், பரார்த்த தேவப்பிரார்த்திதம்-ஆ
சையாவன முறையே கல்வியிற்றல்-தூய
ரீர்த்தல்-தண்டத்தினீக்கல்-ஐயந்தேற்று

ல்-பிறர்குணத் தழுக்காறின்றிப் பொறுத்தல்-பிறராற்செய்யப்படுந் தீமைமறந்துநன்றி நினைத்தல்-பிறர்க்கு வேண்டித்தெய்வம் வழிபடல்- இவையுயிர்க்கேழுபகாரம் அன்றியுஞ் சத்தாங் கோபகாரம், அன்னம்-பானம் -அம்பரம் மந்திரம-தாசபாலஞ் காராமயந் திரிதயமோசனம் - சவசசேமம்;-ஆவையேயுணவு பானம் உடை-இடம்-அடிமைகாத்தல் - சிறைநோய் மூன்றுந்திர்த்தல்- பிணமடக்கல் - இவையுடற்கேழுபகாரம்.

முகம்-௰௪- அஞ்சிதம்-அதோமுகம்-ஆகம்பிதம்-பிரகம்பிதம் - ஆலோலிதம்- உலோலிதம்-உத்துவாகிதம் சமம்-சௌந்தரம்-துதம்-விதுதம்-பராவிருத்தம்-பரிவாகிதம்-திரச்சீனம்-இவற்றுள் வருத்தமாற்றுதிருதோண்மேற்றலை சாய்த்த லஞ்சிதமுகம்; தலைகுனிந்து பார்த்த லதோமுகம்; சம்மதித்தற்குமேல் கீழ்தலை யாட்டலாகம்பிதமுகம், அதிசயத்தாற் சிறிதாய்த் தலையாட்டல் பிரகம்பிதமுகம், ஆசையான் மலர்ந்தமுகமாய் ஒருவனை யழைத்த லாலோ

விதமுகம், சிந்தையாலொரு தோண்மேற் றலைசாய்த்தல் லோலிதமுகம். தலையண்ணாந்துபார்த்தலுத்துவாகிதமுகம், இப்பாணிப்பதுபோல தலையசையாதிருத்தல் சமமுகம், பூரித்தமகிழ்ச்சியான் மலர்ந்தமுகங்காட்டல் சௌந்தரமுகம், வேண்டாத்திடம் வலம்தலையாட்டலே துதமுகம், உணவுண்முதலிய வேண்டாமைக் குத்தலைநடுக்கலே விதுதமுகம், வேண்டாததற்குமுகந்திருட்டலே பராவிருத்தமுகம், மதத்தாலொருபுறஞ் சாய்ந்தகலையைச்சிறிதாய்ச் சுற்றியாட்டல் பரிவாகித்முகம், நாணத்தாற்றலையாட்டலேதிரச்சீனமுகம்.

வித்தைகள்-௰௪. வேதம்-௪, வேதாங்கம்-௬, மீமாஞ்சை தருக்கம் புராணம் தருமநூலாகிய உபாங்கம்-௪.

---

பதிமூன்றுதொகை.

முற்றுப்பெற்றது.

ஆறுதொகைகள்.

# பதினைந்துதொகை.

அடிமையர்விளக்கம் - ௰௫ - வீட்டடிமை - விலையடிமை - அடையடிமை - தாயவடிமை - அருகாலபிருதன் - இட்டடிமை - கடன்மீளடிமை - போரிற்கிடைத்தவன் - பணசிதன் - தானடிமை - துறவுகெட்டவடிமை - செய்யப்பட்டவடிமை - சோற்றடிமை - வடவாபிருதன் - கொள்ளக்கூடாவடிமை;- இவை வீட்டடியாளிடத்திற்பிறந்தவன் - வீட்டடிமை;- விலையாற்கொள்ளப்பட்டவன் - விலையடிமை;- தானம்வாங்குதல்முதலியவற்றாலடையப்பட்டவன் - அடையடிமை;- விபாகத்திலேபாகப்படிவந்தவன் - தாயவடிமை;- கொடுமையானகாலத்திற் காக்கப்பட்டவன் - அருகாலபிருதன்;- தனிகனிடத்தி லீடாகவைக்கப்பட்டவன் - இட்டடிமை;- தனதுகடனைத்தீர்த்ததற்பொருட்டடிமையானவன் - கடன்மீளடிமை;- போரிலே வென்றதனாற்கொள்ளப்பட்டவன் - போரிற்கிடைத்தவன்;- அடிமையாகுகையைத்தானே ஒட்டமாகச்செய்யப்பட்ட சூதுமுதலியவற்றால் வெல்லப்பட்டவன் - பணசிதன்;- நானுனக்கடிமையானேனென்றுவந்தவன் - தானடிமை;- துறவினிலை தவறியடிமையானவன் - துறவு

கெட்டவடிமை;- நீபிவ்வளவுகால மெனக் கடிமையாகப் பண்ணப்பட்டவன் - செய் யப்பட்டவடிமை;- தானுண்டசோற்றின் விலைக்காகக் காலவளவை யேற்படுத்தி வே லைசெய்பவன் - சோற்றடிமை;- ஒருவன் வி ட்டடியாளைக் கலியாணம்பண்ணிக்கொண் டு அவளுடைய எசமானனுக் கடிமையான வன் - வடவாபிருதன்;- அந்தணனை அந்த ணனுமடிமையாகக்கொள்ளுதல் கூடா து--சத்திரியனும்வைசியனும்வேறுகதியில் லாத காலத்திலடிமையாகலாம்- அனுலோ மக்கிரமத்திலே யடிமையாகலாம்- கொள் ளக்கூடாதடிமை.

உருவகம்-௰௫ தொகை-விரி-தொகைவிரி-ஓ ரையடு ஓரையின்மை-வியநிலை-சிறப்பு-விரு ப்பம்-சமாதானம்-உருவகம்-ஏகம்-அனே காங்கம் - முற்று - அவயவம் - அவயவி.

சிட்லட்சணம்-௰௫-கலையறிவு-தவம்-ஒழுக்கம் அன்பு-கிருபை-ஆசாரவுபசாரம் பொறை சத்தியம்-புலான்மறுப்பு-சற்சனசேர்வை தேவபத்தி சற்குணம் -கோடாமை-அழுக் காறுமை - தேவதாசர்மே லன்புடைமை.

திதி - ௰௫- பிரதமை விதியை -திரிதியை- சது ர்த்தி-பஞ்சமி-சட்டி - சத்தமி- அட்டமி - நவமி - தசமி-ஏகாதசி-துவாதசி திரயோ

தசி-சதுர்த்தசி-அமாவாசி;-இவற்றுள்-சுக்கிலபக்ஷத்திற்சுத்தமென்றும் கிருஷ்ணபக்ஷத்திற் பகுளமென்றுங்கூட்டுக பதினைந்தாந் திதியாவது சுக்கிலபக்ஷத்திற்குப்பௌரணமி கிருஷ்ணபக்ஷத்திற்கு-அமாவாசியை, இப்பதினைந்தினுள் முற்பக்கந் தொடங்கி மூன்றுவட்டமாசவருகிற் பிரதமை- சட்டி - ஏகாதசிக்கு (நந்தை) துதியை சத்தமி துவாதசிக்குப் (பத்திரை) திரிதியை அட்டமி திரையோதசிக்குச் (சயை) சதுர்த்தி நவமி சதுர்த்தசிக்கு (இரித்தை) பஞ்சமி தசமி பௌர்ணமி, அல்லது அமாவாசியைக்கு (பூரணை) யென்றுமாம்.

திதிபுண்ணியகாலம் ௰௫- யுகாதியாட்டிமை-பானுவிதியை-அக்ஷய திரிதியை-விநாயக சதுர்த்தி-கருடஞ்சமி-ஸ்கந்தசட்டி-ரதசத்தமி-கோகுலாட்டமி-மகாநவமி விசயதசமி வைகுண்டேகாதசி-கோதுவாதசி-சனித்திரயோதசி அநந்தசதுர்த்தசி-மாளயமாவாசியை.

திருமாலவதாரம் ௰௫-சனகன்-சனந்தனன்-சநாதன்-சனற்குமாரன்-நரநாராயணன்-கபிலன்-இடபன்-நாரதன்- அயக்கிரீபன்-தத்தாத்திரேயன்-மோகினி-யாகபதி-வியாதன்-தன்வந்திரி-பௌத்தன்.

பதினைந்துதொகை-முற்றுப்பெற்றது.

௰௬-தொகை.

# பதிற்றுத்தொகை.

